
சோதனை
பக். 06


பேச்சுக்கு தயார்
பக். 07


சம்பியன்
பக். 22


பக். 23


கூடிய வெப்பநிலை 33 °c
குறைந்த வெப்பநிலை 27 °c
வெப்பமான காலநிலை


# உதயன்

பக்கம் : 24
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 29 கதிர்: 088 வள்ளுவர் ஆண்டு: 2045 மாசி 10, சனி 22.02.2014


## 1 வாரத்தில் ரூ. 13 லட்சம் திருட்டு

யாழ்ப்பாணம், பெப். 22
யாழ்.குடாநாட்டில் கடந்த வாரம் பல்வேறு இடங்களில் இடம்பெற்ற கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவங்களில் நகைகள் உட்பட 13 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று நடந்த வாராந்த செய்தியாளர் சந்திப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.
யாழ்.பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி லோறன்ஸ் மற்றும் யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட விசேட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸ் பொறுப்பதிகாரி றொஹான் பீரிஸ் ஆகியோர் இந்தச் சந்திப்பை நடத்தினர்.
இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-
கொக்குவிலில் இரவு நேரம் வீடு புகுந்து 2 லட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான

21 ஆம் பக்கம் பார்க்க

# நவிப்பிள்ளை அறிக்கையை அடியொற்றியே தீர்மானம்

## அமெரிக்க அதிகாரி கூறுகிறார்

கொழும்பு,பெப்ரவரி 22
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டே இலங்கைக்கு எதிரான அமெரிக்கத் தீர்மானம் அமையும் என்று அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.
ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அறிக்கையில் இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணை உள்ளிட்ட பன்னிரண்டு முக்கிய பரிந்துரைகளை அவர் குறிப்பிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இவ்வாறானதொரு நிலையிலேயே அமெரிக்கா, தன்னால் இலங்கைக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்படும் பிரேரணையில் நவநீதம்பிள்ளையின் அறிக்கையை அடியொற்றியதாக இருக்கும் என்று தெரிவித்துள்ளது.
இது குறித்து கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்குக் கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர், நவநீதம்பிள்ளையின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள சில

> “ நவநீதம்பிள்ளையின் அறிக்கையில் இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணை உள்ளிட்ட பன்னிரண்டு முக்கிய பரிந்துரைகளை அவர் குறிப்பிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

21 ஆம் பக்கம் பார்க்க

# ஐ.நா. சபை தலைமையில் இலங்கை மீது விசாரணை

## மன்மோகனிடம் வலியுறுத்தியது தி.மு.க.

புதுடில்லி,பெப்.22
இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையில் சர்வதேச விசாரணை நடத்த இந்தியா ஆதரவு அளிக்க வேண்டும் எனவும், தற்போது இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்கள், ஊடகங்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பில் கண்காணிப்பதற்கு ஐ.நா. நடைமுறை ஒன்றை இலங்கையில் முன்னெடுக்கவேண்டும் என்றும் தி.மு.கவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் வலியுறுத்தியுள்ளனர்.
இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பில், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை நேற்று அவரது இல்லத்தில் தி.மு.கவினர் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.
எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவினால் இலங்கைக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்படும் தீர்மான வரைவை இந்தியா ஆதரிக்க வேண்டும்

21 ஆம் பக்கம் பார்க்க

## மன்னார் புதைகுழியில் புதையுண்டோருக்காக நாளை பிரார்த்தனை

மன்னார், பெப். 22
மன்னார் திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழியில் மனிதாபிமானமற்ற முறையில் படுகொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டவர்களுக்கான ஆத்ம சாந்திப் பிரார்த்தனை ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.
மன்னார் திருக்கேதீஸ்வரம் புனித பூமியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனிதப் புதைகுழியில் இருந்து இதுவரை 77 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.
இவர்கள் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.
புனிதம் அறியாதவர்களினால் ஏற்படுத்தப்பட்ட மனிதாபிமானமற்றதும், இறைபயமற்றதுமான இந்தச் செயலை வன்மையாகக் கண்டிப்பதாகத் திருக்கேதீஸ்வரம் ஆலய திருப்பணிச் சபை தெரிவித்துள்ளது.
இந்தப் புதைகுழியில் புதைக்கப்பட்டவர்களுக்கான ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், ஏகாதச 11 ரூத்ர ஹோம பிரார்த்தனையும் நடத்தி அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கப்படவுள்ளது.
இந்தப் பிரார்த்தனை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் இடம் பெறவுள்ளது.

21 ஆம் பக்கம் பார்க்க



முல்லைத்தீவு விசுவநாதர் ஆரம்பப் பாடசாலையில் நேற்று வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நடைபெற்றது. இதில் இடைவேளை நேரத்தின்போது விநோத உடை நிகழ் வுக்குப் பதிலாகப் பாடசாலையின் வளப் பற்றாக்குறை தொடர்பான பதாகைகளை தமது கைகளில் ஏந்தி வந்து விருந்தினர்கள், பார்வையாளர்களிடம் தமது பாடசாலையின் அவலங்களை வெளிப்படுத்தினார்கள் மாணவர்கள். (கு-18)

## ‘பேஸ்புக்’ தடைக்கு அரசு முயற்சி

கொழும்பு, பெப். 22
கடாபி, ஹொஸ்னி முபாரக் ஆகியோருக்கு எதிராக பேஸ்புக் ஊடாக பெரியதொரு எதிர்ப்பலை உருவாகியது போல

21 ஆம் பக்கம் பார்க்க

# உடுப்பிட்டி நலன்புரி நிலையத்திலிருந்து வெளியேறுமாறு இராணுவம் அழுத்தம்

## வலி.வடக்கு மக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,பெப்.22
தாம் இடம்பெயர்ந்து தங்கியுள்ள உடுப்பிட்டி நலன்புரி நிலையத்திலிருந்து தம்மை வெளியேறுமாறு இராணுவத்தினரும், அரச அதிகாரிகளும் தொடர்ச்சியாக வற்புறுத்தி வருவதாக அந்த முகாமில் உள்ள வலி.வடக்கு மக்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.
வலி.வடக்கில் சொந்தக் காணியில்லாதவர்களையே மாவை கலட்டியில் உள்ள அரச காணியில் குடியேறுமாறு நலன்புரி நிலைய மக்களுக்கு அறிவு

21 ஆம் பக்கம் பார்க்க

# 77



நேற்றைய மீட்புப் பணியின் போது

மன்னார், பெப். 22
மன்னார் திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழியில் நேற்று வெள்ளிக்கிழமையும் இரண்டு மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.
இவற்றுடன் சேர்த்து இதுவரை 77 மனித எலும்புக்கூடுகள் அங்கு எடுக்கப்பட்டுள்ளன.
மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் 28 ஆவது தடவையாக நேற்று வெள்ளிக்கிழமை குறித்த மனிதப் புதைகுழி தோண்டப்பட்டது. இதன்போதே இரண்டு எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.
அத்துடன் நேற்று 5 ரூபா நாணயம் போன்ற தடயப் பொருள் ஒன்றும் புதைகுழியில் கண்டு பிடிக்கப்பட்டது.
அநுராதபுரம் சட்ட வைத்திய நிபுணர் டி.எல். வைத்தியரட்ண தலைமையிலான குழுவினர் தோண்டும் பணியில் ஈடுபட்டனர்
அத்துடன் ஏற்கனவே கண்டு பிடிக்கப்பட்டுள்ள மனித எலும்புக்கூடுகளில் 9 எலும்புக் கூடுகள் நேற்று எடுக்கப்பட்டுப் பொதி செய்யப்பட்டு மன்

21 ஆம் பக்கம் பார்க்க

## செய்திகள்

### ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய பொதுக்கூட்டம்

வலி.வடக்கு, பெப் 22
வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவு பகிரங்க சேவைகள் ஓய்வூதியம் நம்பிக்கை நிதியச் சங்கத்தின் 13 ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கே. இராசவல்லவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக வலி.தெற்கு பிரதேச பிரதேச செயலர் மு.நந்தகோபாலன், உதவிப் பிரதேச செயலாளர் திருமதி உதயகுமார் யசோதா, கணக்காளர் எஸ்.லோகநாதன் ஆகியோர் கலந்துகொள்வர். (த-86)

# பயங்கரவாதிகளாகவே இன்னும் பார்க்கப்படுகின்றனர் தமிழர்கள்


## முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.22
இராணுவமே வடக்கின் சகல விடயங்களையும் கட்டுப்படுத்தி வைத்திருக்கின்றது. அவர்கள் இன்னமும் எங்களைப் பயங்கரவாதிகள் என்ற மனோநிலையிலேயே வைத்திருக்கின்றனர். ஆனால் நாங்கள் பயங்கரவாதிகள் இல்லை என்று வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், பி.பி.சி செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

'மக்கள் இறுதிக்கட்டப் போரில் பலவற்றை இழந்திருக்கின்றார்கள். அவர்களது உணர்வுகள் இறுதிக் கட்டப் போரில் நடந்தவை தொடர்பில் நீதியான விசாரணை தேவை என்றதாக இருக்கின்றது. எனவே கடந்த காலத்தை மறக்கச்செய்வதென்பது அவ்வளவு எளிதானதல்ல.

வடக்கில் இராணுவமே சகல விடயங்களையும் கட்டுப்படுத்துகின்றது. தற்போது இராணுவ முகாம்களை அகற்றியதாக இராணுவம் சொல்கின்றது. ஆனால் இராணுவ முகாம் அகற்றிய பகுதியில் சைக்கிளில் அவர்கள் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். தங்களது புலனாய்வுச் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர்.

அவ்வாறு அவர்கள் செய்வதன் எண்ணம், இன்னமும் பயங்கரவாதிகளின் பிரதேசத்தில் பணியாற்றுவதாக எண்ணித்தான். ஆனால் நாங்கள் பயங்கரவாதிகள் இல்லை' என்று முதலமைச்சர் குறிப்பிட்டார். (த-5)



மக்கள் இறுதிக்கட்டப் போரில் பலவற்றை இழந்திருக்கின்றார்கள். அவர்களது உணர்வுகள் இறுதிக் கட்டப் போரில் நடந்தவை தொடர்பில் நீதியான விசாரணை தேவை என்றதாக இருக்கின்றன. எனவே கடந்த காலத்தை மறக்கச் செய்வதென்பது அவ்வளவு எளிதானதல்ல.

## வடக்கு மேல்நீதிமன்ற நீதிபதியாக பிரேம்சங்கர் சத்தியப் பிரமாணம்

யாழ்ப்பாணம், பெப். 22
வடமாகாண மேல் நீதிமன்ற ஆணையாளராகக் கடமையாற்றிய அன்னலிங்கம் பிரேம்சங்கர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தொடக்கம் வடமாகாண மேல் நீதிமன்ற நீதிபதியாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் முன்னிலையில் நேற்றுமுன்தினம் அவர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

அத்துடன் யாழ். குடியியல் மேன் முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதிகளாக அன்னலிங்கம் பிரேம்சங்கர், முகமட் மக்கி ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அன்றைய தினமே இவர்கள் சத்தியப் பிரமாணமும் செய்து கொண்டனர்.

திருகோணமலை குடியியல் மேன் முறையீட்டு ஆணையாளராகக் கடமையாற்றிய மா.இளஞ்செழியன் கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டுச் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இவர்களுடன் டபிள்யு.பி.வெப் பிரதீப் ஹெட்டியாராச்சி, சுமுது பிறேமச்சந்திர ஆகியோரும் முறையே பொலனறுவை, திருகோணமலை குடியியல் மேன் முறையீட்டு மேல் நீதிமன்றம், அம்பாறை மேல் நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நியமனங்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவினால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் வழங்கப்பட்டுள்ளன. புதிய நீதிபதிகள் அனைவரும் பிரதம நீதியரசர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்தனர். (த-4)



நீதிபதி பிரேம் சங்கர்

## பிறருக்கு காயம் விளைவித்த 36 பேர் கடந்த வாரத்தில் கைது

யாழ்ப்பாணம், பெப்.22
யாழ்.குடாநாட்டில் பிறருக்கு அடித்துக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் கடந்த வாரம் 36 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித் த்னர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-
மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 12 பேரும், கத்தியால் குத்திக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் 2 பேரும், மோசடி செய்த குற்றச்சாட்டில் 2 பேரும், நட்டம் ஏற்படுத்திய குற்றச்சாட்டில் 4 பேரும், வீதியில் போக்குவரத்துக்கு இடையூறாகக் கல் மற்றும் மணல் குவித்து வைத்திருந்த குற்றச்சாட்டில் 2 பேரும், விபத்து ஏற்படுத்திய குற்றச்சாட்டில் 3 பேரும், அத்துமீறி வீடு புகுந்த குற்றச்சாட்டில் 2 பேரும், போக்குவரத்துக்கு இடையூறாகத் துணி வியாபாரம் செய்த குற்றச்சாட்டில் ஒருவரும், சந்தேகத்தில் 19 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் - என்றனர். (த-4)

### பட்டாசு வெடிப்பதால் பலருக்கும் சிரமங்கள்

சாவகச்சேரி, பெப்.22
சாவகச்சேரி நகரசபையினால் சாவகச்சேரி சந்திப் பகுதியில் பட்டாசு வெடிப்பது தடைசெய்யப்பட்ட போதிலும், அண்மை நாள்களாக மரண இறுதி ஊர்வலத்தில் செல்வோர் தடையினை மீறிப் பட்டாசுகளை வெடிக்க வைக்கின்றனர்.

சாவகச்சேரி நகர்ப் பகுதி சூழல் மாசடைதல் மற்றும் வர்த்தகர்கள், பொதுமக்களின் சுகாதாரம் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு சாவகச்சேரி சந்தியில் பட்டாசு வெடிப்பதற்குத் தடை விதித்து, குறித்த தடை உத்தரவு மூன்று மொழிகளிலும் எழுதப்பட்ட அறிவிப்புப் பலகையினையும் அந்தப் பகுதியில் நட்டு வைத்தனர்.

இந்தச் சந்திப் பகுதியில் இதுவரை காலமும் படையினரின் காவலரண் இருந்ததால் சந்தியில் பட்டாசு வெடிப்பதில்லை.

இந்த இடத்திலிருந்து படையினர் வெளியேறியதையடுத்து சந்தியில் கட்டுக் கணக்காக பட்டாசு வெடிக்க வைக்கப்படுகிறது. இதனால் எழும் புகை மற்றும் சத்தத்தினால் வர்த்தகர்களும் பொதுமக்களும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது. (த)

## முல்லைத்தீவு கடற்றொழில் சமாசத்துக்கு புதிய தலைவர்

முல்லைத்தீவு,பெப்.22
முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் புதிய தலைவராக அந்தோனிப் பிள்ளை மரியராசா தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சமாசம், மக்கள் மீள் குடியமர்வின் பின்னர் செயற்படத் தொடங்கியிருந்தாலும் இதுவரை காலமும் உரிய நிர்வாகம் இல்லாமையினால் பெரும் பின்னடைவுகளை எதிர்நோக்கியிருந்தது.

இந்த நிலையில் குறித்த சங்கத்துக்குரிய தலைவர் மற்றும் நிர்வாக உறுப்பினர்களைத் தேர்வு செய்வதற்கான தேர்தல் முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் தலைமையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதில் தலைவராக அந்தோனிப் பிள்ளை மரியராசா ஏகமனதாகத் தேர்வு செய்யப்பட்டார். அத்துடன் 6 நிர்வாக உறுப்பினர்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். (த-5)

## ரூ. 24 லட்சம் காசோலைகள் யாழில் கடந்த வாரம் மோசடி

யாழ்ப்பாணம், பெப் 22
யாழ்.குடாநாட்டில் 24 லட்சம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

5 லட்சம் ரூபா காசோலை மோசடி தொடர்பில் யாழ். அரசடிப் பகுதியில் உள்ள ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார். சம்பவம் தொடர்பில் கொக்குவில் பகுதியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

3 லட்சம் ரூபா காசோலை மோசடி தொடர்பில் நல்லூர் அரசடியைச் சேர்ந்த ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார். 4 லட்சம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி தொடர்பில் அரசடியைச் சேர்ந்த ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

7 லட்சம் ரூபா காசோலை மோசடி தொடர்பில் நல்லூரைச் சேர்ந்த ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார். 5 லட்சம் ரூபா காசோலை மோசடி தொடர்பில் யாழ்.நகர்ச் சேர்ந்த ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-4)

### வவுனியாவில் இரத்ததானம்

சாரணியத்தின் ஸ்தாபகர் பேடன் பவல் பிரபுவின் 157 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வவுனியா மாவட்ட ஜனாதிபதி சாரணர் சங்கமும் மாவட்ட திரிசாரண குழுவும் இணைந்து நடத்தும் இரத்ததான நிகழ்வு இன்று காலை 8.30 மணிக்கு வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் வவுனியா மாவட்ட சாரண ஆணையாளர் ச.பத்மநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (த-402)

## அதிகாரிகளைத் தடுத்த மூவருக்கு விளக்க மறியல்

வலி.தென்மேற்கு, பெப்.22
முல்லைக் கடற்பரப்பில் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன் பிடிப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர்களைப் பிடிக்கச் சென்ற அதிகாரிகளைக் கடமை செய்ய விடாமல் தடுத்தது மட்டுமல்லாமல் அவர்களை மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து சென்று பயமுறுத்திய மூவரை 14 தினங்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

நந்திக் கடற்பரப்பில் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி சட்டவிரோதமான முறையில் மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்களைக் கையும்மெய்யுமாகப் பிடிப்பதற்கு விரைந்து சென்ற முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளைக் கடமை செய்ய விடாமல் தடுத்த மூவர் மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து சென்று அதிகாரிகளைப் பயமுறுத்தினர்.

இது குறித்து புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் புகார் செய்ததைத் தொடர்ந்து, உடனடியாக விசாரணையில் ஈடுபட்ட பொலிஸார் சந்தேகத்தின் பேரில் மூவரைக் கைது செய்து முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் மாணிக்கவாசகர் கணேசராசாவிடம் முன்னிலைப் படுத்தினர்.

நீதிவான் மூவரையும் பதினான்கு தினங்களுக்கு விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (த-115)

# தமிழ்ப் பெண்களை கட்டாயப்படுத்தி இராணுவத்தில் இணைக்கவில்லை

## கிளிநொச்சித் தளபதி தெரிவிப்பு

கிளிநொச்சி, பெப்.22
கட்டாயப்படுத்தி தமிழ்ப் பெண்கள் எவரையும் இராணுவத்தில் இணைத்துக் கொள்ளவில்லையெனக் கிளிநொச்சி மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாயவனூர் பகுதியில் தமிழ்ப் பெண்களைக் கட்டாயப்படுத்தி இராணுவத்தில் இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இதனால் மக்கள் அச்சத்துடன் வாழ்வதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இது தொடர்பாகக் கிளிநொச்சி மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க ஊடகவியலாளர்களுக்கு ...யில்:

இராணுவத்தில் யாரையும் வலுக்கட்டாயமாக இணைத்துக் கொள்ளவில்லை. அவ்வாறு எந்தத் தகவலும் எனக்குக் கிடைக்கவில்லை.

இராணுவத்துக்கு ஆள்களை இணைத்துக் கொள்வதாயின் இலங்கையின் எப்பாகத்தில் இருந்தும் ஆள்களை இணைத்துக் கொள்ள முடியும். ஆனால் தொழில் வாய்ப்புக்கள் இன்றி இருக்கின்ற தமிழ்ப் பெண்களுக்கு மாதாந்தம் 25 ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளத்தை பெற்றுக் கொடுக்கும் வகையில் அவர்களின் சுய விருப்பின் பேரிலேயே இராணுவத்தில் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர்.

அவ்வாறு யாரையும் கட்டாயப்படுத்தி இணைக்கும் நடவடிக்கை எதுவும் இல்லை. அவ்வாறு நடந்தால் என்னிடம் நேரடியாக முறைப்பாடு செய்யலாம் அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளைச் செய்ய முடியும். அவ்வாறு வற்புறுத்துகின்ற அதிகாரிகளுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

நேற்று முற்பகல் கிளிநொச்சியில் அமைந்துள்ள இராணுவ ஒத்துழைப்பு மையத்தில் நடைபெற்ற 36 மாணவர்களுக்கான சைக்கிள்கள் வழங்கும் நிழ்வில் கலந்துகொண்டு ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (த-55)



மாணவன் ஒருவனுக்கு சைக்கிள் வழங்கும் தளபதி

## பட்டாசு வெடிகள் கேட்டு விழித்ததால் முற்றாக எரியாமல் தப்பியது கடை

*நள்ளிரவுவேளை சுதுமலையில் சம்பவம்*

வலி.தென்மேற்கு, பெப்.22

நள்ளிரவு நேரம் திடீரென தீப்பற்றி எரிந்தது பலசரக்குக் கடை. அதேசமயம் அங்கு அடுக்கி வைக்கப்பட்டிருந்த பட்டாசுகள் பெரும் சத்தத்துடன் வெடித்தன.

வெடிச் சத்தங்களால் அயலவர்கள் விழித்தெழுந்தனர். அங்கு ஓடிச்சென்ற அவர்கள் தீயை அணைத்தனர். கடை முற்றாக எரியாமல் பாதுகாக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் சுதுமலை வடக்குப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இதுபற்றிக் கூறப்படுவதாவது:-

கடை உரிமையாளர் வழமை போல் இரவு 10 மணியளவில் கடையைப் பூட்டிவிட்டுச் சற்றுத் தூரத்திலுள்ள தனது வீட்டுக்குச் சென்றுவிட்டார்.

நள்ளிரவு நேரம் மர்மமான முறையில் கடையின் முன்புறத்தில் வைக்கப்பட்டிருந்த தீ உள்ளே பரவியதால் கடைக்குள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பட்டாசுகளில் தீப்பிடித்து பலத்த சத்தத்துடன் அவை வெடித்தன.

**அயலவர் வெளியே வந்து பார்த்தபோது மேற்படி கடை தீப்பற்றி எரிந்து கொண்டிருப்பதைக் கண்டனர். விரைந்து சென்று தீயை அணைத்ததனால் கடை முற்றாக எரியாமல் பாதுகாக்கப்பட்டது.**

தொடர்ந்து வெடித்த சத்தத்தைக்கேட்ட அயலவர் வெளியே வந்து பார்த்தபோது மேற்படி கடை தீப்பற்றி எரிந்து கொண்டிருப்பதைக் கண்டனர். விரைந்து சென்று தீயை அணைத்ததனால் கடை முற்றாக எரியாமல் பாதுகாக்கப்பட்டது.

கடை உரிமையாளர் மானிப்பாய் பொலிஸில் ம்முறைப்பாடு செய்துள்ளார்.

பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ஒ-115)

## தொடர்கிறது சட்டவிரோத மீன்பிடி

*முல்லைத்தீவுக் கடற்பரப்பில்*



கைப்பற்றப்பட்ட தங்கூசி வலைகள்

முல்லைத்தீவு, பெப்.22

அதிகாரிகளின் அறிவுறுத்தலையும் மீறி முல்லைக் கடற்பரப்பில் தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகளைப் பயன்படுத்தி மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

நந்திக் கடற்பரப்பில் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி சட்டவிரோதமான முறையில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் அதிகாரிகளின் வரவைக் கண்டதும் தப்பினோம், பிழைத்தோம் என்று ஓடி மறைந்து விட்டனர்.

மீனவர்களால் கடலில் விடப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான தங்கூசி, முக்கூட்டு வலைகள் ஆகியவற்றைக் கைப்பற்றிய அதிகாரிகள் அவற்றை முல்லைத்தீவு நீதிமன்றில் பாரப்படுத்தினர்.

இது குறித்து விசாரணையில் ஈடுபட்ட நீதிவான் முக்கூட்டு வலைகளை அரச உரிமையாக்கும்படியும் தங்கூசி வலைகளை அழிக்குமாறும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, கடந்த இரு தினங்களுக்கு முன்பும் கொக்கிளாய் கடல் நீரேரியில் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட மீனவர் ஒருவர் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-115)

## சட்டவிரோத மீன்பிடியைத் தடுப்பதற்கு கடற்றொழிலாளருடன் ஆலோசனை

யாழ்ப்பாணம்.பெப்.22

குடாக்கடலில் தடை செய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதைத் தடுப்பதற்கு அந்தந்தப்பகுதி கடற்றொழிலாளர்களைச் சந்தித்து அவர்களது ஆலோசனைகளையும் பெற்று மாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்தத் தகவலை யாழ். மாவட்ட கிராமிய கடற்றொழிலாளர் அமைப்புக்களின் சம்மேளனத்தின் உபதலைவர் அ.எமிலியாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

யாழ்.மாவட்ட கடல் வளத்தைப் பாதுகாப்பதற்காக நீரியல் வளத் திணைக்களம் மற்றும் கடலோரக்காவல் படையினர் ஆகியோருடன் இணைந்து தடைசெய்யப்பட்ட தொழில் முறைகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைக்கையில் ஈடுபடுவதற்கு யாழ். மாவட்ட கிராமிய கடற்றொழிலாளர் அமைப்புக்களில் இருந்து குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ள நிலையில் இந்தக்குழுவின் அடுத்தகட்ட நடவடிக்கையாக அந்தந்த கிராமிய அமைப்புக்களைச் சந்தித்து பிரதேசம் சார்ந்த மீன்பிடிப் பிரச்சினைகளை கேட்டறியவுள்ளனர்.

யாழ்.மாவட்ட கிராமிய கடற்றொழிலாளர் அமைப்புக்களின் சம்மேளனங்கள் இணைந்து கடந்த 7 ஆம் திகதி கடல் வளத்தைப் பாதுகாப்பதற்காக நீரியல் வளத் திணைக்களத்தால் தடை செய்யப்பட்ட தொழில் முறைகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைக் குழு ஒன்றைத் தெரிவு செய்துள்ளதுடன் குறித்த குழு செயற்பாட்டிலும் இறங்கியுள்ளது.

இதனடிப்படையில் தடை செய்யப்பட்ட தொழில் உபகரணங்களைப் பயன்படுத்தி கடற்றொழிலை மேற்கொள்வோர் கடந்த 15 ஆம் திகதியுடன் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும்- அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில் அதற்கான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் குறித்த தீர்மானத்தை தொழிலை மேற்கொள்வோர் மதிப்பதாகத் தெரியவில்லை.

எனவே குறித்த குழுவினர் யாழ் மாவட்டத்தில் உள்ள சங்கங்கள் ஊடாக அங்குள்ள தொழிலாளர்களை நேரடியாகச் சந்தித்து தடை செய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்துவதை நிறுத்துமாறு கோரவுள்ளனர். எனினும் அதனையும் மீறி சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடும் பட்சத்தில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (வ-14)

## சன சமூக நிலைய திறப்புவிழா இன்று

வலி. வடக்கு, பெப். 22

ஏழாலை தெற்கு சூராவத்தையில் பொதுப்பணி மன்ற சனசமூக நிலைய திறப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலக பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ச.சுஜாதரன் தலைமையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்தநிகழ்வில் பிரதம விருந்தினராக 'லண்டன் செரண்டிப்' சிறுவர் இல்ல தலைவி திருமதி திரிஷா செல்வரட்ணமும், சிறப்பு விருந்தினர்களாக வலி. தெற்கு பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஷ், வலி. வடக்கு பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தன் ஆகியோரும் கலந்து கொள்வர். (வ-86)

## தார் இட்டு செப்பனிடப்படும் மண்டைதீவு பிரதான வீதி



புனரமைப்பில் ஈடுபடும் பணியாளர்கள்

யாழ்ப்பாணம், பெப்.22

மண்டைதீவு பிரதான வீதியில் காணப்படும் குழிகளுக்கு தார் கலவையிடும் பணிகள் தற்போது இடம்பெற்றுவருகின்றன.

பண்ணை மண்டைதீவு சந்தியில் இருந்து சுமார் 2 கிலோமீற்றர் வரையான தூரம் வரை தார்க் கலவை இடப்பட்டுள்ளது.

வீதியில் காணப்படும் குழிகள் நிரவப்படும் நிலையில் பெரிய ளவிலான வீதியின் சேதங்கள் திருத்தப்படாத நிலையிலேயே உள்ளன.

மண்டைதீவு பிரதான வீதியை காப்பெற் வீதியாக மாற்றும் திட்டத்தில் தற்போது வீதியை அகலப்படுத்தும் பணியும் இடம்பெறுகின்றது. (வ-7)

## நடமாடும் சிகரெட் விற்பனை; சிக்கியது ஓட்டோ

தென்மராட்சி,பெப் .22

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் அனுமதியின்றி சிகரெட் விற்பனை செய்த ஓட்டோ நகர சபை பொது சுகாதாரப் பரிசோதகரால் நகர சபைக்கு கொண்டு செல்லப்பட்டது.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் மதுபானம் மற்றும் போதைப்பொருள் தடுப்பு தகவல் நிலையத்தினருடன் இணைந்து நடத்திய கலந்துரையாடலை அடுத்து சாவகச்சேரி நகரப் பகுதி வர்த்தக நிலையங்களில் வெள்ளிக்கிழமைகளில் சிகரெட் விற்பனை செய்வதை நிறுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நகர்ப் பகுதியில் ஓட்டோவில் சிகரெட் விற்பனை செய்வதாக வர்த்தகர்கள் நகரசபைக்கும் கைத்தொழில் வணிகர் மன்றத்துக்கும் முறைப்பாடு செய்தனர்.

**சாவகச்சேரி நகரப் பகுதி வர்த்தக நிலையங்களில் வெள்ளிக்கிழமைகளில் சிகரெட் விற்பனை செய்வதை நிறுத்தியுள்ளனர்.**

இதனையடுத்து நகரசபைத் தலைவரின் பணிப்பின் பிரகாரம் பொது சுகாதாரப் பரிசோதகர் தனன்களப்பு வீதியில் நடமாடும் சிகரெட் விற்பனையில் ஈடுபட்ட ஓட்டோவை தடுத்து நிறுத்தி நகர சபைக்குக் கொண்டுசென்றனர். (வ-9)

## பஞ்சாங்கங்களுடன் முரண்படுவது புத்திசாலித்தனம் அல்ல

*இந்து சமயப் பேரவைத் தலைவர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், பெப்.22

வெளியிடப்படுகின்ற வாக்கிய, திருக்கணித பஞ்சாங்கங்களில் சில முகூர்த்த நிர்ணயங்களில் மாறுபாடுகள் காணப்படுகின்றன. இந்த நிர்ணயங்களை செய்த பஞ்சாங்கங்களுடன் முரண்படுவது புத்திசாலித்தனம் அல்ல. இரு பஞ்சாங்கங்களையும் ஒரே மாதிரி வெளியிடுங்கள் என்று கேட்பது நியாயமானதல்ல. இரு பஞ்சாங்கங்களையும் ஒரே மாதிரி வெளியிட்டால் இதற்கு எவ்விதம் வெவ்வேறு பெயர்களை வழங்க முடியும். அவை வெவ்வேறு பாரம்பரியங்களை உடையவை. இரு பஞ்சாங்கங்களும் வெளிவந்த பின் அந்த நிர்ணயங்களில் ஏதாவது தோசங்கள் உண்டா என்பதைக் கண்டறியும் பொறுப்பு வேத சிவாகம நிபுணர்களையே சாரும். இதை விடுத்து இந்தத் துறையில் சிறிதளவேனும் அறிவில்லாதவர்கள் ஆயிரக் கணக்கில் கூடியும் நடைபெறப் போவது ஒன்றும் இல்லை.

- இவ்வாறு யாழ்ப்பாண இந்து சமயப் பேரவையில் நடைபெற்ற பஞ்சாங்க முகூர்த்த நிர்ணயங்கள் சம்பந்தமான விசேட கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய இந்து சமய பேரவைத் தலைவர் சிவஸ்ரீ கணேச பரமேஸ்வர தீட்சிதர் குறிப்பிட்டார்.

மேற்படி கூட்டம் இந்து சமய தலைமைச் செயலகத்தில் பேராசிரியர் நா.ஞானகுமாரன் தலைமையில் நடைபெற்றபோது. தொடர்ந்து பேசிய சிவஸ்ரீ கணேச பரமேஸ்வரதீட்சிதர் கூறியதாவது:-

முகூர்த்த நிர்ணயங்களில் தவறுகள் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கின்றன. இத்தவறான முகூர்த்தங்களில் மேற்கொள்ளும் நிகழ்வுகள் மகா தோசங்களை ஏற்படுத்துபவை. இவற்றில் எந்த முகூர்த்தம் தோசம் அற்றது என்று கூறுவதற்கு வேத சிவாகமங்களில்தெளிவான அறிவுஇருக்க வேண்டும். முழுமையான அறிவு இல்லாதவர்கள் இந்த முகூர்த்தங்களைப் பற்றி பகிரங்கமாக அறிவிப்பதன் மூலம் சரியான முகூர்த்தம் பிழையாவதற்கும் பிழையான முகூர்த்தம் சரியாவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. இந்த முகூர்த்த நிர்ணயங்களை சரிபார்ப்பதற்கு இந்து சமய பேரவையால் நியமிக்கப்பட்டவர்கள் சாலப் பொருத்தமானவர்கள்.

கடந்த கால அனுபவத்தில் இத்தகைய நிர்ணயங்களில் உள்ள தவறுகளை ஆகமங்கள் மூலம் நிறுவியும் பலர் ஏற்காமல் போன சந்தர்ப்பங்கள் அதிகமுள்ளன. அதற்காக எது சரி என்று சொல்லக் கூடாது என்று பொருள்படாது. மக்களுக்குச் சரியானதைச் சொல்ல வேண்டியது எமது கடமை. தவறான முகூர்த்தங்களில் நிகழ்வுகளை நடத்துவதால் நாட்டுக்கும் மக்களுக்கும் பெரும் தோசங்கள் ஏற்படும் - என்றார்.

இதேவேளை - இரு பஞ்சாங்கங்களின் முரண்பாடுகள் குறித்து இந்து சமயப் பேரவை நாளை ஞாயிறு கூடி ஆராயவுள்ளது. (ஓ)

# உலகத் தமிழர்களுக்கு நெடுமாறன் அழைப்பு

## நடை பயணத்தில் அணிதிரளுமாறு

ஈகைப் பேரொளி முருகதாஸ் திடலில் ஐ.நா. பேரணிக்கு உலகத் தமிழர்கள் அணிதிரள வேண்டும். உலகத்தின் விழிகளை திறப்பதற்கு ஐ.நா. பேரணி, போராட்டங்கள் வலுச் சேர்க்கும் என்று நம்புகின்றேன் என்று உலகத் தமிழர் பேரவைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. நோக்கிய நீதிக்கான நடை பயணமானது நேற்று முன்தினம் 23 ஆவது நாளாக மார்லேன்ஹேம் நகரத்தை வந்தடைந்தது.

அந்த நடை பயணத்தில் மனித நேய பணியாளர்களுடன் ஜேர்மனி நாட்டை சேர்ந்த தமிழ் உணர்வாளர்களும் இணைந்து நடைபயணத்தை முன்னெடுத்தனர்.



நடைபாதைக் குழுவினர்

மனித உறவுகள் மனிதநேய பணி யாளர்களை உரிமையுடன் வரவேற்று அவர்களுடைய நடை பயணம் வெற்றியளிக்க தொடர்ந்தும் தமது ஆதரவை வழங்கிய வண்ணம் உள்ளனர்.

மனிதநேய பணியாளர்கள் Marlenheim நகர பிதாவுடனான கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், தமிழின அழிப்பை பல்லின மக்களுக்கு எடுத்துரைக்கும் முகமாக பல்வேறு மொழிகளில் துண்டுப் பிரசுரங்கள் வழங் கப்பட்டு வருகின்றன. நாளை மறுதினம் திங்கட்கிழமை நோர்வே நாட்டி னு டைய நாடாளுமன்ற முன்றிலில் தமிழ் வாகனப் பரப்புரைப் பயணம் ஆரம்பமாகி பல நாடுகளை ஊடறுத்து 10.03.2014 அன்று ஐ.நா. வினுடைய மனிதவுரிமை மன்றத்தைச் சென்றடையவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (வ)

# இந்தியாவில் உள்ள இலங்கை தமிழர்களை நாடு கடத்துக

## காங். வலியுறுத்து

சென்னை, பெப்.22

இந்தியாவில் உள்ள அனைத்து இலங்கைத் தமி ழர்களையும் நாடு கடத்துமாறு காங்கிரஸ் கட்சி வலியுறுத்தியுள்ளது.

புதுச்சேரி மாநிலத்தின் காங்கிரஸ் தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான வீ.வைத்தியலிங்கம் இதனைத் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்து உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ராஜீவ் காந்தியின் கொலைக் குற்றவாளிகளை விடுதலை செய்ய தமிழக அரசு தீர்மானித்துள்ளது.

மத்திய அரசின் ஆலோசனை இன்றி தன்னிச்சையாக தமிழக அரசு இவ்வாறு தீர்மானிக்க முடியாது.

இது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல் நோக்கத்துக்காக மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்.

அதேவேளை இந்தியாவில் உள்ள அனைத்து இலங்கைத் தமிழர்களையும் உடனடியாக நாடுகடத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (வ)



வவுனியா சைவப்பிரகாச ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கென வவுனியா நகர சபையின் முன்னாள் உப தலைவர் க.சந்திரகுலசிங்கம் ஒலி பெருக்கித் தொகுதிகளை ஆரம்பப் பாடசாலை அதிபர் திருமதி நந்தபாலனிடம் நேற்றுமுன்தினம் வழங்கினர். (வ-402)

கணினி திருத்தம்
உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737 Computer Repair
GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

# கிளிநொச்சி மாவட்டத்தின் பிரச்சினைகள் ஆராய்வு

கிளிநொச்சி, பெப். 22

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பிரச்சினைகள்,நெருக்கடிகள் மற்றும் குறைபாடு கள் தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட சிவில் சமூகத்தின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை கலந்துரையாடல் ஒன்று இடம் பெறவுள்ளது என்று அதன் தலைவரான சி.ஜீவநாயகம் தெரிவித்தார்.

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இன்று முற்பகல் 10 மணிக்கு இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இதில் கிளிநொச்சி மாவட்ட சிவில் சமூகப் பிரதிநிதிகள் கல்வியியலாளர்கள் சமூகப்பிரதிநிதிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (து-4)

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை அரியதுரை



அல்வாய் மேற்கைப் பிறப்பிடமாகவும், அரியாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை அரியதுரை நேற்று (21.02.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தெய்வானை தம்பதியரின் ஏகபுத்திரனும் காலஞ்சென்ற அன்னப்பிள்ளையின் பெறாமகனும் காலஞ்சென்றவர்களான செல்லர் - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் ஜெயரட்ணா (லண்டன்), கமலாதேவி, தேவதாஸன் (லண்டன்), சறோஜாதேவி (ஆசிரியை யா /கனகரத்தினம் ம.ம. வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசையா (ஓய்வு நிலை வடமாகாண கல்விப் பணிப்பாளர்), சாந்தி, கருணாகரன் (ஆசிரியர் யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தி.) ஆகியோரின் அன்புமாமனும் ஜெயரட்ணா - பற்றிக் (லண்டன்), வாகீசன் (ஆசிரியர் தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி), Dr.நிகேதா (சித்த ஆயுள்வேத வைத்தியசாலை, திருகோணமலை), துஷ்யந்தன் (முகாமையாளர், சிங்கர் காட்சியறை, நெல்லியடி), துவாரகா (அபிவிருத்தி உத்தியோகத்தர் N.Y.S.C), ஆதித்தன் (லண்டன்), விஜய்தாப் (பொறியியல் துறை கனடா), மேகலா (முன்னாள் ஆசிரியை யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தி கனடா), எட்வேட்கஜன் (ஆசிரியர் யா/சென்ஜோன்ஸ் கல்லூரி), நர்மதா (ஆசிரியை யா/புனித பத்திரிசிரியார் கல்லூரி), சோபியா (லண்டன்), சாருஜன் (லண்டன்), காருண்யா (யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), விதுஷிகா (யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), கானப்பிரியன் (யா/சென்ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேரனும், வியாசன், வைஷாலி ஆகியோரின் அன்புப்பூட்டனும் காலஞ்சென்ற பத்மாவதி குணரத்தினத்தின் அன்புமைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2014) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 3 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 239 செ்ன்.பெனடிக்ற் வீதி,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.
T.P : 021 2223396

தகவல்:
குடும்பத்தினர்

ஓம் விராட் விஷ்வப்பிரம்மனே நமக

# மரண அறிவித்தல்

## விஷ்வப் பிரம்மஸ்ரீ கந்தையா கிருஷ்ணர்



மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விஷ்வப் பிரம்மஸ்ரீ கந்தையா கிருஷ்ணர் நேற்று (21.02.2014) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - லட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், ஐயம்பிள்ளை - பரிமளம் தம்பதியரின் அன்பு மருமகனும், இரத்தினத்தின் அன் புக் கணவரும், பாபநாசசிவம், கெங்கநாதசிவம், கிரு ஷாம்பாள், கலாமோகன், சந்திரமோகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகேஸ்வரி, யோகேஸ்வரி, இந்திராணி, அகல்யா ஆகியோரின் மாமனும், பிரதீபன், பிரசாத், பிரகாஷ், ஐஸ்மினா, கிருஷாந், உதய மாலினி, திவாகர், அபிரா, கவிநிலா, பிரியங்கன், அபிராம், அபில ாஸ், ஜெயமோகன் ஆகியோரின் அன்புப் பேரனும், ரம்மியன், கம்சிகன் ஆகி யோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.02.2014) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு,
சிவன் கோயில் வீதி, சாவகச்சேரி.

தகவல் :
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## வீரசிங்கம் செல்வநாதன்

### ( ஓய்வு பெற்ற இலங்கை வங்கி உத்தியோகத்தர்)



அல்வாய் கௌரி கோட்டத்தை பிறப்பிடமாகவும், இரணைப்பாலை புதுக்குடியிருப்பை புகுந்த இடமாகவும், இல. 270 நாயன்மார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் செல்வநாதன் நேற்று (21.02.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் வீரசிங்கம் (ஓய்வு பெற்ற அதிபர்) காலஞ்சென்ற தெய்வநாயகி தம்பதியரின் சிரேஸ்ட புத்திரனும் பிரான்சிஸ் சேவியர் காலஞ்சென்ற லூர்த்தம்மா தம்பதியரின் மருமகனும் மேரிஇஸபெல் அவர்களின் அன்புக்கணவரும் நிரோஷன் (பிரதேச சபை நல்லூர்), தினேஷன், சுபேஷன் (கட்டார்), தேனுஷன், வினுஷன் (யாழ். புனித பத்திரி சிரியார் கல்லூரி), மேரிஜானுஷா (யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் மேரிகஸ்தூரியின் (தாதிய உத்தியோகத்தர் யா/போதனா வைத்தியசாலை) அன்புமாமனாரும் நிஸ்மிகாவின் அன்புப்பேரனும் காலஞ்சென்ற விஸ்வநாதன் (தொழினுட்ப உத்தியோகத்தர்), கௌரி (லண்டன்), துளசி (ஆசிரியை கிளி/ கோயில் வயல் வித்தியாலயம்), கஸ்தூரி (ஆசிரியை கொழும்பு பம்பலப்பிட்டி முஸ்லீம் மகளிர் கல்லூரி), ரங்கநாதன் (ஆசிரியர் யா/ கனகரத்தினம் ம.ம.வி), திவ்வியநாதன் (புள்ளி விவரத்திணைக்களம் யாழ். செயலகம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் யேசுராசா (மாஸ்ரர்) காலஞ்சென்ற எட்வேட்ராசா (கலோ) மற்றும் ஜெயராசா (ஜெயம்), யோகராசா (சேர் ஜேர்மனி), ஜக்குலின் (கொலின்), றெஜிவிஜிலா (விஜி), கனகாம்பிகை, கருணைவேல் (லண்டன்), வாசுதேவன் (ஆசிரியர் யா/ கம்பர்மலை வித்தியாலயம்), சுரேஸ்பாலன் (கணக்காளர் அபுதாபி), சுஜீவா (ஆசிரியை யா/ கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயம்), தேனுகா (ஆசிரியை யா/ தேவரையாளி இந்துக்கல்லூரி) ஆகியோரின் மைத்துனரும் அன்ரன், மோகன்ராஸ் (மேலதிக அரசாங்க அதிபர் முல்லைத்தீவு), பிலோமினா (ஆசிரியை முல்லைத்தீவு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்), இலங்கைராணி, ஜெயறூட், சிபற்றா (ஜேர்மனி), யோகராசா ஆகியோரின் சகலனும் ஆவார். அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

270 நாயன்மார் வீதி, நாயன்மார்கட்டு
யாழ்ப்பாணம்.

தகவல் : வீ. ரங்கநாதன் (சகோதரன் - ஆசிரியர்)
077 3062082
செ. நிரோஷன் (மகன்) 077 1275268

உதயன்
22.02.2014



# உள்ளூர் பால் உணவுப் பொருள் உற்பத்தி ஸ்தம்பிதமடையும் நிலை

## கொள்வனவு செய்யப்படும் பசுப்பால் தென்னிலங்கைக்கு கொண்டு செல்லப்படுவதால்

அச்சுவேலி, பெப்.22
யாழ்.மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பசுப்பால் பெருமளவில் கொள்வனவு செய்யப்பட்டு தென்னிலங்கைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது.
இதனால் யாழ்.மாவட்டத்தில் சுய தேவைக்குப் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதோடு உள்ளூரில் பால் உணவுப் பொருள் தயாரிப்பில் ஈடுபடும் அமைப்புக்களின் செயற்பாடுகளும் ஸ்தம்பிதம் அடையும் நிலையில் உள்ளதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது.
யாழ்.மாவட்டத்தில் இருந்து ஆயிரக்கணக்கான லீற்றர் பசுப்பால் "நெஸ்லே" நிறுவனத்தால் கொள்வனவு செய்யப்பட்டு தினமும் குருநாகலில் உள்ள தொழிற்சாலைக்கு பௌஸர்கள் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றது. இந்த வகையில் யாழ்.மாவட்டம் முழுவதிலும் பாலை சேகரிப்பதற்கு 20 பால் சேகரிப்பு நிலையங்களும் புத்தூரில் மூன்று பெரிய அளவிலான குளிரூட்டி கொள்கலன்களுடன் கூடிய களஞ்சியமும் செயற்பட்டு வருகின்றது.
தற்போது தென்னிலங்கை நிறுவனம் ஒன்று (ஹாகில்ஸ் பூட் சிற்றி) மீசாலையில் பசுப் பால்கொள்வனவுநிலையத்தை ஆரம்பித்து யாழ். மாவட்டத்தில் நியமப்படுத்தப் பட்ட பால் கொள்வனவு விலையிலும் கூடிய விலையில்பாலை கொள் வனவு செய்யத் தொடங் கியுள்ளது.
நிறுவனத்தின் பால் கொள்வனவு நிலையங்கள் வலிகாமம் உட்பட யாழ்.மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.
சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் பால் பொருள் உற்பத்தி தொழிற்பாட்டை மேல் நிலைப்படுத்துவதற்காக யு.என்.டி.பி நிறுவனத்தின் நிதி உதவியுடன் 20 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட செலவில் பால் பொருள் உற்பத்தித் தொழிற்சாலையொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அதன் செயற்பாடுகள் பரீட்சார்த்த நிலையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
இந்த நிலையம் முழுமையாக செயற்படுவதற்கு கணிசமான அளவு பால் தேவை. மீசாலையில் தென்னிலங்கை நிறுவனத்தின் செயற்பாட்டுக்கு வசதியாக பால் கொள்வனவு ஆரம்பிக்கப்பட்டிருப்பது சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் தொழிற்பாடுகளுக்கு முட்டுக்கட்டையாக அமைந்துள்ளது என்று கூறப்படுகின்றது.
இதுதொடர்பாக கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் யாழ். மாவட்ட சமாசத்தின் நெறியாளர் குழுக் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு நிலைமை குறித்துக் கவலை தெரிவிக்கப்பட்டது.
இந்த விடயத்தில் யாழ். மாவட்ட உள்ளூர் அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள், இந்த மாவட்ட மாணவர்களின் போஷாக்கு நிலையைக் கருத்தில்கொண்டு அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் பொருத்தமான நடவடிக்கை எடுக்கவில்லை என்று விசனம் தெரிவிக்கப்பட்டது.
இதேவேளை பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலைகள் நடைபெறும் தினங்களில் 150 மில்லி தூய பசுப்பால் வழங்குமாறு கல்வி அமைச்சு அறிவித்து ஏனைய மாவட்டங்களில்அதுநடைமுறையில்உள்ள போதிலும் யாழ்.மாவட்ட மாணவர்களுக்கு அந்த வசதி இதுவரை கிட்டவில்லை. அதற்குக் காரணம் யாழ்.மாவட்ட மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ற அளவு பாலை யாழ். மாவட்டத்தில் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதனால் நடைமுறைப்படுத்த முடியாத நிலையில் இருப்பதாக அதிபர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.
பாலர் முன்பள்ளிச் சிறுவர்களுக்கு தற்போது பாடசாலை தினங்களில் பால் வழங்கப்படுகின்றபோதிலும் பால் கொள்வனவில் ஏற்பட்டிருக்கும் ஏட்டிக்கு போட்டியான நிலை பாலர் முன்பள்ளி பால் விநியோகத்திலும் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்றும் எதிர்வு கூறப்படுகின்றது.
யாழ்.மாவட்டத்தில் தற்போது யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (யாழ்கோ) மற்றும் பிராந்திய ரீதியில் செயற்படும் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களும் பால்பொருள் உணவு் உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றன. தென்னிலங்கை நிறுவனங்கள் பால்கொள்வனவு, பால் உணவு பொருள் உற்பத்தியில் பலமான நிலையில் கால் ஊன்றி இருப்பது உள்ளூர் அமைப்புக்களின்செயற்பாட்டை காலப்போக்கில் ஸ்தம்பிதம் அடையச்செய்து குழப்பத்துக்கு உள்ளாக்கலாம் என்று சமூக ஆர்வலர்கள், கூட்டுறவாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (வ-11)

### வைத்தியசாலைக்கு காணி வழங்க விரும்புவோர் தொடர்பு கொள்க

யாழ்ப்பாணம், பெப்.21
ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையின் விஸ்தரிப்புக்கு காணி தேவையாக உள்ளதால்
வைத்தியசாலைக்கு அருகில் உள்ள காணி உரிமையாளர்கள் தமது காணிகளை நன்கொடையாகவோ அல்லது குறிப்பிட்ட தொகைக்கோ வழங்க விரும்பினால் அது குறித்து மாவட்ட வைத்தியசாலை நலன்புரி சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
பெற்றோர் மற்றும் மூதாதையர் நினைவாக வழங்க விரும்பினாலும் அது குறித்து தெரியப்படுத்தலாம் என்றும் வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது. (வ-7)

### ஊர்காவற்றுறையில் 150 குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டம்

ஊர்காவற்றுறைப் பகுதியில் இந்திய வீட்டுத் திட்டங்களுக்கென 150 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்று ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் தெரிவித்தார்.
ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகப் பிரிவில் 441 குடும்பங்கள் இந்திய வீட்டுத் திட்டத்துக்காக விண்ணப்பித்திருந்தன.
எனினும் 8 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 150 குடும்பங்களே இந்திய வீட்டுத் திட்டத்துக்குத் தெரிவாகியுள்ளன.
தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் எட்டு மாதங்களில் வீடுகள் அமைக்கும் பணியைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (வ-7)



யாழ்.நகரில் றம்புட்டான் விற்பனை, சீசன் காலத்துக்கு ஏற்ப மீண்டும் ஆரம்பித்துள்ளது. தென்னிலங்கை வியாபாரிகளால் குடாநாட்டுக்குள் கொண்டுவரப்படும் றம்புட்டான் நகர்புறம் மற்றும் பிரதான வீதிகளில் பத்து பழங்கள் 100 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. பொது மக்கள் ஆர்வத்துடன் வாங்குவதையும் அவதானிக்க முடிந்துள்ளது. (வ-14)

### தாகம் தீர்க்கத் தண்ணீர் தந்துதவுமாறு கோரிக்கை

**ஊர்காவற்றுறையில் மக்கள் அவலம்**

யாழ்ப்பாணம், பெப்.22
தற்போது நிலவும் கடும் வறட்சி காரணமாக ஊர்காவற்றுறை பிரதேச மக்களுக்குத் தேவையான குடி தண்ணீரை உடன் வழங்க அரச அதிபர் முன்வரவேண்டும் என அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.
இது குறித்து அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-
"என்றுமில்லாதவாறு இப்பொழுது கிணறுகளில் தினமும் சுமார் 4 முதல் 5 அங்குலம் வரையான நீர் வற்றிக் கொண்டிருக்கிறது.
நன்னீர் ஊற்றுக்களற்ற எமது பகுதியில் உவர் நீரும் வற்றிக் கொண்டிருப்பதால் ஏனைய தேவைகளுக்குப் பயன்படுத்தக் கூடிய தண்ணீரையும் கூட படிப்படியாக இழந்து வருகின்றோம்.
இவ்வாறான நிலையில் சமூக சேவைப் பகுதியால் எமது பகுதி மக்களுக்குக் குடி தண்ணீர் வழங்க அரச அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஓ-7)

### திண்மக் கழிவு முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கு காணி நன்கொடை

யாழ்ப்பாணம், பெப்.22
நல்லூர் பிரதேச சபை, திண்மக் கழிவு முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக அரியாலை பகுதியில் இரண்டு ஏக்கர் காணியை நன்கொடையாகப் பெற்றுள்ளது.
அதற்கான காணி கே.தனபாலசிங்கம் மற்றும் ஜோ பில்டிங் உரிமையாளர் ஆகியோரே தலா ஒரு ஏக்கர் வீதம் சபைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர்.
திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பாக பிரதேச சபைத் தவிசாளர் ப.வசந்தகுமார் தொடர்பு கொண் டதை அடுத்து மேற்குறிப்பிட்டோர் காணியை இலவசமாக வழங்க முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.
இதேவேளை இரு நன்கொடையாளர்களையும் சபை கௌரவிக்க வேண்டும் என்று கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் உறுப்பினர்களால் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
காணிகளுக்கான எல்லைகளை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (வ-7)

# தெல்லிப்பழையில் பேரணி

## 'புகை எமது வாழ்க்கைக்குப் பகை' என்ற தொனிப் பொருளில் நேற்று விழிப்புணர்வு சுலோகங்களைத் தாங்கியவாறு

வலி வடக்கு, பெப் 22
'புகை எமது வாழ்க்கைக்குப் பகை' என்னும் தொனிப் பொருளில் பல்வேறு சுலோகங்களையும் தாங்கிய பேரணி தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்துக்கு முன்பாக உள்ள அந்தப்பகுதி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இருந்து நேற்று வெள்ளிக்கிழமை பகல் ஆரம்பமாகி சுன்னாகம் வரை இடம் பெற்றது.
விழிப்புணர்வுப் பேரணியை யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் ஆரம்பித்துவைத்தார்,
சுகாதார அமைச்சின் நூற்றியொருநாள் வேலைத் திட்டத்தின் கீழ் தெல்லிப்பழை, உடுவில் ஆகிய பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள், தெல்லிப்பழை, உடுவில் பிரதேச செயலர் பிரிவுகள் மற்றும் வலி. தெற்கு, வலி.வடக்கு பிரதேச சபைகளும் இணைந்து இந்த விழிப்புணர்வுப் பேரணியை மேற்கொண்டன.
பேரணியில் சுகாதாரப் பரிசோதகர்கள், மருத்துவ மாதுகள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.
சுகாதார வைத்திய அதிகாரிகளான அ.ஜெயக்குமாரன், எஸ்.நந்தகுமார், வட மாகாண சபை உறுப்பினர் எஸ்.கஜதீபன், வலி. தெற்கு பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஷ், வலி. வடக்கு பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தன், உப தலைவர் மற்றும் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (வ-86)



பேரணியில் மருத்துவ மாதுக்கள்

### அனுமதியின்றி மணல் ஏற்றல் 4 பேர் கடந்த வாரம் கைது

சட்டவிரோதமாக மணல் ஏற்றியமை மற்றும் மணல் கொண்டு சென்ற குற்றச்சாட்டில் கடந்த வாரம் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
அச்சுவேலியில் பெக்கோ இயந்திரம் மூலமாக மணல் அகழ்ந்த மாத்தளையைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டார். மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட அவருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அச்சுவேலி அக்கரைப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்ற கைதடியைச் சேர்ந்த ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
அதே பகுதியில் சட்டவிரோதமாக டிராக்டரில் மணல் ஏற்றிச் சென்ற வயாவிளான் மற்றும் கொடிகாமத்தைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட் டுள்ளனர். அவர்களுக்கு எதிரான வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-4)

# முடிந்தால் செய்து பாருங்கள் நாங்களும் எதற்கும் தயார்

## மூவர் தூக்கு விடயத்தில் சவால் விடுகிறார் ஞானதேசிகன்

சென்னை, பெப்.22

"ராஜீவ் காந்திக் கொலைக் குற்றவாளிகளின் தூக்கு தொடர்பான விடயத்தால் மத்திய அமைச்சர்களை தமிழ்நாட்டுக்குள் நுழைய விட மாட்டோம் என்று பெரியார் திராவிடர் கழகத்தினர் கூறுகின்றனர். முடிந்தால் மந்திரிகளைத் தடுத்துப் பாருங்கள். நாங்களும் எதிர்கொள்ள தயாராக இருக்கிறோம். இதனை ஒரு சவாலாகக் கூறுகின்றேன்"- என்று தெரிவித்துள்ளார் தமிழக காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன்.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை வழங்கப்பட்ட 7 பேரையும் விடுதலை செய்வதாக தமிழக அரசு அறிவித்துள்ளது. அதை எதிர்த்து இந்திய மத்திய அரசு உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளது. அதனால் 7 பேரின் விடுதலைக்கு இடைக் காலத் தடை விதித்துள்ளது நீதிமன்றம். இந்தநிலையில் 7 பேரையும் விடுதலை செய்யக்கூடாது என்று வலியுறுத்தியும், ராஜீவ் காந்தியுடன் உயிரிழந்த 15 தமிழர்களுக்கும் நீதி வழங்குமாறு கோரியும் இளைஞர் காங்கிரஸ் சார்பில் சென்னையில் நேற்று உண்ணாவிரதம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஞானதேசிகன் இவ்வாறு சவால் விடுத்துள்ளார். அங்கு அவர் மேலும் கூறியதாவது,

"ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் கொலையாளிகள் அல்ல என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங் கவில்லை. 4 பேருக்கு தூக்கு தண்டனையும் 3 பேருக்கு ஆயுள் தண்டனையும் வழங்கப்பட்டது. அதை உயர் நீதிமன்றம் உறுதி செய்தது.

எமது நாட்டைப் பொறுத்தவரை பாகிஸ்தானில் இருந்து ஊடுருவி மும்பையில் தாக்குதல் நடத்திய கசாப்புக்கு சட்டத்தரணி வைத்து வாதாட சட்ட உரிமை வழங்கியுள்ளது. அதேபோல் தான் பிரதமரை கொன்றவருக்கும் சட்ட உரிமை கொடுக்கப்பட்டது.

தூக்குத் தண்டனை பெற்ற 3 பேரும் நாங்கள் குற்றவாளிகள்தான், எங்களுக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக குறையுங்கள் என்று ஜனாதிபதியிடம் கடிதம் கொடுத்தனர். இந்த அரிச்சுவடி கூட வைகோவுக்கு தெரியவில்லையே.

கருணை மனு மீது முடிவெடுக்க 11 ஆண்டுகள் காலதாமதம் ஆனதால் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது. ஏனைய கொலைவழக்குகளை விட இந்த வழக்கு வித்தியாசமானது. இலங்கையில் சதித் திட்டம் தீட்டப்பட்டு 13 விடுதலைப் புலிகள் இந்தியாவில் ஊடுருவி தங்கள் திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள்.

இவர்களுக்கும், மும்பையில் ஊடுருவிய கசாப்புக்கும் வித்தியாசம் இல்லை. இவர்கள் 3 பேர்களது தண்டனையையும் ஆயுள் தண்டனையாகக் குறைத்து காலை 11 மணிக்கு உயர்நீதி மன்றம் தீர்ப்பு வழங்குகிறது. மறுநாள் காலை 11 மணிக்கு 7 பேரையும் விடுதலை செய்கிறேன் என்று தமிழக அரசு அறிவிக்கிறது. தேசத்துக்கே சவால் விடும் சூழ்நிலையை உருவாக்கி இருக்கிறார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்பு 10 ஆண்டுகளுக்கு மேல் சிறையில் இருந்த கைதிகளை தமிழக அரசு விடுதலை செய்தது. அப்போது நளினிதான் 14 ஆண்டுகள் சிறையில் இருந்து விட்டதாகவும் தன்னையும் விடுதலை செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். அப்போது ஏனைய கொலைகளுக்கும், ராஜீவ் கொலைக்கும் வித்தியாசம் உள்ளது. எனவே விடுதலை செய்ய முடியாது என்று அவரது கோரிக்கையை தமிழக அரசு நிராகரித்தது. உடனே நளினி உயர் நீதிமன்றம் சென்றார். உயர் நீதிமன்றமும் அவரை விடுதலை செய்ய மறுத்து விட்டது.

தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டு விட்டதால் குற்றத்துக்கான தண்டனை குறைந்து விடாது. உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையும் மீறி அரசியலுக்காக தமிழக அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டு உள்ளது. காங்கிரஸ் பல தோல்விகளை சந்தித்து இருக்கிறது. தேர்தல்மட்டும்எங்கள்லட்சியம்அல்ல. ராஜீவ் கொலையாளிகளுக்கு கருணை காட்டும் யாராக இருந்தாலும் காங்கிரஸ் எதிர்க்கும். எங்கள் எதிர்ப்பை எந்த முறையில் காட்டுவது என்பது குறித்து விரைவில் முடிவு செய்வோம். மத்திய அமைச்சர்களைத்தமிழ்நாட்டுக்குள்நுழைய விட மாட்டோம் என்று பெரியார் திராவிடர் கழகத்தினர் கூறியுள்ளனர். கோவையில் காங்கிரஸ் பிரமுகர் பிரபு வீட்டின் மீது பெற்றோல் குண்டு வீசியுள்ளனர். முடிந்தால் அமைச்சர்களைத் தடுத்துப் பாருங்கள். நாங்களும் எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறோம். இதை சவாலாகக் கூறுகின்றேன்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# நவீன ஆகாஷ் ஏவுகணை வெற்றிகரமாகச் சோதனை



புதுடில்லி, பெப்.22

தரையில் இருந்து ஆகாய இலக்கைத் துல்லியமாகத் தாக்கும்ஆகாஷ்ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக நேற்றுச் சோதனை செய்துள்ளது. முற்றிலும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இந்த ஏவுகணை 60 கிலோ எடையுள்ள வெடி பொருள்களைச் சுமந்து 18 கி.மீ உயரத் திற்கு சென்று, 25 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள இலக்கைத் தாக்கும் ஆற்றல் படைத்தது.

ஒரிசாவின் பலசோர் பகுதியை அண்டிய சந்திபூர் சோதனை தளத்தில் அமைக்கப்பட்டுள்ள ஏவுகணைத் தளத்தில் இருந்து இந்த ஏவுகணை சோதனை செய்யப்பட்டது. லக்ஷயா என்ற ஆளில்லா விமானத்தின் உதவியுடன், தொங்க விடப்பட்ட மிதக்கும் இலக்கினை வெற்றிகரமாக தாக்கி அழித்ததாக இந்திய இராணுவத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது. (ற)

# காங்கிரஸ் தலைவர்களுடன் ராகுல் காந்தி ஆலோசனை

புதுடில்லி, பெப்.22

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் பதவிக் காலம் எதிர்வரும் மே மாதத்துடன் முடிவடைய உள்ளதை அடுத்து காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தி 2014ம் ஆண்டுக்கான தேர்தல் அறிக்கை குறித்து இளம் காங்கிரஸ் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

சுமார் இரண்டரை மணி நேரம் நடந்த இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் 45 காங்கிரஸ் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் சாதனை களை முன்னிலைப்படுத்தி அடித்தட்டு மக்களிடம் தீவிர மான தேர்தல் பிரச்சாரம் செய்யுமாறு அவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார் ராகுல் காந்தி. (ற)

**வீடு வாடகைக்கு**

ஆனைப்பந்தியடியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு:071 514 0950 (44966) (3.6.4)

**MAJESTIC CINEMA - CARGILLS SQUARE**

CEYLON THEATRES (Opposite Jaffna Teaching Hospital)

விசாரணை ☎ 021-2227712

www.facebook.com/CeylonTheatres

Web: www.ceylontheatres.com

இப்பொழுது திரையில் DAILY - 10.30am, 2.30pm, 6.30pm




**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

உடுவில் முருகமூர்த்தி கோயில் தலைவர்

**அப்புத்துரை பிரதாபன்**

அவர்கள் 21.02.2014 அன்று

உடுவில் மான்ஸ் மகாவித்தியாலய

ஆசிரியர் சேவையிலிருந்து

ஓய்வுபெறுவதையிட்டு அவரைப்

பாராட்டி வாழ்த்துவதுடன்.

அவர் மேன்மேலும் பல கோயிற்பணிகள்

சிறப்புறச் செய்து பல்லாண்டு காலம்

வாழ என வாழ்த்துகிறோம்.

**கா.குகானந்தகுருக்கள் குடும்பத்தினர்**

முருகமூர்த்தி கோயில், உடுவில்.




(சி12536)(12.3.6)

Nestlé Milkmaid Create Happiness

**அழைப்பு!**

ஊருக்கு ஊர் இன்சுவை பரப்பும் மில்க்மெயிட்டின் சுவையான அனுபவம் உங்கள் ஊருக்கும் வருகிறது!

மில்க்மெயிட் பாவித்து தயாரிக்கப்படும் இன்பண்டங்களைச் செய்யும் முறை பற்றி அறிந்து கொள்ளவும், அவற்றை ருசி பார்க்கவும் இது அருமையானதொரு வாய்ப்பு.

**மில்க்மெயிட் சுவையூட்டியுடன் இணையுங்கள்.**

இடம் :- T.C.T மண்டபம்,நாவலர் வீதி, நல்லூர்.

காலம் :- 23.02.2014 ஞாயிற்றுக்கிழமை

நேரம் :- பிற்பகல் 2.00 மணி

பிரபல சமையற் கலைஞர்கள் செய்முறைப் போதனைகளை வழங்குவார்கள்.
அன்று வருகை தரும் அனைவருக்கும் சமையற் குறிப்புப் பிரசுரம் இலவசம்.
இந்த அரிய வாய்ப்பை நழுவ விடாதீர்கள்.

**நுழைவு இலவசம்**

- அன்றைய தினம் விசேட விலையில் மில்க்மெயிட்டைப் பெற்றுக் கொள்ளலாம்.

நெஸ்லே நிறுவனத்தின் அனுசரணையுடன் இந்த வாய்ப்பு உங்களு[illegible]படுகிறது. (44962ஏ7.6.3)

**பகிரங்க கேள்வி அறிவித்தல்**

யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலகத்தினால் 40' X 20' அள்வுள்ள அலுவலக பழைய கட்டடத்தினை உடனடியாக இடித்து அகற்றும் பொருட்டு கேள்வி கோரப்படுகின்றது. மேற்படி கட்டடத்தினை 24.02.2014ஆம் திகதியிலிருந்து 28.02.2014ஆம் திகதி வரை நேரில் பார்வையிட்டு கேள்விப் பத்திர விண்ணப்பக் கட்டணமாக ரூபா 100.00ஐ அலுவலக நாள்களில் பி.ப. 03.00 மணிக்கு முன் செலுத்தி கேள்விப்பத்திரத்தை யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலக பாடசாலை வேலைகள் பகுதியில் பெற்று அதனுடன் மீளளிக்கக்கூடிய வைப்புத்தொகை ரூபா 5000.00 இனை வலயக் கல்வி அலுவலகக் கணக்காளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டினைக் கேள்வியுடன் இணைத்து 03.03.2014ஆம் திகதி மு.ப. 10.30இற்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விகள் யாவும் அன்றைய தினம் உடனடியாக திறக்கப்படும். கேள்விகள் சமர்ப்பித்த யாவரும் தவறாது சமுகமளித்தல் வேண்டும்.

தகைமையுடைய கேள்விதாரர் உரிய தொகையினை அலுவலகத்தில் அன்றைய தினமே செலுத்தி 07 நாள்களினுள் குறித்த வேலையை அலுவலக செயற்பாட்டிற்கும் அலுவலர்களுக்கும் இடையூறின்றி முடிவுறுத்தி பொருள்களை அகற்றுதல் வேண்டும்.

எஸ்.உதயகுமார், தலைவர்,
கேள்விச்சபை, வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.

## ஒபாமாவை சந்தித்தார் தலாய் லாமா

நியூயோர்க், பெப்.22
திபெத்தின் விடுதலைக்காகப் போராடி வரும் ஆன்மிகத் தலைவர் தலாய்லாமா அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவை நேற்று வெள்ளை மாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.
இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள நிலையில் சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள திபெத்தின் விடுதலைக்காகக் கடந்த 30 ஆண்டுகளாகப் போராடி வருகின்றார் தலாய்லாமா. திபெத் நாட்டை உருவாக்குவதற்காகப் பல்வேறு நாட்டுத் தலைவர்களுடன் கலந்துரையாடி ஆதரவு திரட்டி வருகின்றார். இந்தநிலையில் நேற்று அவர் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.
2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளிலும் தலாய்லாமா பராக் ஒபாமாவைச் சந்தித்துப் பேசியிருந்தார். அதற்கு சீனா கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தது. (ற)



பிரேஸிலில் அடுத்தவாரம் நடைபெறவுள்ள சம்பா திருவிழாவுக்காக அந்த நாட்டு மக்கள் உற்சாகத்துடன் தயாராகி வருகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் போது இந்த விழாவின் போது சம்பா நடனப் போட்டிகள் நடத்தப்படும். அதற்காக பத்துக்கும் மேற்பட்ட சம்பா நடனக் குழுக்கள் ரியோ டி ஜெனீரோ நகரில் அண்மையில் நடன ஒத்திகை நடத்தினர். பாரம்பரிய முறைப்படி ஒவ்வொரு குழுவிலும் மூவாயிரத்து 500 இல் இருந்து 40 ஆயிரம் கலைஞர்கள் இருப்பார்கள். அவர்களுடன் அலங்கார ஊர்திகளும் திருவிழாவில் பேரணியாகச் செல்லும். ஒவ்வொரு குழுவும் ஒரு தலைப்பை எடுத்துக்கொண்டு அதற்கேற்ப உடைகள் அணிந்து நடனமாடுவர். (ற)

## புகுஷிமாவில் இருந்து கதிரியக்க நீர் கசிவு

டோக்கியோ, பெப்.22
ஜப்பானின் புகுஷிமா அணு உலையிலிருந்து 100 தொன் அளவுக்குக் கதிரியக்கத்துடன் கூடிய நீர் கசிந்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள டோக்கியோ எலெக்ட்ரிக் பவர் நிறுவனம், "நீர் களஞ்சியப் படுத்தப்பட்ட நீர்த் தொட்டியின் ஒரு வால்வு தவறுதலாகத் திறக்கப்பட்டுள்ளது. 'டாய்ச்சீ' எனப்படும் அணு உலையில் இருந்தே இந்தக் கசிவு அதிகளவில் ஏற்பட்டுள்ளது" என்று தெரிவித்துள்ளது.
அதேவேளை தற்போது குறித்த நீரைச் சுத்திகரிக்கும் பணி நடந்து வருவதாக உலையை நிர்வகித்து வரும் ரெப்கோ நிறுவனம் கூறியுள்ளது.
இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள அந்த நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் மசயுகி ஒனோ "இந்தச் சம்பவத்துக்கு மன்னிப்பு கோருகின்றோம். இதுபோல் இனி மேலும் நடக்காமல் இருக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன" என்று தெரிவித்துள்ளார். (ற)

## எண்ணெய் வயல்களை தகர்ப்போம்

*நைஜீரிய அரசுக்கு தீவிரவாதிகள் மிரட்டல்*

கானோ, பெப்.22
நைஜீரியாவில் உள்ள எண்ணெய் வயல்கள் நிறைந்த பகுதிகள் மீது தாக்குதல் நடத்தப் போவதாக போகோ ஹறாம் தீவிரவாத அமைப்பு மிரட்டல் விடுத்துள்ளது.
இதுகுறித்து போகோ ஹறாம் தீவிரவாத அமைப்பின் தலைவர் அபுபக்கர் ஷெகாவ் ஒரு காணொலிப் பதிவை வெளியிட்டுள்ளார். அந்தக் காணொலியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
"நைஜீரியா நாட்டின் எண்ணெய் வயல்கள் நிறைந்த பகுதியான நைஜரில் விரைவில் தாக்குதல் நடத்தப்படும். அங்குள்ள எண்ணெய் வயல்களில் குண்டுகள் வெடிக்கும்" என்று அவர் தெரிவித்துள்ளார்.
அதேவேளை, இஸ்லாமிய மதகுரு அடம் அல்பானியை கடந்த இரு வாரத்துக்கு முன்னர் கொலை செய்தது தமது அமைப்பினர்தான் என்பதை ஒப்புக் கொண்டுள்ள அபுபக்கர், நைஜீரியாவில் உள்ள பிற இஸ்லாமிய மதத் தலைவர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (ற)

# அணு உலை விவகாரம்; இறுதிப் பேச்சுக்கு தயார்

*ஈரான் அரசு அறிவிப்பு*

தெஹ்ரான், பெப்.22
தமது அணு உலை விவகாரம் தொடர்பாக உலக நாடுகளுடன் இறுதிக் கட்டப் பேச்சுக்களை நடத்துவதற்கு தயாராக உள்ளோம் என்று அறிவித்துள்ளது ஈரான்.
இறுதிப் பேச்சுக்கான திட்ட வரைவு குறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே ஈரானின் துணை வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்ஸி இவ்வாறு அறிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் கூறியுள்ளதாவது,
"உலக வல்லரசு நாடுகளுடன் தலைநகர் தெஹ்ரானில் நடைபெற்ற 2 நாள் பேச்சுக்களுக்குப் பின்னர் ஈரானின் அணு உலை தொடர்பான இறுதிப் பேச்சுக்கான திட்டவரைவு வரையப்பட்டது. அதற்கு ஒப்புதல் வழங்கியுள்ள ஈரான் இறுதிக் கட்டப் பேச்சுக்களுக்கு தயார் நிலையில் உள்ளது" என்று தெரிவித்துள்ளார்.



*ஈரானின் துணை வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்ஸி*

ஈரான் தனது அணு சக்தித் திட்டங்களை அணு ஆயுதத் தயாரிப்புகளுக்காகவே பயன்படுத்தி வருகின்றது என்று அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. இந்தநிலையில் ஈரான் ஜனாதிபதியாக ஹஸன் ரொஹானி பதவியேற்ற பின்னர், அந்நாட்டின் வெளியுறவுக் கொள்கையில் அதிரடி மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றார். அதன் விளைவாக அணு சக்தித் திட்டங்கள் தொடர்பாக மேற்குலக நாடுகளுடன் விட்டுக் கொடுப்புக்களுடன் கூடிய பேச்சுக்களை அவர் தலைமையிலான அரசு மேற்கொண்டு வருகின்றது. (ற)

## அமெரிக்காவில் சூடு 4 பேர் உயிரிழப்பு

கலிபோர்னியா, பெப்.22
அமெரிக்காவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் 4 பேர் உயிரிழந்துள்ளனர்.
கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள அல்டுராஸ் என்னும் பகுதியில் உள்ள மலைவாசிகளின் தலைமை அலுவலகத்துக்குள் நுழைந்த ஒருவரே திடீரெனத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளார். அதில் இரு ஆண்களும், இரு பெண்களும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் ஒருவர் அங்குள்ள மலைவாழ் இனமொன்றின் தலைவராவார்.
துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர் 42 வயதுடைய ஷெரி ரொயட்ஸ் என்று இனங்காணப் பட்டுள்ளார்.
எனினும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. இந்தச் சம்பவம் குறித்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற)

## மறைமுகப் பேச்சுகளை நடத்தியது அமெரிக்கா

*தலிபான் அமைப்பு தெரிவிப்பு*

இஸ்லாமாபாத், பெப்.22
தம்மிடம் கைதியாக உள்ள அமெரிக்க இராணுவ அதிகாரியை விடுவிப்பதற்காக அமெரிக்கா தம்முடன் மறைமுகப் பேச்சுக்களை நடத்தியுள்ளது என்று தெரிவித்துள்ளார் தலிபான் அமைப்பின் மூத்த தலைவர் ஒருவர்.
தலிபான்களின் வசமுள்ள தமது இராணுவ அதிகாரியை விடுவிக்கும்வரை அந்த அமைப்புடன் பேச்சுக்கள் எதனையும் நடத்தப் போவதில்லை என்று அமெரிக்கா அறிவித்துள்ள நிலையிலேயே இந்தத் தகவலைக் கசிய விட்டுள்ளது தலிபான் அமைப்பு.
"இராணுவ அதிகாரியான பெர்க்டாலை விடுவிப்பதற்குப் பதிலாக, அந்நாட்டு குவாண்டனாமோ சிறையில் இருக்கும் 5 மூத்த தலிபான் நிர்வாகிகளை விடுவிப்பது குறித்து எம்மிடம் அமெரிக்க அரசு மறைமுகப் பேச்சுக்களை நடத்தியது" என்று தலிபான் அமைப்பின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அமெரிக்க அதிகாரி ஒருவர்,
"தலிபான்களுடன் பேச்சு நடத்தப்பட்டது என்று கூறப்படுவது குறித்து எந்தக் கருத்தும் தெரிவிக்க முடியாது. குவாண்டனாமோ சிறையில் உள்ள தலிபான்களை விடுவிப்பது தொடர்பாக அமெரிக்க அரசு பரிசீலித்து வருகிறது" என்று தெரிவித்துள்ளார்.
ஆப்கன்-பாகிஸ்தான் எல்லையில் 2009ஆம் ஆண்டு தலிபான்களால் பெர்க்டால் கடத்தப்பட்டார். இந்தச் சம்பவம் நடந்து 5 ஆண்டுகள் கழிந்துள்ள நிலையில் பெர்க்டால் உயிருடன் உள்ளதான காணொலியைக் கடந்த டிசெம்பர் மாதம் தலிபான் அமைப்பு வெளியிட்டிருந்தது. (ற)

## உக்ரைன் வன்முறைகளில் 75 பேர் வரை உயிரிழப்பு

கீவ், பெப்.22
உக்ரைனில் நடைபெற்று வரும் அரச எதிர்ப்புப் போராட்டங்களால் இதுவரை 75 பேர் வரை உயிரிழந்துள்ளனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.
அரச எதிர்ப்பாளர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே கடும் மோதல்கள் நடைபெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வன்முறைகளில் 21 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.
255க்கும் அதிகமானவர்கள் காயடைந்துள்ள நிலையில் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்து வருகின்றனர். இதுவரை 75 பேர் வரை உயிரிழந்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. எனினும் அதுகுறித்து உறுதியான தகவல்கள் எதனையும் பெறமுடியவில்லை. (ற)

## அரிசி மானியம் கோரி விவசாயிகள் போராட்டம்

*ஸ்தம்பித்தது பாங்ஹொக் விமான நிலையம்*

பாங்ஹொக், பெப்.22
அரிசிக்கு மானியம் வழங்குமாறு கோரி தாய்லாந்து விவசாயிகள் அங்குள்ள விமான நிலையத்தில் உழவு இயந்திரங்களுடன் போராட்டம் நடத்தியுள்ளனர்.
அந்நாட்டுத் தலைநகர் பாங்ஹொக்கில் உள்ள மெயின் விமான நிலையத்திலேயே அவர்கள் போராட்டம் நடத்தியுள்ளனர். சுமார் ஒரு லட்சத்துக்கும் அதிகமான விவசாயிகள் திரண்டு போராட்டம் நடத்தியதால் அங்கு பெரும் பரபரப்பு நிலவியது.
விமான நிலையத்தைச் சுற்றி முகாம்கள் அமைத்துத் தங்கியிருக்கும் விவசாயிகள் அங்கு தொடர்ந்து போராட்டத்தை முன்னெடுக்கப் போவதாகவும் அறிவித்துள்ளனர். (ற)

# வெல்லுங்கள் கொண்டா...டுங்கள்

உதயன் சூரியகாந்தி தரும் பரிசு மழையில் நனையுங்கள்

வெற்றி நிச்சயம்

கொண்டாட்டம் குதூகலம்

வாரம் 50 10 வாரங்களுக்கு

## முதல் வார வெற்றியாளர்கள்

### ரூ.4500 பெறுமதியான 3 பரிசு கூப்பன்கள்

Kiruba Learners Driving School

01. வினாசித்தம்பி சூரியகுமார்
மன்னார் வீதி, பூவரசன் குளம், வவுனியா,

02. சுப்பிரமணியம் எஸ்தர்
இல 02, சீ.எஸ்.ஐ.வீதி , ஜெயபுரம் தெற்கு, பூநகரி.

03. திருமதி ஆர்த்தி சுதர்சன்
(தொழில்நுட்பக்கிளை), மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு.

### ரூ.1000 பெறுமதியான 15 பரிசு கூப்பன்கள்

லலிதா ஜுவலரி · Rasi Collections · Food City

01. சதீஸ்குமார் சஜீபன்
223/ 77, 7 ஆம் ஒழுங்கை, கோயில் புதுக்குளம்,வவுனியா.
02. கனகசபாபதி ரகுநாத்
இல 247, ஆனந்தபுரம், கிளிநொச்சி,
03. ஜெயதிலகம் சாமுவேல் தேவதயாளன்
சாமியன் அரசடி, கரவெட்டி,
04. யோ.சேப்ரிவன்சன்
கூவில், புலோலி தெற்கு, புலோலி,
05. உ.யாழினி
நாவற்காடு, அச்சுவேலி,
06. வாரித்தம்பி நித்தியகலா
கைதடி மேற்கு, நேவையூர்,
07. மரியதாஸ் அருள்ராஜ்
3 ஆம் வட்டாரம், மண்டைதீவு,
08. கு.தயாமினி
செல்வம் மெக்கானிக், இணுவில் மேற்கு.
09. சுந்தரலிங்கம் சோபியா
தொட்டிலடி மத்தி, சண்டிலிப்பாய்,
10.நடராசா பொன்னம்பலம்
உப தபாலகம், மல்லாகம்,
11. திருமதி டயாழினி ரஜித்குமார்
ஆடியம்பிட்டி வீதி, சாவகச்சேரி,
12. தர்மசந்திரன் ரேணுகா
80/ 1 பெரிய கடை, உப்பள வீதி , மன்னார்,
13. திருமதி வளர்மதி மகவதாஸ்
3 ஆம் வட்டாரம், முள்ளியவளை கிழக்கு, முல்லைத்தீவு,
14. நித்தியானந்தன் சங்கீதா
மீசாலை மேற்கு, மீசாலை,
15. ருக்மணிதேவி ஆறுமுகம்
சிவன் வீதி, ஆவரங்கால்.

### ரூ.500 பெறுமதியான 17 பரிசு கூப்பன்கள்

செந்தூர் குமரன் களஞ்சியம் · லக்கி பான்ஸி ஹவுஸ் · முருகன் ஸ்ரோர்ஸ் · கண்ணன் களஞ்சியம் · கோகில்ஸ் பேபி நீட்ஸ் · Green Grass

1. நிசங்கா சிவயோகநாதன்
முருகன் கோயிலடி, நெல்லியடி, கரவெட்டி.
2. யோசெப் றொமேறோ
கூவில் புலோலி மேற்கு, புலோலி, பருத்தித்துறை.
3. குணசேகரன் லலிதகுமாரி
இல.603, செல்வாநகர், கிளிநொச்சி.
4. கணேசமூர்த்தி ஆதவன்
காசிப்பிள்ளை கறாஜ், முல்லைத்தீவு, மாங்குளம்.
5. ஜெய்கிஷோர் அனெற்ராகினி குரூஸ்
கொவ்வங்குளம், நானாட்டான், மன்னார்.
6. தங்கராசா சுஜீந்திரன்
அம்பன்,குடத்தனை.
7. குணரட்ணம் உமாகாந்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.
8. திருமதி விஜயலட்சுமி நாவேந்தன்
46/3 அம்மன் வீதி, கந்தர்மடம்,
9. சுதாகரன் ரமணன்
347/5 கோயில் வீதி, நல்லூர்.
10. முகமது பாரூக் முகமது இர்ஷாத்
குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்.
11. மகேஸ்வரலிங்கம் சுயம்புலிங்கம்
சிவன்கோயிலடி, கே.கே.எஸ்.வீதி, இணுவில் கிழக்கு, இணுவில்.
12. திருமதி மாலதி கிருஷ்ணதாசன்
ஏழாலை கிழக்கு, ஏழாலை.
13. வல்லிபுரம் குகேந்திரன்
கைதடி தெற்கு, கைதடி.
14. கைலநாதன் தனுஷன்
ரூடமஹால், தேவாலய வீதி, சங்கானை.
15. சின்னத்தம்பி மனோகரி
கணேஸ்வரம், அளவெட்டி.
16. வே.ஓம்ஹரி செல்வபிரகாசநாயகம்
வட்டுவினி ஒழுங்கை, இணுவில் மேற்கு, இணுவில்.
17. நளினி சிவசர்மா
இல.184, பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.

### ரூ.200 பெறுமதியான 15 பரிசு கூப்பன்கள்

பொதிகை மல்ரி சென்ரர் · அறிவொளி புத்தகசாலை · தாயன்பு புத்தகசாலை

01. அமுதா கிருபாகரன்
இல.06, சேர் .பொன் இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
02. திருமதி சிவரஞ்சினி தவக்குமார்
கலைமணி வீதி, கட்டப்பிராய், யாழ்ப்பாணம்.
03. திருமதி ஜெயகுமாரி தயாளன்
இல.58/ 1 சிவன் புதுவீதி , நல்லூர். யாழ்ப்பாணம்.
04. மேரி நீற்ரா பாலேந்திரா
இல. 23/ 27 குளக்கட்டு வீதி, வைரவப புளியங்குளம், வவுனியா.
05. இராசலிங்கம் ஸ்ரீதரன்
வற்றாப்பளை, முள்ளியவளை, முல்லைத்தீவு.
06. நாகரத்தினம் செந்தில்ராசன்
இல. 14 கொல்ல விளாங்குளம், வவுனிக்குளம், முல்லைத்தீவு.
07. ஜெயந்தன் வதனி
இல,300 மாயவனூர், வட்டக்கச்சி, கிளிநொச்சி.
08. குணரத்தினம் கௌதமன்
இல,59 படிவம் 01, சேமமடு,ஓமந்தை, வவுனியா.
09. இளையதம்பி வீரசிங்கம்
இல. 9/ 2 இராசதுரை வீதி, வைரவப்புளியங்குளம், வவுனியா.
10. திருமதி ஜெயந்தி அச்சுதன்
வீரப்பதிராஜன், கரணவாய் தெற்கு, கரவெட்டி.
11. சிவசுப்பிரமணியம் பானுராஜா
மூத்தவிநாயகர் கோயிலடி, கரணவாய், கரவெட்டி.
12. கந்தசாமித்துரை சுந்தரேஸ்வரன்
இல 109, விநாயக முதலியார் வீதி, பருத்தித்துறை.
13. விநாயகமூர்த்தி நிதுஷா
பண்ணையம்பதி, புலோலி வடக்கு, பருத்தித்துறை.
14. வெற்றிவேலு எழிலரசி
புலோலி வடமேற்கு, தம்பசிட்டி, பருத்தித்துறை.
15. மைக்கல் ஆஞ்சலி
செல்வ வாசா, மணல் ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை.

உதயனுடன் இணைந்திருக்க மறவாதீர்கள்

# ஆயுள்வேத வைத்தியத்தின் மூலம் நீண்ட காலம் நலமாக வாழ முடியும்

*வவுனியா அரச அதிபர் தெரிவிப்பு*

வவுனியா, பெப்.22

சித்த ஆயுள்வேத வைத்தியத்தின் மூலமாக நீடித்த காலம் நலத்துடன் வாழமுடியும். பக்க விளைவுகள் இல்லாத, இயற்கையான மூலிகைகளைக் கொண்டு மருந்துகளைத் தயாரித்து வைத்தியர்கள் சிறந்த சேவையை மேற்கொள்கின்றனர்.

இவ்வாறு கடந்த 18 ஆம் திகதி வவுனியா சித்த ஆயுள்வேத பாதுகாப்புச் சபையும், முதியோர் சங்கமும் இணைந்து நடத்திய இலைக்கஞ்சி அறிமுகம் மற்றும் இலவச ஆயுள்வேத மருத்துவ முகாம் ஆகியவை தொடர்பான நிகழ்வுகளில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வவுனியா அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஆரம்பகாலம் தொட்டு இந்த ஆயுள்வேத வைத்தியம் மக்கள் மத்தியில் காணப்பட்டது. ஆனால் கால மாற்றத்தின் விளைவாக மக்கள் இதனை நாடிச் செல்வது குறைந்து காணப்படுகின்றது. இயற்கையான, பக்க விளைவுகள் இல்லாத இந்த வைத்திய முறைகளைத் தொடர்ச்சியாக நாம் கடைப்பிடித்து வருவோமானால்நீடித்த ஆயுளுடன் ஆரோக்கியமாக வாழ முடியும் -என்றார்.

இந்த நிகழ்வில் வவுனியா பிரதேச செயலர் க.உதயராசா, மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர்ஸ்வன், வவுனியா சித்த ஆயுள்வேத பாது காப்புச் சபையின் தலைவர் வைத்தியர் க.இராமச்சந்திரன், செயலாளர் வைத்தியர் ப.சத்தியநாதன் ஆகியோருடன் பல சித்த ஆயுள்வேத வைத்தியர்களும் கலந்து சிறப்பித்தனர். (க-402)



வவுனியா அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திரவின் உயர் குருதி அழுத்தத்தைப் பரிசோதனையிடுகிறார் வைத்தியர் ஒருவர்.

## கிளிநொச்சியில் விளையாட்டு விழா

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுவிழா நடைபெறவுள்ளது. இந்த விளையாட்டு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை பி.ப.3 மணிக்கு கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன், வயைக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் ச.சதானந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (க-18)

## சிரமங்களுக்கு உள்ளாகும் ஆசிரியர்கள்

கிளிநொச்சி கண்டாவளை கல்விக் கோட்டத்தில் கீழ் உள்ள புன்னை நீராவிப் பாடசாலைக்குச் செல்வதில் ஆசிரியர்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து காலையில் விசுவமடு வந்து சேரும் இவர்கள் 3 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள இந்தப் பாடசாலைக்கு நடந்து செல்கின்றனர். புன்னைநீராவி, மயில்வாகனபுரம் கிராமங்களை இலக்காகக் கொண்டு பஸ் சேவை இடம்பெறுமானால் இந்தப் பகுதி மக்களின் போக்குவரத்துச் சிரமம் ஓரளவு நீங்கி விடுமெனக் கூறப்படுகின்றது. (க-18)



சேதமடைந்து காணப்படும் மாங்குளம் பொதுச் சந்தை.

# பொதுச் சந்தை வசதியை விரைவில் ஏற்படுத்தவும்

*மாங்குளம் மக்கள் மீண்டும் கோரிக்கை*

மாங்குளம், பெப்.22

மாங்குளம் பொதுச் சந்தையைப் புனரமைக்க வேண்டும் என மீண்டும் இந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மாங்குளம் பிரதேசத்தில் மீள்குடியமர்வு இடம்பெற்றதுடன் ரயில் நிலையம் அமைக்கப்பட்டு ரயில் சேவையும் இடம்பெற்று வருகின்றது.

மேலும் இங்குள்ள பிரதான வீதிகள் காப்பெற் இடப்பட்டு வாகனப் போக்குவரத்துக்களும் அதிகளவில் இடம்பெற்று வருகின்றன.

மாங்குளத்தின் மையப் பகுதியில் தற்போது 400 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

ஆனால் சந்தை வசதி இல்லாததால் இந்த மக்கள் 12 கிலோ மீற்றருக்கும் அப்பாலுள்ள மல்லாவிப் பொதுச் சந்தைக்குத் தாம் உற்பத்தி செய்யும் பொருள்களை மிகுந்த சிரமத்தின் மத்தியில் எடுத்துச் சென்று விற்பனை செய்து வருகின்றனர்.

மேலும் தமக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்வதிலும் இவர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இங்கு மீளக்குடியமர்வு இடம்பெற்று நான்கு வருடங்கள் கடந்த நிலையிலும் இதுவரை பொதுச் சந்தையொன்று அமைக்கப்படவில்லை. முன்னர் அமைந்திருந்த சந்தை போரின்போது சேதமடைந்தது. ஆனால் அதைப் புனரமைப்பதற்கான நடவடிக்கை எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

இந்த நிலையில் தமது சிரமங்களை உணர்ந்து சேதமடைந்த சந்தையைப் புனரமைப்புச் செய்தோ அல்லது புதிய சந்தையொன்றை அமைத்தோ உதவுமாறு அப்பகுதி மக்கள் மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-415)

# சிறுபோக நெற்செய்கை நிறுத்தப்படும் அபாயம்

*கிளிநொச்சி பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் அறிவிப்பு*

கிளிநொச்சி, பெப்.22

காலநிலை பொய்த்துப் போனதால் சிறுபோக நெற்செய்கை நிறுத்தப்படும் அபாய நிலை உருவாகியுள்ளதுடன் காலபோக நெற் செய்கைக்குரிய விதை நெல்லைக் கூடப் பெற முடியாத அவலநிலை உருவாகியுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் என்.சுதாகரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி அரச செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விவசாயக் குழுக் கூட்டத்தில் இதனை அவர் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் ;

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய வன்னி மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக இங்குள்ள சகல குளங்களும் வற்றிய நிலையில் குறைந்த அளவு நீருடன் காட்சியளிக்கின்றன.

கிளிநொச்சியின் கரியாலை நாகபடுவான் குளம் ஒரு அடி நீரை மட்டுமே கொண்டுள்ளது. இரணைமடுக் குளத்தில் 15 அடி மட்டம் வரையான நீர் மட்டுமே உள்ளது. இதனால் மிக மோசமானதொரு வறட்சி நிலையைக் குளங்கள் கொண்டுள்ளன.

குடமுருட்டிக் குளத்தைத் தவிர இங்குள்ள அனைத்துக் குளங்களின் கீழும் சிறுபோக நெற்செய்கை, உப உணவுப் பயிர்ச் செய்கை ஆகியவற்றை மேற்கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளது.

பங்குனி மாதத்தில் பெய்யும்மழையும் பெய்யாவிட்டால் கால்நடைகளுக்கும் நீர் கிடைக்காத அபாயநிலை உருவாகும் எனவும் அவர் தெரிவித்தார். (க-18)

# கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் இம்முறை 40 வீதம் நெற்பயிர் அழிவு

*கிளிநொச்சி அரச அதிபர் தகவல்*

கிளிநொச்சி, பெப் .22

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த பெரும் போகத்தில் மேற்கொள்ளப்பட்ட நெற் செய்கையில் 40 வீதமான நெற்பயிர்கள் அழிவடைந்துள்ளதாக கிளிநொச்சி அரசஅதிபர்திருமதிறூபவதிகேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி அரச செயலகத்தில் நேற்று முன்தினம் 20 ஆம் திகதி இடம்பெற்ற மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

கிளிநொச்சியில் 17,492 ஏக்கரில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. இதில் சுமார் 3,008 ஏக்கர் அளவிலான பயிர்களுக்கு அழிவு ஏற்பட்டுள்ளது. இதைப் போன்று அக்கராயன் குளத்தில் 4,830 ஏக்கருக்கு 1,460 ஏக்கர் பயிர்களும், இராமநாதபுரத்தில் 4,141 ஏக்கருக்கு 450 ஏக்கர் பயிர்களும், உருத்திரபுரத்தில் 7,707 ஏக்கருக்கு 2,762 ஏக்கர் பயிர்களும், பூநகரியில் 12,612 ஏக்கருக்கு 10,145 ஏக்கர் பயிர்களும், புளியம் பொக்கணையில் 13,638 ஏக்கருக்கு 6,879 ஏக்கர் பயிர்களும், முழங்காவிலில் 8,697 ஏக்கருக்கு 6,722 ஏக்கர் பயிர்களும், பளையில் 6,600 ஏக்கருக்கு 6,442 ஏக்கர் பயிர்களும் அழிவடைந்துள்ளதாகக் கமநல சேவைத் திணைக்களங்களின் புள்ளி விவரங்கள் மூலமாக அறிய முடிகின்றது. இருப்பினும் அழிவுகள் ஏற்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளிலும் எஞ்சிய பயிர்களின் அறுவடை மிகக் குறைந்த அளவில் இடம்பெறுவதால் புள்ளி விவரங்களில் மாற்றங்கள் ஏற்படலாமெனவும் அவர் தெரிவித்தார். (க-18)

# மக்களுக்கு பயன் தரும் குடிதண்ணீர்க் கிணறு

துணுக்காய், பெப்.22

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட உயிலங்குளம் 50 வீட்டுத்திட்ட மாதிரி கிராமத்தில் இராமநாதன் அறக் கொடை நிலையத்தினரால் குடிதண்ணீர்க் கிணறு ஒன்று அமைக்கப்பட்டதால் மக்கள் பெரும் பயனடைந்து வருகின்றனர்.

துணுக்காய் உயிலங்குளம் கிராமத்தில் மீள்க்குடியமர்வு இடம்பெற்ற பின்னர் மிகவும் வறிய நிலையிலுள்ள 50 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் பிரதேச சபையினரால் கிணறு ஒன்றும் அமைத்து வழங்கப்பட்டது.

மிகவும் வறட்சியான கால நிலை யால் கிணற்று நீர் வற்றியதால் பிரதேச சபையினரால் பவுசர் மூலம் குடிதண்ணீர் வழங்கப்பட்டது. இந்த நிலையில் இராமநாதன் அறக் கொடை நிறுவனத்தினர் இந்த மக்களின் நிலை கண்டு 4 லட்சத்து 71 ஆயிரம் ரூபா செலவில் ஒரு கிணற்றை அமைத்து வழங்கினர். தற்போது மக்கள் இந்தக் கிணற்றில் குடிதண்ணீர் பெற்றுப் பயனடைந்து வருகின்றனர். (க-415)



கிணற்றிலிருந்து நீரைப் பெறும் மக்கள்

# மண் அகழ்வு தொடர்பாக கிராஞ்சியில் முறைப்பாடு

பூநகரி, பெப்.22

கிளிநொச்சி மாவட்டம் பூநகரியின் கிராஞ்சி கிழக்குப் பகுதிகளான இலவன்குடா, பிருந்தாவனம் ஆகிய இடங்களில் இராணுவத்தினர் தொடர்ந்து மணல் அகழ்வில் ஈடுபடுவதாகக் கிராம மக்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.


நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன், மு.சந்திரகுமார், பூநகரிப் பிரதேச செயலர், கிராஞ்சி கிராம அலுவலர் ஆகியோரிடம் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இராணுவத்தினர் மணல் அகழ்வில் ஈடுபட்டுள்ள பகுதி யூடாக கடல் நீர் கிராமத்தினுள் புகக்கூடிய அபாய நிலையும் உருவாகியுள்ளது.

கிராஞ்சில் அகழ்ந்தெடுக்கப்படும் மணல் ஏ-32 வீதியில் உள்ள இராணுவத்தினரின் முகாமுக்கும், பூநகரி, பல்லவராயன்கட்டு, பாலாவி போன்ற பகுதிகளுக்கும் இராணுவத்தினரால் எடுத்துச் செல்லப்படுவதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு இந்த இடத்தில் இராணுவத்தினர் மண் அகழ்வில் ஈடுபட்டபோது பூநகரிப் பிரதேச செயலர் பொலிஸாரின் உதவியுடன் அதனைத் தடுத்து நிறுத்தியதாகவும் கிராஞ்சி மக்கள் தெரிவித்தனர்.

ஆனால் தற்போது இராணுவத்தினர் கூடாரம் அமைத்து மண் அகழ்வில் ஈடுபடுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (க-18)



புதிய உப தபாலகம்

# திறப்பு விழாவுக்காக காத்திருக்கும் தபாலகம்

மல்லாவி, பெப்.22

மாந்தை கிழக்கு பாலிநகர் கிராமத்தில் புதிதாக அமைக்கப் பட்ட உப தபாலகம் திறந்து வைக்கப்படாமை குறித்து இந்தப் பகுதி மக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேலும் புதிய உப தபாலகம் திறந்து வைக்கப்படாமையால் தொடர்ந்தும் தபாலகம் தனியார் வீடொன்றில் இயங்குவதால் மக்கள் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

தபாலகக் கட்டடத்தைத் திறப்பதற்குத் தடையாக உள்ள காரணத்தை அறியாத நிலையில் மக்கள் அது திறக்கப்படும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருப்பதாகவும் கூறப்படுகின்றது. (க-415)

# மாதங்கள் பல கடந்தும் இன்னும் இல்லை நிவாரணம்

## தொடர்கிறது சம்பூர் மக்களின் அவலம்

திருகோணமலை,பெப்.22

திருகோணமலை மாவட்டம், சம்பூர் பிரதேசத்தில் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு மீள் குடியேற்றத்தின் பின்னர் கிடைக்க வேண்டிய நிவாரண உதவிகள் பல மாதங்கள் கடந்தும் இதுவரை கிடைக் கவில்லைஎன்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் குமாரசாமி நாகேஸ்வரன் கவலை தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நவரெத்தினபுரம் , கூனித்தீவு, சூரைக்குடா ஆகிய இடங்களில் இதுவரை 307 குடும்பங்கள் மீள் குடியேற்றப்பட்டுள்ளன.

2005 ஆம் ஆண்டு போர்க் காலத்தில் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியிருந்த சம்பூர் மற்றும் அதனை அண்டிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள், உயர் பாதுகாப்பு வலயம் மற்றும் இந்திய உதவியுடனான அனல் மின் உற்பத்தி நிலையம் என அவர்கள் வாழ்ந்த பிரதேசம் அரசால் அடையாளப்படுத்தப்பட்டதால் போருக்கு பின்னரும் அவர்களது மீள்குடியேற் றத்தில் தடை ஏற்பட்டிருந்தது.

எனினும் கடந்த ஆண்டு மார்ச் மாதம் தொடக்கம் செப்ரெம்பர் வரையிலான காலப்பகுதியில் நவரத்தினபுரம், கூனித்தீவு, சூரைக்குடா ஆகிய கிராமங்களில் 307 குடும்பங்கள் மீள்குடியேற் றப்பட்டுள்ளார்கள்.

சம்பூர் கிழக்கு மற்றும் மேற்கு, கடற்கரைச்சேனை ஆகிய கிராமங்களை சேர்ந்த சுமார் 800 குடும்பங்களின் மீள்குடியேற்றம் தொடர்ந்தும் தடைப்பட்டுள்ள நிலையில் அந்தக் குடும்பங்கள் தற்போதும் இடைத் தங்கல் முகாம்களிலும் உறவினர் வீடுகளிலுமே தங்கியுள்ளனர்.



சம்பூரில் மீள்குடியேற்றப்பட்ட மக்களின் குடிசையொன்று

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் போருக்கு பின்னர் மீள் குடியேற்றப்பட்ட குடும்பங்களுக்கு ஆரம்பத்தில் அரசால் ஒரு வருட காலத்துக்கு உலர் உணவு நிவாரணம் வழங்கப் பட்டு வந்தது. 2010 ஆம் ஆண்டு அந்த நிவாரணம் 6 மாதங்களாக மட்டுப்படுத்தப் பட்டு வழங்கப்பட்டது.

ஆனால் சம்பூர் பிரதேசத்தின் மீள் குடியேற்றம் இடம் பெற்ற கிராம மக்களுக்கு ஒரு மாதம் கூட அந்த நிவாரணம் வழங் கப்படவில்லை.

**திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை தற்போது ஐ.நா வின் அகதிகளுக்கான உயர் தூதரகத்தின் பிரசன்னம் அங்கு இல்லை.**

மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விவகாரம் சுட்டிக்காட் டப்பட்ட போதெல்லாம் உலக உணவுத் திட்டத்தின் உதவி நிறுத்தம் மற்றும் அரசிடம் நிதித்தட்டுப்பாடு எனக் காரணம் கூறி இந்தக் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க முடியாது என பதில் தரப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை தற்போது ஐ.நாவின் அகதிகளுக்கான உயர் தூதரகத்தின் பிரசன்னம் அங்கு இல்லை. அவர்களது பிரசன்னமும் கண்காணிப்பும் இருந்திருந்தால் சம்பூர் பிரதேசத்தில் மீள்குடியேற்றம் இடம் பெற்றுள்ள குறித்த மூன்று கிராமங்களைச் சேர்ந்த மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதில் முன்னேற்றம் ஏற்பட வழிவகுக்கப்பட்டிருக்கும்- என்றார். (ச)



விபத்தில் சிதறிய வாகனம்

# மின் கம்பத்தின் மீது மோதியது வாகனம்

### ஒருவர் சாவு; மற்றொருவர் காயம்

அம்பாறை,பெப்.22

அம்பாறை மாவட்டம், அட்டாளைச்சேனை, தைக்கா நகரில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து அட்டாளைச்சேனைக்கு பயணித்துக் கொண்டிருந்த வாகனம் ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 3 மணிக்கு தைக்கா நகர் பிரதான வீதியில் அமைந்துள்ள மின் கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளாகி உள்ளது.

இந்தச் சம்பவத்தில் வானை செலுத்திச் சென்ற அம்பாந் தோட்டையைச் சேர்ந்த 56 வய தான சாரதி உயிரிழந்துள்ளார். மற்றொருவர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எல்.எம். நஸீரின் சகோதரர். அவர் வெளி நாட்டில் இருந்து நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தாயகம் திரும்பி, குறித்த வகனத்தில்தனது சொந்த ஊரான அட்டாளைச்சேனைக்கு பயணித்துக் கொண்டிருந்த போத இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (ச-104)

# விபத்தைப் பார்க்க சென்றவர் காயம்

அட்டாளைச்சேனையில் வெள்ளிக்கிழமை அதிகாலை இடம் பெற்ற விபத்தைப் பார்ப்பதற்குச் சென்ற அட்டாளைச்சேனை 16 ஆம் பிரிவு வட்டானை வீதியைச் சேர்ந்த சாகுல் ஹமீது கதீஸா (வயது- 71) என்பவர்மீது மின்சாரக் கம்பி விழுந்தால், அவர் காயமடைந்து அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவரது உடம்பின் ஒரு பகுதி எரிகாயத்துக்கு உள்ளாகியுள்ளதாகப் பொலிஸார் கூறினர். (ச)

# கிராமத்துக்குள் புகுந்தது 4 அடி நீளமான முதலை

மட்டக்களப்பு,பெப்.22

களுவாஞ்சிக்குடி கிராமத்தினுள் வியாழக் கிழமை அதிகாலை சுமார் 4 அடி நீளமான முதலை ஒன்று புகுந்துள் ளது.



களுவாஞ்சிக்குடியில் பிடிக்கப்பட்ட முதலை.

இதனை அறிந்த மக்கள் களுவாஞ்சிக்குடி பொலிஸாருக்கு விடயத்தை தெரிவித்ததையடுத்து பொலிஸார் அந்த இடத்துக்கு விரைந்து சென்று பொதுமக்களின் உதவியுடன் முதலையைப் பிடித்து மட்டக்களப்பு வாவி யில் விட்டுள்ளனர். (ச-32)

**பொதுமக்களின் உதவியுடன் முதலை பிடிக்கப்பட்டு மட்டக்களப்பு வாவியில் விடப்பட்டது.**




**பதவி வெற்றிடம் - பணிப்பாளர்**

தேசிய மற்றும் சர்வதேசத்தால் அங்கீகரிக்கப்பட்ட நாடு முழுவதும் வலையமைப்புடைய இலாபமீட்டும் புகழ் பெற்ற தொழில் பயிற்சி நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளையை பொறுப்பேற்று நடத்துவதற்கு பணிப்பாளர் ஒருவரைத் தேடுகின்றோம்.

இவர் ரூபா ஒரு மில்லியன் (1000,000/=) பணத்தை வைப்பிடக் கூடியவராக இருக்க வேண்டும். இலாபத்தில் 50% பணம் கொடுப்பனவாக வழங்கப்படும்.

துரித அழைப்பு: (சி/12529) (10.3.6)

0710 600 600, 0715 980 980

**வீடு விற்பனைக்கு**

மானிப்பாய், தபால் கந்தோருக்கு அருகில் உள்ள Hallock ஒழுங்கையில் ஒரு புதிய வீடு விற்பனைக்குண்டு. சகல வசதிகளும் உள்ளன.

"Owner Leaving Island"

128/31, Hallock Lane, Manipay

தொடர்பு:077 107 3887 (44912) (3.6.4)

**வீடுவளவு விற்பனைக்கு**

சாவகச்சேரி வீதி, அல்லாரை தெற்கு, கொடிகாமத்தில் 6 பரப்பு 3 குழியுடன் கூடிய காணியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 285 5860 (29782)(7.6.3)

**கடை விற்பனைக்குண்டு**

யாழ்ப்பாணம், கன்னாதிட்டி சந்தியில் அமைந்துள்ள மூன்று அறைகளுடன் கூடிய வியாபார நிலையம் (கடை) விற்பனைக்குண்டு. (44857)(7.6.3)

தொடர்பு : 077 172 7241, 077 022 2232

**$B^+$,$O^+$ சிறுநீரகம் தேவை**

இல. 71/52, ரிவர் பாங்க், தல்வத்தை, கண்டியில் வசிக்கும் க.சுதந்திர பிரசாத் அவர்களுக்கு அவசரமாக சத்திர சிகிச்சை செய்வதற்கு $B^+$, $O^+$ சிறுநீரகம் தேவை. (44941)(7.6.3)

தொடர்புகொள்ள வேண்டிய இல.

077 540 0408, 077 959 4098

உடன் உதவுபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**சிறுநீரகம் தேவை**

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் 48 வயதுடைய ஆண் ஒருவருக்கு $O^+$ குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.

(குறிப்பு: சன்மானம் வழங்கப்படும்) (44924) (10.6.3)

தொடர்புகளுக்கு:

077 500 2589, 077 2500 386

# மேற்குலக நாடுகளுக்கு எதிராகப் பரப்புரைகள்

## சுற்றுலாத்துறையை பாதிக்குமென எச்சரிக்கை

கொழும்பு,பெப்.22
மேற்குலக நாடுகளுக்கு எதிராக இலங்கை மேற்கொண்டு வரும் பரப்புரைகளால், இலங்கையின் சுற்றுலாத்துறைக்கு பாதிப்பு ஏற்படும் என்று சுற்றுலாத்துறை வட்டாரங்கள் கவலை வெளியிட்டுள்ளன.
ஐ.நா மனிதஉரிமைகள் சபையில், அமெரிக்கா, பிரிட்டன் தலைமையிலான மேற்குலக நாடுகள், இலங்கைக்கு எதிராக மூன்றாவது தீர்மானத்தைக் கொண்டு வரும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளன.
இந்தநிலையில், இலங்கை ஜனாதிபதியும், அமைச்சர்களும், அதிகாரிகளும், மேற்குலகுக்கு எதிரான பரப்புரைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.
அடுத்தமாதம் நடக்கவுள்ள தென், மேல் மாகாணசபைத் தேர்தல் பரப்புரைகளில், மேற்குலக நாடுகளுக்கு எதிரான கருத்துகள் தீவிரமாக பரப்பப்பட்டு வருகின்றன.
இதனால், சில நாடுகளேனும், இலங்கைக்குப் பயணம் செய்வது தொடர்பாக தமது நாட்டுக் குடிமக்களுக்கு பயண எச்சரிக்கை விடுக்கலாம் என்று இலங்கையின் சுற்றுலாத் துறை வட்டாரங்கள் கவலை வெளியிட்டுள்ளன.
இத்தகைய பயண எச்சரிக்கை விடுக்கப்பட்டால் அது சுற்றுலாத்துறைக்கு மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச)

**இலங்கைக்குப் பயணம் செய்வது தொடர்பாக தமது நாட்டுக் குடிமக்களுக்கு பயண எச்சரிக்கை விடுக்கலாம் என்று இலங்கையின் சுற்றுலாத் துறை வட்டாரங்கள் கவலை வெளியிட்டுள்ளன.**



பாகிஸ்தான் இந்துஸ் மோட்டர்ஸ் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட 100 டொயடா கொரலா கார்களை இலங்கை பொலிஸ் மற்றும் இராணுவத்தினரிடம் கையளிக்கும் வைபவம் நேற்றுமுன்தினம் இலங்கை பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சில் இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, இலங்கைக்கான பாகிஸ்தான் தூதர் மேஜர் ஜெனரல் காஷிம் குரைஷி, இலங்கையின் இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயா ரத்நாயக்க, இலங்கை பொலிஸ் மா அதிபர் என். கே. இலங்கக்கோன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பேஸ்புக் பாவனையில் கட்டுப்பாடுகள் அவசியம்

## கெஹலிய தெரிவிப்பு

கொழும்பு,பெப்.22
சமூக வலைத்தளமான பேஸ்புக்கால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை தடுக்கும் வகையிலான கட்டுப்பாடு இலங்கைக்கு அவசியம் என்று தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலியரம்புக்வெல தெரிவித்தார்.
எனினும் இந்த கட்டுப்பாட்டை நாட்டின் தகவல் தொழில்நுட்பத்தில் பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் எவ்வாறு செயற்படுத்தலாமென்பது குறித்து தான் ஆராய வேண்டும் என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார்.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்றுமுன்தினம் தகவல் ஊடகத்துறையமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் பேஸ்புக்கால் எமது நாட்டில் அடுத்தடுத்து ஏற்பட்ட இரண்டு உயிரிழப்புகள் குறித்து அமைச்சரிடம் கேள்வியெழுப்பப்பட்ட போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
பேஸ்புக் இன்று ஒரு சர்வதேச பிரச்சினையாகியுள்ளது. இது 95 வீத தகவல் சாதனமாகவுள்ள போதும் 5 வீதம் பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு விடயமாகவே அடையாளம் காணப்பட்டுள்ளது.
பாதிப்புகளைத் தடுக்கும் வகையில் இதன் பாவனையை இலங்கையில் தடை செய்தால் தகவல் தொடர்பாடல் பாதிக்கப்படக் கூடும். இது சமூக ஊடகத்துடன் தொடர்புபட்ட விடயமாதலால் அவதானத்துடன் கையாள வேண்டியுள்ளது.
எனவே சமூக ஊடகம் தொடர்பிலான பிரகடனத்துக்கமைய நாம் தீர்மானங்களை மேற்கொள்வோம். அது தொடர்பிலான நிலைமைகளை நான் ஆராயத்தொடங்கியுள்ளேன்-என்றார். (ச)



கெஹலியரம்புக்வெல

# பேஸ்புக் பிரச்சினைக்கு விசேட பொலிஸ் பிரிவு

கொழும்பு,பெப்.22
பேஸ்புக் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண விசேட பொலிஸ் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. பேஸ்புக் முறைப்பாடுகள் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்வதற்கு என இந்தப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது எனறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.
குற்றவாளிகளுக்கு எவ்வாறான தண்டனை விதிப்பது என்பது குறித்தும் ஆராயப்பட்டு வருகிறது என்று அவர் கூறினார்.
இலங்கையில் குற்றச் செயல்கள் இடம்பெற்றால் மட்டுமே சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.
போலியாக புகைப்படங்களை வெளியிடுதல், அவதூறு ஏற்படுத்தக் கூடிய வகையிலான தகவல்களை வெளியிடுதல், புகைப்படங்கள் மற்றும் தகவல்களை திரிபுபடுத்தி வெளியிடல் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்கள் இடம்பெற்று வருகின்றன என்று அவர் கூறினார்.
பேஸ்புக்கைப் பயன்படுத்தி குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் பற்றி விசாரணை நடத்தி அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அவர் கூறினார். (ச)



அஜித் ரோஹண

முதலாம்-ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
ஆசிரியமணி நல்லதம்பி இராஜதுரை
(ஓய்வுபெற்ற அதிபர்)

மலர்வு
01★09★1948

உதிர்வு
05★03★2013

திவசம்: 22.02.2014 (சனிக்கிழமை)

ஆண்டு ஒன்றானாலும் அப்பா!
அகலவில்லை உங்கள் நினைவு
கண் நிறைந்த உங்கள் தோற்றம்
கனவில் வந்து வருத்துதப்பா
எண்ணமெல்லாம் நிறைந்த தந்தையே!
ஏங்குகின்றோம் உங்கள் இழப்பால்
காலம் கடந்து சென்றாலும் நாங்கள்
கலங்கிய விழிகளோடுதான் வாழுகின்றோம்
மீண்டும் ஒரு பிறப்பிருந்தால்
மீள வந்து சேர்ந்திடப்பா

குடும்பத்தின் குல தெய்வமாய் குணம் நிறைந்த கணவனாய்
பாசமிகு தந்தையாய் பற்று நிறைந்த மாமனாய்
அன்பு நிறைந்த சகோதரனாய் ஆருயிர் தாத்தாவாய்
உறவினரின் பாசமலராய் ஊராரின் உத்தமனாய்
நீங்கள் வாழ்ந்த காலங்கள் எங்கள் நெஞ்சில்
பசுமையாய் நிலைத்திருக்க பானாவிடையான் பாதமதை
தினம் தினம் நாம் தொழுவோம்

7 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.
(44057)(3.6.4)
குடும்பத்தினர்.

# ஒன்பது லட்சம் ரூபா வங்கியில் கொள்ளை

கொழும்பு,பெப்.22
மத்துகம தனியார் வங்கியொன்றுக்குள் நுழைந்த ஆயுதக் குழுவினர் வங்கி ஊழியர்கள், வாடிக்கையாளர்களை ஆயுதமுனையில் அச்சுறுத்தி சுமார் 9 லட்சம் ரூபாவை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# ஆமைகளை பிடித்த ஐவர் மாட்டினர்

கொழும்பு,பெப்.22
மாரவில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹத்தினிய, ஹொரகெலே பிரதேசத்திலுள்ள குளமொன்றில் இறைச்சிக்காக ஆமைகளை பிடித்ததாகக் கூறப்படும் ஐவரை மாரவில பொலிஸார் வியாழக்கிழமை மாலை கைதுசெய்துள்ளனர்.
அவர்களிடமிருந்து 14 ஆமைகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று மாரவில பொலிஸார் தெரிவித்தனர்.
கைப்பற்றப்பட்ட ஆமைகளுடன் ஹத்தினிய பிரதேசத்தைச் சேர்ந்த சந்தேக நபர்கள் ஐவரையும் மாரவில நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.
இந்தச் சம்பவம் தொடர்பாக மாரவில பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் பரிசோதகர் அமித ரஞ்ஜித் தலைமையிலான குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)



கோப்புப்படம்

நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
ஜெயதேவி வேலாயுதம்

மண்ணில்
03.02.1941

விண்ணில்
08.03.2010

திதி: 22.02.2014 - சனிக்கிழமை
மாசி 10ஆம் திகதி அட்டமி

கோல நிலவாய் என் வாழ்வில் ஒளி தந்தீர்
அன்புருவாய் உடனிருந்து உதவிகள் புரிந்து குறைதீர்த்து வாழ வைத்தீர்
காலக்கொடுமையினால் நினைவாகிப்போய் எங்குற்றீர்
ஆண்டுகள் நான்கு ஆனதம்மா
தேடிக்கலங்குகிறேன் உங்கள் திருவதனம்
நித்தம் நித்தம் உங்கள் ஆன்மா கந்தவனத்து முருகப்பெருமான் திருவடியில்
அமைதிபெற பிரார்த்திக்கிறேன்.

“கணபதி”
வதிரி கரவெட்டி
(33373)(45.3.6)
கணவர்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# தமிழர் பிரதேச அபிவிருத்தியை முடக்கும் போக்கே தொடருமா?

அனைத்துலக நாடுகளின் அழுத்தத்தின் காரணமாகவே, நீண்ட கால இழுத்தடிப்பு, இழுபறியின் பின்னரே வடக்கு மாகாண சபை, மக்கள் வாக்குகள் மூலம் உருவானது. மிகக் குறிப்பாக இந்தியா இது விடயத்தில் அடிக்கடி இடித்துரைத்தும், கிள்ளியும் நுள்ளியும் அழுத்தம் கொடுத்ததாலேயே வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தி இந்த நாட்டில் ஜனநாயகம் நிலை நிறுத்தப்படுவதாக கொழும்பு அரசு அனைத்துலகுக்குக் காட்டியது.

எனினும், மக்களின்-வாக்காளர்களின்- பேராதர வுடன் உருவான மாகாண சபையினால் மக்கள் நலன் சார்ந்து நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளன; போடப்பட்டு வருகின்றன. மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்ட நாற்பத் தேழு தீர்மானங்களில், முப்பத்தொன்பது தீர்மானங் களைச் செயற்படுத்துவதற்கான எவ்வித ஏற்பாடு குறித்தும் தகவல் இல்லை. என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று மத்திய அரச நிர்வாகத்தினரால், சம்பந்தப்பட்ட திணைக்களங்களால் அறிவிக்கப்படவும் இல்லை.

ஆகப் பிந்தி, வடக்கு மக்களின் முக்கிய தேவைகள் சார்ந்து மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட, பலாலி, திருகோண மலை விமான நிலையங்களில் இருந்து சென்னைக்கு - தமிழ் நாட்டுக்கு நேரடி விமான சேவைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை (கொழும்பு) அரசின் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிரியங்க ஜெயரத்னா கிண்டல் அடித்துள்ளார்.

பலாலி, திருகோணமலை விமான நிலையங் களிலிருந்து இந்தியாவுக்கு நேரடி விமான சேவை ஆரம்பிப்பது பொருத்தமற்றது. வடக்கு மாகாண சபையின் தீர்மானம் கேலிக்கு, நகைப்புக்கு உரியது. நாட்டில் ஏற்கெனவே இரண்டு சர்வதேச விமான நிலையங்கள் உள்ளன -

அவ்வாறிருக்கையில், மற்றும் ஓர் அனைத்துலக விமான நிலையம் அமைப்பது பொருத்தமற்றது. நாட்டுக்கு அது தேவையற்றது - - என்று தெரிவித்திருக்கிறார் மத்திய அமைச்சர்.

அறுபது, எழுபதாம் ஆண்டுகளில் பலாலியில் இருந்து திருச்சிக்கு விமான சேவைகள் நடைபெற்றன. தென்னிலங்கைப் பிரயாணிகளும் அதனைப் பயன்படுத்தினர். அந்த விவரம் அமைச்சருக்குத் தெரிந்திருக்குமோ அல்லது தெரிந்திருந்தும் மறந்திருப்பாரோ, என்னவோ?!

மிக நுணுக்கமாக நோக்கினால், முன்னர் நடை முறையில் இல்லாத ஒன்றை வடக்கு மாகாண சபை இப்போது தீர்மானமாக நிறைவேற்றவில்லை. சபையின் அங்கத்தவர்கள் விஷமத்துக்காக இதனை இயற்றவும் இல்லை.

தம்மைத் தெரிவு செய்த மக்களின் நலனுக்காகவே, அவர்களின் போக்குவரத்து இலகுவாகவும் செவ்வனேயும் நடைபெறும் என்பதற்காகவுமே தீர்மானத்தை நிறைவேற்றியிருப்பார்கள் என்பதனைக் கருத்தில் கொள்வதற்கு சிவில் விமானத் துறை அமைச்சர் தவறியமை, வடக்கு மக்களின் நலன்களில் தெற்கு அரசியல்வாதிகளுக்குக் கிஞ்சித்தும் நாட்டம் இல்லை என்பதனையே மிக அப்பட்டமாக வெளிப் படுத்துகிறது.

வடக்கு மாகாண சபை நிறைவேற்றிய விமான சேவை குறித்த தீர்மானத்தில்-

காங்கேசன்துறையில் அமைந்துள்ள துறைமுகம் வர்த்தகத் துறைமுகமாக மாற்றப்பட வேண்டும் -

தலைமன்னார்வரை ரயில் பாதை அமைக்கப்பட்டதும், அங்கிருந்து இராமேஸ்வரம்வரை கப்பல் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும்-என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை-

பலாலி-சென்னை விமானப் போக்குவரத்துச் சேவை குறித்து பிரஸ்தாபிக்கப்பட்ட வடக்கு மாகாண சபையின் தீர்மானத்தில் மட்டும் கைவைக்கும் நிலையை அரசு மேற்கொள்ளவில்லை.

வடக்கின் கல்வி மேம்பாட்டுக்கு உதவும் பொருட்டு, பௌதிக வளவிருத்திக்கான அமெரிக்க அரசாங்கத்தின் நிதி மற்றும் துறைசார் பங்களிப்பினை கொழும்பு அரசு எடுத்த எடுப்பில் தூக்கியெறிந்தது, நிராகரித்தது என்பதும் இத் தருணத்தில் கருத்திலும் கவனத்திலும் கொள்ளப்பட வேண்டியதாகும்.

வன்னிப் பிரதேசத்தில் அமைந்துள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் அமைந்துள்ள மூன்று பாடசாலைகளை தீர்மானத்தின் மூலம் வடக்கு மாகாண சபை தெரிவு செய்திருந்தது.

இது சம்பந்தமான விடயம் கொழும்பு அரசின் கல்வி அமைச்சரால், வாராந்த அமைச்சரவைக் கூட்டம் ஒன்றுக்கு சமர்ப்பிக்கப்பட இருந்தவேளை, பலத்த எதிர்ப்பின் காரணமாக, தொப்பெனக் கைவிடப்பட்டது!

எனினும் புறச்சூழலின் செல்வாக்குக் காரணமாக, மீளவும் குறிப்பிட்ட திட்டம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள் ளப்படும் என்று சாடைமாடையாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

**தமிழ் மக்களின், அவர்களின் பிரதேசங்களின் நலன் களையும் வளர்ச்சியையும் கருதி முன்னெடுக்கப்படும் அபி விருத்திசார் பணிகள் அரசினால் வேண்டுமென்றே முடக்கப் படுகின்றன. இவ்வழி ஏகின் வடக்கின் அபிவிருத்தி எந்நிலை யாகும்?**

கட்டுரை

# புலிகள் ஒழிக்கப்பட்டும் மறைந்துவிடாத அச்சுறுத்தல்

## ‘பூச்சாண்டி’ காட்டுகின்றனர் ராஜபக்ஷாக்கள்

ராஜபக்ஷவின் சகோதரர்களுக்கு தேவைப்படுகின்ற போதெல்லாம் தோற்கடிக்கப்பட்ட, அழிக்கப்பட்ட புலிகள் மீண்டும் பிரசன்னமாகின்றனர். அதாவது புலிகள் நாட்டுக்கு அச்சுறுத்தலாக உள்ளதாக அவர்களால் தெரிவிக்கப்படுவதாக பத்தி எழுத்தாளர் திசரணி குணசேகர குறிப்பிடுகிறார்.

உலகம் முழுவதையும் தமது அதிகாரத்தின் கீழ் கொண்டுவருவதற்காக யூதத் தலைவர்களால் தீட்டப்பட்ட 'இரகசியத் திட்டத்தின்' வரைமுறைகள் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மேலைத்தேய நாடுகளில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தின. இந்தத் திட்டம் ரஷ்யாவின் இரகசியக் காவற்துறையின் மோசடி மிக்க செயற்பாடு என்கின்ற உண்மை வெளிப்படுத்தப்பட்ட பின்னரும், தொடர்ந்தும் நடைமுறையிலிருந்ததுடன், அடொல்ப் ஹிட்லர் மீது மிகப் பெரிய செல்வாக்குச் செலுத்துகின்ற காரணியாகவும் மாறியது. பூகோளரீதியாகவும், தற்காலிகமாகவும் சகல இடத்திலும் நிலைபெற்றிருக்கும் ஓர் எதிரியானவன், எந்தவொரு தடைகளையும் மீறி தன்னை வெளிப்படுத்திக் கொள்ளத் தயாராக இருப்பான். இந்த எதிரி அச்சத்தையும் பயங்கரத்தையும் ஏற்படுத்திக் கொண்டிருப்பான்.

அந்த வகையில், தமிழர்களால் புலிகள் மறக்கப்பட்டாலும் கூட, ராஜபக்ஷவின் பரப்புரையால் புலிகள் மறக்க முடியாதவர்களாக மாறிவிடுகின்றனர். அமெரிக்காவில் இலங்கை அரசால் தற்போது மேற்கொள்ளப்பட்ட பரப்புரை நடவடிக்கை தோல்வியில் முடிவடைந்ததற்கான காரணமாக, இலங்கை ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க, ராஜபக்ஷவுக்கு நெருங்கியவர்கள் பணிபுரியும் அமெரிக்காவில் உள்ள இலங்கைத் தூதரகத்தையோ, அல்லது இவ்வாறான நிதிச்செலவுமிக்க, அரசியல் நோக்கத்தைக் கொண்ட ஒரு பரப்புரையை மேற்கொள்ள வேண்டும் என்கின்ற இலங்கை அரசின் தீர்மானம் மீதோ பழிசுமத்தவில்லை.

**பரப்புரை தோல்வி கண்டதற்கு முன்வைக்கப்படும் காரணங்கள்**

இலங்கை அரசின் பரப்புரை அமெரிக்காவில் தோற்றுப் போனதற்கு தமிழ்ப் புலிகள் மீதே லலித் வீரதுங்க குற்றம் சுமத்துகிறார். அதாவது கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் புலிகளின் அரசியற் தலைவர்கள் அழிக்கப்பட்ட போதிலும், இந்தப் புலிகள் மீதே லலித் வீரதுங்க தற்போது தனது குற்றத்தை முன்வைக்கிறார். வெள்ளை மாளிகையில் ஏற்கனவே செயற்படுகின்ற பலம் மிக்க பரப்புரை அமைப்பொன்றை விடுதலைப் புலிகள் வாடகைக்கு அமர்த்தியுள்ளனர். இந்த அமைப்பின் தலைவர் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கு நெருக்கமானவர். இதன்மூலம் புலிகளுக்கு ஆதரவான இந்த அமைப்பு வெள்ளை மாளிகையில் மிகச்சிறந்த இடத்தைத் தக்கவைத்துள்ளது. இந்த மட்டத்தை இலங்கை அரசால் எட்ட முடியாதுள்ளது என லலித் வீரதுங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகவே விடுதலைப் புலிகளின் தலைமை அழிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் ஆகின்ற நிலையிலும் விடுதலைப் புலிகள் தற்போதும் உயிர் வாழ்கின்றனர் என்றாகிறது.

இந்த நிலையில், புலிகள், ராஜபக்ஷவின் அரசியல் ஒளிப்படங்களில் முதலாவது கண்காட்சிப் பொருளாகக் காணப்படுகின்றனர். தாம் புலிகளை முற்றாக ஒழித்து இந்த நாட்டை அவர்களிடமிருந்து விடுவித்துள்ளதாக ராஜபக்ஷவின் சகோதரர்கள் அறிவித்திருந்தனர். நாட்டை அதன் ஆபத்திலிருந்து மீட்டெடுத்த ராஜபக்ஷவுக்கு நன்றிக் கடன் செலுத்தும் விதமாக மக்கள் இந்த ஆட்சியை ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆனால் அந்த நன்றிக் கடனானது போரை வென்றெடுத்த இராணுவத் தளபதிக்கு வழங்கப்படவில்லை. தேர்தலில் ராஜபக்ஷாக்களை எதிர்த்துப் போட்டியிட்டதால் இராணுவத் தளபதி 'தேசத்துரோகி' என அறிவிக்கப்பட்டார். ராஜபக்ஷ சகோதரர்களுக்கு தேவைப்படுகின்ற போதெல்லாம் தோற்கடிக்கப்பட்ட,அழிக்கப்பட்ட புலிகள்மீண்டும்பிரசன்னமாகின்றனர். அதாவது புலிகள் நாட்டுக்கு அச்சுறுத்தலாக உள்ளதாகவும், தோற்கடிக்கப்பட்ட ஓர் எதிரியாகவும், ராஜபக்ஷவால் விவரிக்கப்படுகிறது. புலிகள் என்கின்ற இந்தத் தீயசக்தி முற்றாக அழிக்கப்பட்ட போதிலும் புலிகள் தொடர்பான அச்சுறுத்தல் ஒருபோதும் மறைந்து விடாத ஒன்றாகவும் காணப்படுகிறது.

தோற்கடிக்கப்பட்ட புலிகள் பலமுள்ள, ஆளுமையுள்ள அதிக வளங்களைக் கொண்டிருப்பதாகவும் இவர்கள் போரில் வெற்றிபெற்ற ஆசியாவின் அதிசயமான இலங்கை அரசை விட வளமுள்ளவர்களாகவும், பலம் பெற்றவர்களாகவும் விளங்குவதாகவும் அவர்கள் உலகின் மிகச்சிறந்த பரப்புரை அமைப்பைத் தம்வசம் கொண்டுள்ளதாகவும் லலித் வீரதுங்கவின் அறிக்கை கூறுகிறது. விடுதலைப் புலிகள் பொடெஸ்ரா குழுவைத் (Podesta Group) தமது கட்டுப்பாட்டின் கீழ்கொண்டுள்ளனர். அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் ஆலோசகரான ஜோன் பொடெஸ்ரா, புலிகளின் பரப்புரைக் குழுவின் தலைவராக உள்ளார் என்று லலித் வீரதுங்க குறிப்பிடுகிறார்.

தனது வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு விவகாரங்களுக்காக பெருமளவு நிதியைச்செலவிடுகின்ற இலங்கை அரசு, அமெரிக்காவில் தனது பரப்புரையை மேற்கொள்வதில் தோல்வியடைந்ததற்கு தற்போது அமைப்பு ஒன்றின் கீழ் செயற்பட முடியாத விடுதலைப் புலிகளை விட நிதிவளம் சார்ந்த பற்றாக் குறையே காரணம் என்பதை நம்ப முடியுமா? இலங்கை அரசின் இந்தத் தோல்விக்கு வொஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் போட்டியிட முடியாத நிலைமையே காரணம் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அதாவது இந்தத் தூதரகத்தில் அரசியல்சார் நோக்கத்துடன் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களால் அமெரிக்காவில் தமது பரப்புரையை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியவில்லை என்பதே உண்மையான காரணமாகும்.

இலங்கை அரசை விட புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மத்தியில் உள்ள புலி ஆதரவு அமைப்புக்கள் நிதிவளத்தையும் அதிக திறனையும் கொண்டுள்ளன என்பதை நம்பமுடிகிறதா?

புலிகள் ஓர் அமைப்பு ரீதியாக செயற்படாததற்கு அப்பால் அமெரிக்காவில் தடை செய்யப்பட்ட அமைப்பாக உள்ள நிலையில், பொடெஸ்ராக் குழுவைப் புலிகளோ அல்லது நாடு கடந்த தமிழீழ அரசோ வாடகைக்கு அமர்த்தவில்லை என்பது நிச்சயமாகும். ஆனால் 'அமெரிக்கத் தமிழர் அமைதி முயற்சி' என்கின்ற அமைப்பு, பொடெஸ்ராக் குழுவை தனக்கு ஆதரவாகச் செயற்படுத்தக் கூடும். இலங்கை அரசின் ஊதுகுழலாகச் செயற்படுகின்ற வீரதுங்கவின் கருத்துப்படி பொடெஸ்ராக் குழு பொடெஸ்ரா என்கின்ற ஒருவரால் தலைமை தாங்கப்படுகின்றது. இவ்வாறான ஒரு குழுவை அமெரிக்கத் தமிழர் அமைதி முயற்சி அமைப்பு தனக்கு ஆதரவாகச் செயற்பட வைப்பதற்காக மூன்று ஆண்டுகளில் 260,000 டொலர்களைச் செலவிட்டுள்ளது.

2013 இல், அமெரிக்காவுடன் இலங்கை அரசு உடன்படிக்கை ஒன்றை மேற்கொண்டிருந்தது. அதாவது அமெரிக்காவின் தோம்ப்சன் ஆலோசனை அமைப்பிற்கு இலங்கை தனியொரு ஆண்டில் மட்டும் 792,000 அமெரிக்க டொலர்களைச் செலுத்துவதாக உடன்பட்டது. றொபேற் தோம்ப்ஸன் என்பவரால் தலைமை தாங்கப்படும் தோம்ப்ஸன் ஆலோசனை அமைப்புடன் இலங்கை தனது பரப்புரையை விரிவுபடுத்து வதற்கான உடன்பாட்டை கடந்த ஆண்டில் மேற்கொண்டிருந்தது. இதேபோன்று இலங்கை ஜனாதிபதிக்கு நெருக்கமானவரும், அமெரிக்காவுக்கான இலங்கை தூதருமான ஜாலிய விக்கிரமசூரிய மஜோரிட்டி குறூப் (Majority Group) என்கின்ற பரப்புரை அமைப்பிற்கு 2013இல் மாதத்திற்கு 50,000 டொலர்களை வழங்கி வாடகைக்கு அமர்த்தியிருந்தார். இலங்கை அரசால் அமர்த்தப்பட்ட இவ்விரு அமைப்புகளுக்கும் கடந்த ஆண்டில் மட்டும் 1.39 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கட்டணமாக வழங்கப்பட்டுள்ளது. இது புலிகளின் ஆதரவு அமைப்பு எனக் கூறப்படுகின்ற 'பொடெஸ்ராக் குழுவுக்கு' வழங்கப்பட்டதை விடப் பலமடங்கு அதிகமானதாகும்.

பொடெஸ்ராக் குழுவுக்கு பிரபலமற்ற மிகச்சிறிய தமிழ்க் குழுவானது மூன்று வருடங்களிலுமாக மொத்தம் 260,000 அமெரிக்க டொலர்களை மட்டுமே வழங்கியுள்ள நிலையில், இலங்கை அரசால் இந்த நிலையை அடைவதற்கு நிதி வளங்கள் மற்றும் திறன் போன்றன போதாது உள்ளதாகக் கூறப்படுவது பொருத்தமானதொன்றா? இலங்கை அரசின் பரப்புரை அமெரிக்காவில் தோற்றுப் போனதற்கு இதுதான் காரணம் எனக் கூறுவது நியாயமானதா?

**நாட்டை முன்னேற்ற அரசு முனையவே இல்லை**

ராஜபக்ஷாக்கள் போருக்குப் பின்னர் இலங்கையைப் பலப்படுத்த முனையவில்லை. அதாவது எதிர்கால இலங்கைக்குத் தேவையான தேசிய மீள் இணக்கப்பாடு மற்றும் நிரந்தர அமைதி போன்றவற்றை நிலைநாட்டுவதற்கு போருக்குப் பின்னான இந்தச் சூழலை இலங்கை அரசு பயன்படுத்திக் கொள்ளவில்லை. ஆனால் இதற்கு மாறாக இலங்கை அரசை ராஜபக்ஷ என்ற குடும்ப ஆட்சியை அதிகாரப்படுத்துவதன் மூலம் நாட்டில் நிலவிய ஜனநாயகம் அழிக்கப்பட்டுள்ளது. இதுவே ராஜபக்ஷாக்கள் போருக்குப் பின்னர் செய்துள்ள பணியாகும்.

ராஜபக்ஷாக்கள் தமது சக உறவுகளான சிங்கள பௌத்தர்களுடன் கூட அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்பவில்லை. போருக்குப் பின்னான நான்கு ஆண்டுகளில் ராஜபக்ஷ சகோதரர்கள் மாகாண ஆட்சி முறைமையையும் முழுமையான பயனுள்ள அரசியற் தீர்வையும் குழிதோண்டிப் புதைத்துள்ளனர். இனப் பிரச்சினை தற்போதும் நாட்டில் நீடித்துள்ளது என்பதை இவர்கள் நம்ப வில்லை. நீதிச்சேவை உட்பட எந்தவொன்றும் தமது அதிகாரத்தைப் பங்கு போட்டுக் கொள்வதற்கு ராஜபக்ஷ சகோதரர்கள் அனுமதி வழங்கவில்லை. இவர்கள் இராணுவமயமாக்கல் மற்றும் பேரினவாதம் மூலம் நாட்டை நிர்வகிக்க முனைகின்றனர்.

இவ்வாறான ஓர் அரசியல் ஆட்சியால் தமிழ் மக்களின் வாழ்வாதாரம், சுகாதாரம் மற்றும் கல்வித் தேவைகள் புறக்கணிக்கப்படுகின்றன. போரால் முற்றிலும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மனிதாபிமான மற்றும் சமூகத் தேவைகள் என்பன புறக்கணிக்கப்படுகின்றன. இது சமூக-பொருளாதாரப் போக்குகளை ஆபத்திற்குள் கொண்டுசெல்வதற்கு வழிகோலுகின்றன.

*(நன்றி-புதினப்பலகை)*



ஊரவன்

## சுழிபுரம் மேற்கு கிராம மக்களே

# இனியும் ஏமாறாதீர்

வேலையாள்கள் என்ற பெயரிலே இங்கே வரும் தென்னிலங் கையர்கள் உங்கள் கடற்கரை ஓரங் களிலே குடிசைகளைப் போடலாம். நீங்கள் குத்தகைக்குக் கொடுத்த நிலத்திலே வழிபாட்டுக்காக புத்தர் சிலைகளை வைக் கலாம். காலம் செல்லச் செல்ல விகாரையையும் கட்டிவிடலாம். இது ஒரு விதத்தில் விவசாயம் என்ற பெயரிலே இன்னொரு மகாவலித் திட்டமாக இருக்கலாம். வேண்டாம் போதும், வரலாற்றிலே நாங்கள் பட்ட துன்பம். ஏமார்ந்ததும் – ஏமாற் றப்பட்டதும் எங்க ளுடன் முடியட்டும்.

கடற் பயணத்தின்போது புயல் அடித்ததால் கரையொதுங் கியவன் எங்கள் நாட்டை 1505 ஆம் ஆண்டளவில் ஆக் கிரமிக்கத் தொடங்கினான். கறுவாப்பட் டைக்கும் ஏலக்காய்க்கும் எமது நாடு ஏலம்போனது. 1948 இல் இலங்கை சுதந்திரமடைந்ததாகக் கூறப்படும் நாளிலிருந்து இலங் கையின் ஆட்சியாளர்களினால் இன்றுவரைக்கும் நிலக்கொள் ளைகள் நிறுத்தப்படாமல் தொடர்ந்து கொண்டே உள்ளன. இலங்கை ஆட்சியாளர்களே ஆக்கிரமிப்பாளர் களாக மாறித் தமிழர் நிலங்களை ஏப்பமிட்டுக் கொண்டிருப்பது நாம் அனைவரும் அறிந்த விடயமே. இந்த நிலக் கொள்ளையில் இருந்து நாம் விடுபடுவதை விடுத்து மீண் டும் மீண்டும் நாம் ஏமார்ந்து போகக் கூடாது. குறிப்பாக இளையவர்கள் விழிப்பாக இருக்க வேண்டும்

கடந்த 16 ஆம் திகதி சுழிபுரம் மேற்குக் கிராமத்திலே நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டம் தொடர்பாகச் சில விமர்சனங்களும் ஆலோச னைகளும் இங்கே முன்வைக்கப் படுகின்றன. சுழிபுரம் சவுக்கடி கடற் கரையை அண்மித்த இடத்திலே அப்பகுதி மக்களுக்குச் சொந்தமான சுமார் 300 ஏக்கர் அளவிலான நிலம் உள்ளது. இதனை அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றுக்குச் சில நிபந்தனைகளுடனான ஒப்பந்த அடிப்படையிலே குத்தகைக்குக் கொடுப்பதற்காக ஊர்மக்களின் விருப்பு வெறுப்புக்களை அறியும் நோக்கிலேயே இந்தக் கூட்டம் கூட் டப்பட்டது. குறித்த கிராமத்தைச் சேர்ந்த மக்கள் கடற்றொழிலையே முக்கியமாக நம்பியுள்ளதை இங்கு முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். உங்களுக்குச் சொந்தமான குறித்த நிலத்திலே நீங்களே முதலீடு செய்து நீங்களே முதலாளிகள் ஆகலாம். இன்று கடற்றொழிலாளி ஒருவரின் நாளாந்த வருமானம் சில நாள்களில் 300 ரூபா வரை கூட இருப்பதில்லை. இதற்கான காரணம் கடலிலே மீன் வளங்கள் இல்லை. அனைத்துமே அழிக்கப்பட்டுவிட்டன. எனவே குறித்த நிலத்திலே நீங்கள் விவசாயம் செய்ய முடியாதா? உங்களுக்கான உதவிக ளையும் ஆலோசனைகளையும் வட மாகாண விவசாய அமைச்சி னூடாகப் பெற்றுக்கொள்ளலாம்.



உங்கள் கிராமத்தில் வறிய குடும் பத்தைச் சேர்ந்தவர்கள் பலர் வாழ் கின்றனர். அவர்களுக்கு இந்த நிலத் தைப் பகிர்ந்து கொடுக்கலாம். இன் னும் எத்தனையோ வழிமுறைகள் உள்ளன. அவற்றை விடுத்து தனி யார் நிறுவனங்களுக்கு இதனைத் தாரைவார்த்துக்கொடுக்காதீர்கள். இளையோர்களே, பெரியவர்களே உங்கள்ஊர்முற்றிலும்கடற்தொழிலை மட்டுமே நம்பி வாழ்கின்றது. இங்கே சுமார் 750 குடும்பங்கள் வாழ் கின்றன. இதில் எத்தனை பேர் வேலை இல்லாமலும் இளைஞர்களுமாக உள்ளனர்? ஏன், இந்த நிலத்திலே தென்னை மரங்களை நடலாமே.

இன்று அதிகமான தனியார் நிறுவ னங்களின் பின்னணியில் அரசும், அமைச்சர்களும் உள்ளனர். ஏன் போதைமருந்து வியாபரத்திலும்கூட சில அமைச்சர்கள் உள்ளதாக அவ் வப்போது ஊடகங்களில் செய்தி கசிந்து கொண்டிருக்கின்றது. இன் றைய ஆட்சியாளர்கள் எதை நினைத் தாலும் செய்துமுடிப்பார்கள். எந்த நம்பிக்கையிலே உங்கள் நிலத்தை தனியார் நிறுவனத்துக்குக் கொடுக்க நினைக்கின்றீர்கள்? வெறும் வாக்கு றுதிகளை நம்பி எமது நிலத்தின் வளங்களை இன்னொருவனுக்கு கொடுப்பதா? குறித்த பகுதியிலே எத் தனை ஆயிரம் பனைமரங்கள், தென்னை மரங்கள் நின்றன. ஆனால், இன்று அங்கே தென்னைமரங்கள் நின்ற தற்கான அடையாளங்களும் உள் ளதா? ஆங்காங்கே சில பனை மரங்கள் மட்டுமே உள்ளன. இலங்கைக் கடற்படையினரால் இன்று வரைக்கும் மண் அகழ்வும், பனைத் தறிப்பும் மேற்கொள்ளப்படுகின்றன.

அரச சார்பற்ற நிறுவனத்துக்கு இந்த நிலத்தைக் கொடுக்கும்போது விவ சாயம் என்ற பெயரிலே அங்கே உள்ள அத்தனை பனைமரங்க ளும் தறிக்கப்படும். உங்கள் கிராமத்தில் வாழும் அத்தனை குடும்பங்களுமே இந்த நிலத்திலே நிற்கும் பனை மரங் களில் இருந்து தான் தேவையான விறகுகளை பெற்றுக்கொள்கிறீர்கள். இவைகள் தறிக்கப்பட்டால் உங்கள் விறகுத்தேவையைப் பூர்த்தி செய் யுமா இந்தத் தனியார் நிறுவனங் கள்? இந்த நிலத்தை நீங்கள் உதார ணமாக ஒரு 30 வருடமோ அல் லது 20 வருடமோ குத்தகைக்கு கொடுத்தால் அவர்களின் ஒப்பந்த காலம் முடியும் போது அந்த மண் ணின் பசளைகள் அத்தனையும் உறிஞ்சப்பட்டு காடுகள் மரங்கள் இல்லாத வெறும் புழுதிக் காடாக அந்த நிலம் உங்கள் அடுத்த சந்த தியைச் சென்றடையும். மிகவும் ஆழமாகச் சிந்தித்து செயற்படுங் கள். இது எங்கள் மண். இந்த மண் ணுக்காய் எத்தனை வீரர்கள் வீழ்ந் தார்கள், எத்தனை நரக வேதனை களை அனுபவித்தார்கள். ஆனால் நாங்கள் சலுகைகளுக்கும் சில சுய இலாபங்களுக்கும் இதை எவரோ ஒருவருக்கு, ஏன் குத்தகை என்ற பெயரிலே கொடுக்கவேண்டும்? கிராமத்தில் உள்ள அத்தனை மக்க ளுக்கும், கோவில்களுக்கும் அதைப் பகிர்ந்து கொடுக்கலாமே.? நீங்கள் ஏன் தனியார் நிறுவனத் துக்குக் கொடுக்க வேண்டும். .

அவ்வாறு கொடுத்தால் அதன் எதிர் விளைவுகள் மிகமோசமாக இருக் கும். உதாரணமாக இன்று வடக் கிலே புனரமைக்கப்படும் அதிக மான வீதிகளைத் தனியார் நிறுவ னங்கள் தான் புனரமைக்கின்றன. ஆனால் அதிலே வேலை செய்யும் சாதாரண கூலி முதல் தொழில் நுட்பவியலாளர், வாகன ஓட்டுநர் என்று அனைவருமே தென்னிலங் கையைச் சேர்ந்தவர்களாக குறிப் பாகச் சிங்களவர்களாகக் காணப்ப டுகின்றனர். எங்களுக்காகச் செலவ ழிப்பதாக அரசு கூறும் பணத்தின் பெரும்பகுதி மீண்டும் தென்னி லங்கைக்குச் செல்வதை இங்கே அவதானிக்க வேண்டும். அதைப் போன்று இந்த நிலத்தை விவசாயம் என்ற பெயரில் குத்தகைக்குப் பெற் றுக் கொள்ளும் தனியார் நிறுவனத் தில் வேலை செய்பவர்கள் நிச்சய மாகத் தமிழர்களாக இருப்பதற்கு வாய்ப்பில்லை. அப்படி இருந்தாலும் ஒரு சிலரை கண்துடைப்புக்காக இணைத்து கொள்ளலாம்.

வேலையாள்கள் என்ற பெயரிலே இங்கே வரும் தென்னிலங்கையர் கள் உங்கள் கடற்கரை ஓரங்களிலே குடிசைகளைப் போடலாம். நீங்கள் குத்தகைக்குக் கொடுத்த நிலத்திலே வழிபாட்டுக்காகப் புத்தர் சிலை களை வைக்கலாம். காலம் செல்லச் செல்ல விகாரையையும் கட்டிவிட லாம். இது ஒரு விதத்தில் விவசா யம் என்ற பெயரிலே இன்னொரு மகாவலித் திட்டமாக இருக்கலாம். வேண்டாம், போதும் வரலாற்றிலே நாங்கள் பட்ட துன்பம், ஏமார்ந்ததும் - ஏமாற்றப்பட்டதும் எங்களுடன் முடியட்டும். அடுத்த சந்ததியை இதிலே சிக்க வைத்து விடாது விழிப்பாகச் செயற்படுவோம்.

---

## இணையத்தில் கண்காணிப்பதை அடையாளம் காட்டும்

# லைட்பீம்



தற்போதைய இணைய தாக்கம் கண்காணிக்கப்படுவ தும், கவனிக்கப்படுவதும் தான். தேடி யந்திரங்களில் ஆரம்பித்து, மின்வணிகத்தளங்கள் வரை எல்லா விதமான தளங்களும் இணைய வாசிகளின் ஒவ்வொரு அடியையும் கவனித்துக் குறிப்பெடுக்கின்றன. அதாவது டிராக் செய்கின்றன. பொருத்தமான விளம்பரத்தை அளிக்க வும், பயனாளியின் எதிர்பார்ப்பைப் புரிந்து கொண்டு செயற்படவும் இவ்வாறு செய்யப்படுவதாகச் சொல் லப்படுகிறது. இன்னொரு பக்கம் அரசு கள் ஈமெயில் வாசகங்களையும் தேடல் பதங்களையும் கண்காணித்து வருவதாகச் சொல்லப்படுகிறது.


இணையத்தில் நாம் எப்படி எல் லாம் கண்காணிக்கப்படுகிறோம் என்பதைப் புரிந்துகொள்ள வேண் டுமா? அதற்கான எளிய வழியை மொசில்லா (Mozilla) முன் வைத் துள்ளது. பிரபலமான இணைய உலாவியான 'பயர்பொக்ஸ்'பின்னே இருக்கும் மொசில்லா அமைப்பு இதற் காக 'லைட்பீம்' (Light Beam) என்ற புதிய வசதியை அறிமுகம் செய்துள் ளது.

பயர்பொக்ஸ் உலாவிக்கான சேர்க் கையாக (add on) அறிமுகமாகியுள்ள இந்தச் சேவையைப் பயன்படுத்து வதன் மூலம் நீங்கள் இணையத்தில் உலாவும்போது எப்படி எல்லாம் உங் களைப்பற்றிய விவரங்கள் சேகரிக் கப்படுகின்றன என்பதைத் தெரிந்து கொள்ளலாம். இந்தக் கண்காணிப் பின் விவரங்களை, இந்தச் சேவை காட்சி ரீதியாகத் தோன்றச் செய்கிறது. லைட்பீம் சேவையை உலாவியில் இயக்கியதும், இணையதளத்துக்குச் செல்லும் போதெல்லாம் அந்தத் தளத்தில் இருந்து உங்களைப் பற்றிய விவரங்கள் எப்படிச் சேகரிக்கப்ப டுகின்றன என்பது வரைபட சித்திர மாகக் காட்டப்படுகிறது. எந்தத் தளங் கள் எல்லாம் தகவல்களைச் சேகரிக் கின்றன என்பதை இந்த வரைபடம் உணர்த்தும். முதல் தளத்தில் இருந்து அடுத்த தளத்துக்குச் செல்லும் போது அந்தத் தளத்தில் எப்படி விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன என்பதையும், இந்தத் தளங்களிடையே உள்ள பரஸ்பர தொடர்பையும் தெரிந்து கொள்ளலாம்.

குறிப்பிட்ட பகுதியில் கிளிக் செய்தால் கண்காணிப்பின் இயல்பு பற்றிய மேலதிக விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம். இந்த வரைபடத் தோற் றம் தவிர, கடந்த 24 மணி நேரத்தில் எந்தத் தளங்கள் விவரங்களைச் சேகரித்தன என்பதையும் தெரிந்து கொள்ளும் வசதி இருக்கிறது.

**இணையத்தில் கண்காணிப்பு எப்படி செயற்படுகிறது?**

நீங்கள் உலாவும் தளங்கள் எப்படி மற்றத்தளங்களுடன்உங்கள் இணைய நடவடிக்கை விவரங்களைப் பகிர்ந்து கொள்கின்றன போன்ற விடயங் களை இதன் மூலம் நீங்கள் புரிந்து கொள்ளலாம். கண்காணிப்பை அடை யாளம் காட்டும் இந்தச் சேவை மூல மான தகவல்கள் எதுவுமே சேகரிக் கப்படுவதில்லை என்கிறது மொசில்லா. ஆனால் நீங்கள் விரும்பினால் இந்த விவரங்களைப் பகிர்ந்து கொள்ள முன் வரலாம். கண்காணிப்பு விவ ரங்களைப் புரிந்துகொள்வதற்கான பொதுக் கையேட்டுக்கு இதன் மூலம் பங்களிக்கலாம் என்கிறது மொசில்லா. கடந்த 2011 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட 'கொல்யூஷன்' என்ற வசதியின் நீட்சியாக இந்த லைட்பீம் உருவாகி இருக்கிறது. லைட்பீமை தரவிறக்கம் செய்ய/addons. mozilla. org/en-US/firefox/addon/ lightbeam/?src= search என்ற முக வரிக்குச் செல்லுங்கள்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். வியாபாரத்தில் புதிய ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.



**இடபம்**: நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வியா பாரத்தில் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்குமாறு நடந்து கொள்வீர்கள்.



**மிதுனம்**: புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். சிக்கனமாகச் செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் சந்தை இரகசியங்களைத் தெரிந்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் வரும்.



**கடகம்**: நீண்ட நாள்களாகப் பார்க்க நினைத்த ஒருவரைச் சந்திப்பீர்கள். வெளியூர்ப் பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. தொழிலில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள்.



**சிங்கம்**: தன்னிச்சையாகச் சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உங்களால் மற்றவர்கள் பயனடைவார்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாள்களைத் தேடுவீர்கள்.



**கன்னி**: உறவினர்கள் உங்களைப் புரிந்து கொள்வார்கள். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் லாபம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள்.



**துலாம்**: உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு, தாழ்வு மனப்பான்மை வந்து செல்லும். தன்னம்பிக்கை குறையும். உறவினர், நண்பர்களால் செலவினங்கள் அதிகரிக்கும். மற்றவர்களுக்காக நியாயம் பேசப் போய் பிரச்சினைகளில் சிக்கிக் கொள்ளாதீர்கள்.



**விருச்சிகம்**: குடும்பத்தினரிடம் கோபத்தைக் காட்டாதீர்கள். யாருக்கும் சாட்சிக் கையெழுத்திட வேண்டாம். வெளிவட்டாரத்தில் நிதானம் அவசியம். வியாபாரத்தில் வேலையாள்களால் பிரச்சினைகள் வரும்.



**தனுசு**: புதிய எண்ணங்கள் செயல் வடிவம் பெறும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வீட்டை அழகுப்படுத்துவீர்கள். அதிகார பதவியில் இருப்பவர்களின் நட்புக் கிடைக்கும். உத்தியோகத்தில் சில தந்திரங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.



**மகரம்**: தவறு செய்பவர்களைத் தட்டிக் கேட்பீர்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். வியாபாரத்தில் புதிய இடத்துக்குக் கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் தைரியமாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.



**கும்பம்**: புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.



**மீனம்**: சில விடயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் இருக்கும். சில நேரங்களில் நன்றி மறந்த சொந்த - பந்தங்களை நினைத்து வருத்தப்படுவீர்கள். உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்த முயற்சி செய்வார்கள்.

## நாளை

**மாசி-11 ஞாயிற்றுக்கிழமை | 23.02.2014**

திதி: நவமி பி.இ.04.08 வரை
நட்சத்திரம்: கேட்டை பி.இ.05.34 வரை

சுபநேரம்: 09.30-11.00 வரை
இராகுகாலம்:.05.00-06.30 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...




### சமயம் என்பது தன்னல மறுப்பு

பிரபஞ்சத்தின் உரிமைகளைப் பகுத்தல் இயலாது. "உரிமை" பற்றிப் பேசுவது, வரம்பை ஒப்புக் கொள்வதாகும். ஆகவே நாம் பேச வேண்டியது உரிமையைப் பற்றியதன்று; பொறுப்பைப் பற்றியேயாம். உலகின் எந்தப் பகுதியில் தீமையிருந்தாலும் அதற்கு ஒவ்வொருவருமே பொறுப்பாவர். எவனும் தன்னைத் தன் சகோதரனிடமிருந்து வேறுபடுத்திக் கொள்வது இயலாத காரியம். பிரபஞ்சத்தில் ஒன்று சேரச் செய்வன எல்லாம் நற்செயல்களே ; பிரிப்பன பாவச் செயல்கள். எல்லையற்ற ஒன்றில் நீ ஒரு பகுதி; இதுவே உனது இயற்கை. இதனால்தான் நீ உனது சகோதரனுடைய நலனில் நாட்டமுள்ளவனாக இருக்கிறாய்.

வாழ்க்கையின் முதல் நோக்கம் அறிவைத் தேடுதல். இரண்டாவது நோக்கம் இன்பம். அறிவும், இன்பமும் விடுதலையை நோக்கி அழைத்துச் செல்கின்றன. ஆனால் உலகில் உள்ள ஒவ்வோர் உயிரும் (எறும்பாயினும் சரி, நாயாயினும் சரி) விடுதலை பெற்றாலன்றி, ஒரு மனிதன் விடுதலை பெற முடியாது. அனைவரும் மகிழ்ச்சி அடைந்தாலன்றி, தனியொருவன் மட்டும் மகிழ்வுடன் இருத்தல் இயலாது. இன்னொருவனுக்குத் தீங்கு விளைவிக்கும் போது நீ உனக்கே தீங்கு விளைவித்துக் கொள்கிறாய். ஏனெனில் நீயும் உனது சகோதரனும் வேறல்லர். எவனொருவன் தன்னில் பிரபஞ்சத்தையும் பிரபஞ்சத்தில் தன்னையும் காண்கிறானோ, அவனே உண்மையான யோகியாவான். இந்தப் பிரபஞ்சத்தின் சிறந்த நியதி தன்னல மறுப்பே; தன் முனைப்பு அன்று. "தீமையைத் தீமையால் எதிர்க்காதே" என்ற இயேசுநாதரின் போதனையை இந்த உலகம் கடைப்பிடிக்கவில்லை. அதனால் தான் இவ்வுலகம் இவ்வளவு தீமை யுள்ளதாக இருக்கிறது. தன்னல மறுப்பே பிரச்சினையைத் தீர்க்கும். உறுதியான தன்னல மறுப்பின் மூலமே மதத்தைக் கடைப்பிடிக்க முடியும். உனக்கென எதையும் விரும்பாதே. எல்லாவற்றையும் பிறருக்காகவே செய். வாழும் வகையும், பழகும் முறையும், ஆண்டவனில் லயித்துவிடும் வகையும் இதுவே.

## கணித சூத்திரம் புரியும்போதும் நிபுணர்களிடையே கலாரசனை அழகுணர்ச்சி ஏற்படுகிறதாம்




அற்புதமான கலைப் படைப்புகளையும் இசையையும் நுகரும்போது ஒருவருக்கு மூளையில் ஏற்படும் அழகுணர்ச்சி, கணித சூத்திரங்களில் காணப்படும் வித்தியாசமான எண்களையும் எழுத்துக்களையும் காணும்போது கூட கணித நிபுணர்களுக்கு ஏற்படுகிறது என்று ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது.

லண்டன் பல்கலைக் கழகத்தில் கணித நிபுணர் களை மூளை ஸ்கான் செய்த நேரத்தில், அவர்களிடம் வித விதமான கணித சூத்திரங்கள் காண்பிக்கப்பட்டிருந்தன. அவற்றில் குறிப்பிட்ட சில சூத்திரங்களை அவர்கள் கண்ட நேரத்தில், அவற்றின் அழகால் ஈர்க்கப்பட்டு அவர்களது மூளையில் கலை ரசனைக்குரிய மின்னணு மாற்றங்கள் ஏற்பட்டன.

மனதில் ஏற்படும் அழகுணர்ச்சிக்கு உயிரியலுடன் தொடர்புடைய நரம்பியல் அடிப்படை ஒன்று இருக்க வேண்டும் என்று இந்த ஆராய்ச்சி சுட்டிக்காட்டுவதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

கணித சூத்திரங்களை ஒருவர் புரிதலுடன் பார்க்கும் போது அவருடைய மூளையின் பல்வேறு பாகங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

சில நல்ல சூத்திரங்களைப் பார்க்கும்போது அவர்களுடைய மூளையின் உணர்வு ரீதியான பாகமான மீடியல் ஓர் பைடோ ஃபிரண்டல் கார்டெக்ஸ் செயலூக்கம் அடைகிறதாம்.

ஒரு நல்ல இசையைக் கேட்கும்போது, ஓர் அற்புதமான ஓவியத்தை பார்க்கும்போது எவ்வித மாற்றம் அடையுமோ அவ் விதத்தில் அது மாற்றம் அடைகிறதாம்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | 5 | | | | | 1 | |
| 4 | | | 9 | 6 | | 5 | 8 | 7 |
| | | 9 | | | | | | 3 |
| | | | | 3 | 1 | | 2 | 8 |
| | 2 | | 8 | | 6 | | 7 | |
| 3 | 8 | | 5 | 2 | | | | |
| 7 | | | | | | 8 | | |
| 5 | 9 | 3 | | 1 | 8 | | | 4 |
| | 1 | | | | | 9 | | 2 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 3 | 7 | 4 | 8 | 6 | 1 | 5 | 2 |
| 8 | 3 | 4 | 2 | 7 | 1 | 3 | 6 | 9 |
| 1 | 6 | 2 | 9 | 3 | 5 | 8 | 7 | 4 |
| 5 | 8 | 3 | 6 | 1 | 2 | 4 | 9 | 7 |
| 4 | 2 | 6 | 7 | 9 | 8 | 5 | 3 | 1 |
| 7 | 1 | 9 | 5 | 4 | 3 | 2 | 8 | 6 |
| 3 | 7 | 8 | 1 | 2 | 9 | 6 | 4 | 5 |
| 2 | 4 | 5 | 8 | 6 | 7 | 9 | 1 | 3 |
| 6 | 9 | 1 | 3 | 5 | 4 | 7 | 2 | |

## இன்றும் நாளையும் மின்தடை

யாழ்ப்பாணம், பெப்.22
புதிய உயர் அழுத்த மின் விநியோகமார்க்கங்களின் இணைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணி வரை மருதங்கேணி, சோரன்பற்று, மாசார், புதுக்காடுச் சந்தி, கரம்பொன், பொன்னொச்சிக்கடை சந்தியிலிருந்து நாரந்தனை வரையான பிரதேசம், முழு நெடுந்தீவுப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் -
நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.00 மணிவரை உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், கந்தர்மடம், ஆரியகுளம், ஸ்ரான்லி வீதி, வேம்படிப் பிரதேசம், கொன்வென்ட் பிரதேசம், பிரதான வீதி, யாழ்.நகரம் முழுவதும், யாழ்.மாநகர சபைப் பகுதி, ஸ்ரான்லி வீதி, கலட்டி, தட்டாதெரு, மனோகரா, கஸ்தூரியார் வீதி, குருநகர், பாஷையூர், காக்கைதீவு, மீனாட்சிபுரம், கொட்டடி, நாவாந்துறை, யாழ்.பிரதான வீதி, பண்ணைப் பகுதி -
ஊரெழு, உரும்பிராய் ஒரு பகுதி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, போயிட்டி, பூம்புகார், நாவலடி, அரியாலை கிழக்கு, மணியந்தோட்டம், உதயபுரம், நெடுங்குளம், தூண்டி, வசந்தபுரம், ஆனந்தன் வடலி வீதி, மகேந்திரபுரம், தேவபுரம், கொழும்புத்துறை வீதியில் ஒரு பகுதி -
கொக்குவில் சந்தி, கம்பஸ் லேன், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், முடமாவடி, பால் பண்ணை, சிவப்பிரகாசம் வீதி, பூநாறி மரத்தடி, நாச்சிமார் கோயில், இராச வீதி, கல்வியியற் கல்லூரி, 51 பிரிகேட் இராணுவ தலைமையகம், கோப்பாய் கிருஷ்ணன் கோயில், பொற்பதி வீதி, கோண்டாவில் இருபாலை வீதி, கோண்டாவில் மேற்கு, பலாலி வீதி, முழு நெடுந்தீவுப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## முகமாலை வேம்பொடுகேணிப் பகுதியில் இன்னமும் அகற்றப்படவில்லை கண்ணிகள்

### உத்தியோகபூர்வ அறிவிப்பு வரும் வரை எவரும் செல்லாதீர்

பளை, பெப்.22
முகமாலை, வேம்பொடுகேணி மேற்குப் பகுதி மற்றும் இத்தாவிலின் சிலபகுதிகளில் இன்னமும் வெடி பொருள்கள் அகற்றப்படவில்லை. அதனால் அந்தப் பகுதிகளுக்கு மக்களைச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறது.
முகமாலை - கிளாலி வீதியில் உள்ள தமது காணிகளைப் பார்ப்பதற்காக, சிலர் அந்தப் பகுதிக்குச் சென்று வருகின்றனர் என்று தகவல் கிடைத்துள்ளது. அங்கு கண்ணிவெடிகள் இன்னமும் அகற்றப்படவில்லை. எந்த இடத்திலும் கண்ணிகள் இருக்கலாம். அதனால் விபரீதங்கள் ஏற்படும் அபாயம் உள்ளது.
கண்ணிகள் மற்றும் வெடிப் பொருள்கள் அகற்றப்பட்டமைக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளிவரும் வரை அந்தப் பகுதிகளுக்குச் செல்ல வேண்டாம் என்று பளை பிரதேச செயலகத்தினர் அறிவுறுத்துகின்றனர்.

**பதிவு செய்யுமாறு அறிவுறுத்தல்**

இதேவேளை, பளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மீளக்குடியமர அனுமதிக்கப்படாத முகமாலை, வேம்பொடு கேணி, இத்தாவில் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களின் விவரங்கள் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.
இந்தப் பிரிவுகளில் மீளக்குடியமராமல் ஏனைய பிரதேசங்களில் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ள மக்கள் தமது பதிவை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.
இதனிடையே முகமாலைப் பகுதியில் இருந்து படையினர் வெளியேற்றம் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. எனினும் முற்றாக அவர்கள் இன்னமும் வெளியேறவில்லை. தொடர்ந்து வெளியேறி வருகின்றனர்.
இதேவேளை -
கடந்த 20 ஆம் திகதிய உதயனில் முகமாலை - கிளாலி வீதியின் இரு பக்கமும் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று வெளியாகி இருந்த செய்தி சரியான தகவல் அல்ல. (ஒ-9)

## ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், பெப்.22
தாவடி மத்திய சனசமூக நிலையத்தில் 75 ஆவது ஆண்டு நிறைவையும் விநாயகர் முன்பள்ளியின் 25 ஆம் ஆண்டு நிறைவையும் முன்னிட்டு மேற்படி சனசமூக நிலையத்தின் திறந்த வெளியரங்கில் நாளை ஞாயிற்றுக்கிழமை கண்காட்சியும் கலை விழாவும் நடைபெறவுள்ளன.
வலி.தெற்கு பிரதேச சபையின் உப தவிசாளர் இ.பரமேஸ்வரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ் வில் வடமாகாண சபைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.
சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி, வலிகாமம் தெற்கு பிரதேச சபைத் தவிசாளர் தி.பிரகாஸ், உடுவில் பிரதேச செயலக முன்பள்ளிப் பருவ அபிவிருத்திப் பிரிவு உத்தியோகத்தர் ம.ரவிபாலா, தாவடி இந்து த.க.பாடசாலை அதிபர் என்.தனபாலசிங்கம், தாவடி கிழக்கு கிராம அலுவலர் பொ.ஜெயகரன் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர். (ஒ-115)

## நடைமுறையை மீறிய ஓட்டோ; கண்டித்துப் பணிப் புறக்கணிப்பு

### சங்கத்தினர் நேற்று எதிர்ப்பு நடவடிக்கையில்



யாழ். நகரில் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்ட ஓட்டோ உரிமையாளர்கள்.

யாழ்ப்பாணம்.பெப்.22
சங்கத்தின் நடைமுறையை மீறி போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் முகமாக தனிநபரொருவர் ஓட்டோ சேவையை வழங்குவதைக் கண்டித்து யாழ். நகரில் சேவையில் ஈடுபடும் ஓட்டோக்களின் சாரதிகள் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.
இது தொடர்பாக யாழ்.மாவட்ட ஓட்டோ சங்கத்தலைவர் இராசையா மனோகரராஜா தெரிவித்துள்ளதாவது:-
யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் ஒவ் வொரு ஓட்டோக்களுக்கும் பதிவு உள்ளது. அவர்களுக்கான தரிப்பிட ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட் டுள்ளன.
இந்த நிலையில் யாழ்.சத்திரச் சந்தி ஓட்டோ தரிப்பிடத்தில் மகாதேவன் மயூகரன் என்பவருக்கு சங்கத்தால் தரிப்பிடம் ஒதுக்கப்பட்டுள்ள போதும் கடந்த 2 வாரங்களாக சங்க நடைமுறைகளுக்கமையாது யாழ். மின்சார நிலைய வீதியில் அத்து மீறித் தரித்து சேவையில் ஈடுபடுகிறார்.
தனிப்பட்ட நபர் சங்க விதிமுறைகளை மீறி செயற்படுவதால் ஏனைய சாரதிகளும் தமக்குள் முரண்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.
இது தொடர்பாக யாழ்.மாநகர சபை, மக்கள் தொடர்பகம், பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு, பொலிஸ் நிலையம் ஆகியவற்றுக்கு கடந்த 3 தினங்களுக்கு முன்னர் கடிதம் மூலம் தெரியப்படுத்திய போதும் எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாத காரணத் தால் இந்தப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளோம்" - என்றார்.
யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் பதிவு செய்யப்பட்ட ஓட்டோக்கள் நேற்று அந்தந்தத் தரிப்பிடங்களில் ஓட்டோக்களை நிறுத்திப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டன. (வ-14)

**பேடன்பவல் தின நிகழ்வு**

பருத்தித்துறை மாவட்ட இலங்கை சாரண சங்கம் நடத்தும் பேடன்பவல் தின நிகழ்வு இன்று பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.
பருத்தித்துறை, வேலாயுதம் மகா வித்தியாலயத்தின் அதிபர் எஸ்.திரவியராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம் விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபனும், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக் கல்வி அலுவலர் ச.சற்குணராசா, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் ச.வேலழகன் ஆகியோரும் கலந்துகொள்வர். (வ)

## பிரிவுபசார விழா

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் கணக்காளராகப் பணியாற்றிய செ.ரகுநாதன் மாவட்ட செயலகத்துக்கும் உதவித் திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றிய செல்வி கு.சுதர்சனா, சாவகச்சேரிப் பிரதேச செயலகத்துக்கும் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். இருவருக்குமான பிரிவுபசார நிகழ்வு இன்று சனிக்கிழமை ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஒ-7)

**மாட்டுவண்டில் சவாரிப்போட்டி**

பன்னாலையில் கடந்த வாரம் இடம்பெறுவதாக இருந்த ஒத்திவைக்கப்பட்ட மாட்டு வண்டில் சவாரிப்போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு புதிதாக அமைக்கப்பட்ட பன்னாலை மாட்டுவண்டில் சவாரித் திடலில் நடை பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (வ-86)

## பாலு மகேந்திரா நினைவு நிகழ்வு இன்று இமையாணனில்

பருத்தித்துறை.பெப் .22
வடமராட்சி உயில் கலை இலக்கிய மன்றத்தினர் "இந்திய திரைப்பட ஒளிப்பதிவாளரும் இயக்குநருமான அமரர் பாலுமகேந்திராவின் நினைவாக 'பாலுமகேந்திரா அழியாச்சுடர்' என்னும் அஞ்சலி நிகழ்வை இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பருத்தித்துறை வீதி இமையாணன் பதிப்பகத்தில் நடத்தவுள் ளனர்.
இ.செல்வமனோகரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் அ.யேசுராஜா, சி.விமலன் ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்தவுள்ளனர்.
நிகழ்வில் 'நம்பிக்கை' குறும்படக் காட்சியும் கலந்துரையாடலும் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-9)

## 'நீருயிர் வளம்' நூல் வெளியீடு

'நீருயிர் வளம்' நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு விக்ரோரியாக் கல்லூரியில் அதிபர் வ.ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலிகாமம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமியும் சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராசா, பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபர் ம.இக்னேசியஸ் ஆகியோரும் கலந்துகொள்வர். (வ)

## மு.காங். தலைவர் கூறும் கருத்துக்களில் முரண்பாடு

### உலமா கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு,பெப்.22
வெளிநாட்டு தலையீடு என்பது இனங்களுக்கிடையிலான விரிசலை மேலும் அதிகரிக்கும் என்றுகூறிக்கொண்டே இலங்கை முஸ்லிம்களின் பிரச்சினைகளைதான் சர்வதேசத்தின் முன் வைப்பதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கூறுவது முரண்பாடானதாகும். இவ்வாறு உலமா கட்சித் தலைவர் முபாறக் மௌலவி தெரிவித்தார்.
இந்த விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அண்மையில் இலங்கை வந்திருந்த ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் விவகார திணைக்களத்தின் ஆசிய பசுபிக் பிராந்திய தலைவியை சந்தித்த போது வெளிநாட்டு தலையீடு பிரச்சினையை அதிகரிக்கும் என்று ஹக்கீம் கூறியுள்ளார்.
தேசிய சுதந்திர முன்னணியின் உறுப்பினரின் கருத்துக்கு பதில் தரும் போது முஸ்லிம் சமூகம் அண்மைக்காலமாக எதிர் நோக்கும் தாக்குதல்கள் பற்றிய விவரங்களை தமது கட்சியும் சர்வதேசத்திடம் முன்வைத்துள்ளதாக பகிரங்கமாக கூறியிருந்தார்.
இத்தகைய இரண்டு முரண்பட்ட கருத்துக்கள் மூலம் ரவூப் ஹக்கீம் அரசையும் முஸ்லிம்களையும் சமாளித்துக் கொண்டு தமது பதவியைக் காக்க முற்படுகிறார் என்பது தெளிவாக தெரிகிறது.
இன்று தமிழ் மக்கள் தமக்கான தீர்வை இந்த நாட்டில் பெறமுடியாது என்பதை உணர்ந்த பின்னரே தமது பிரச்சினைகளை சர்வதேசத்தின் முன் கொண்டு வந்துள்ளனர். இந்த நிலையில் அரசுக்கு முஸ்லிம்கள் பூரண விசுவாசமாக இருந்தும் முஸ்லிம்களின் 27 பள்ளிவாசல்களுக்கு மேல் தாக்கப்பட்டுள்ளன. ஹலால் சான்றிதழ் நிறுத்தப்பட்டது.
பள்ளிவாசல் கட்டுவதாயின் புத்த சாசன அமைச்சின் கால்களில் விழ வேண்டுமென்று சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. அடையாள அட்டையில் முஸ்லிம்கள் தமது கலாசார ஆடைகளை அணிய முடியாது என்ற சட்டம் எனப் பல அநியாயங்களை முஸ்லிம் சமூகம் எதிர் நோக்கும் போது முஸ்லிம் கட்சித்தலைவர்களும், அவர்களின் உறுப்பினர்களும் இவை எதனையும் தடுத்து நிறுத்த முடியாத கையாலாகாதவர்களாய் இருக்கின்றனர்.
ஒரு சமூகம் உள்நாட்டில் பிரச்சினைகளை எதிர் நோக்கும் போது உள்நாட்டில் அதற்கான தீர்வைத் தேடும். ஆனால் பிரச்சினையை ஏற்படுத்துபவர்களே ஆட்சியாளர்களாக இருந்தால் எங்கே போய் தீர்வைத் தேடுவது என்று கூடப் புரியாதவர்களாய் நமது முஸ்லிம் அமைச்சர்கள் இருப்பது சமூகத்தின் மிகக்கேவலமான நிலையாகும்.
எனவே முஸ்லிம் அமைச்சர்களின் தலைமைகளிலான கட்சிகள் முஸ்லிம்கள் பிரச்சினைகளை தீர்க்க சர்வதேசத்தை நாடாத போதும் தமிழ் மக்கள் தமக்கான தீர்வுக்கு வெளிநாடுகளை எதிர்பார்ப்பதை தயவு செய்து கொச்சைப்படுத்த வேண்டாம் - என்றார். (ச-10)

# மரண அறிவித்தல்



## திருமதி கமலாம்பிகை கைலாசநாதன்

மண்டைதீவு, 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பாடசாலை வீதி, தாவடி தெற்கு, கொக்குவிலை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை கைலாசநாதன் நேற்றுமுன் தினம் (20.02.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கைலாசநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பியப்பா - சின்னம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-ராசம்மா தம்பதியரின் மருமகளும், நாகலட்சுமி, தனலட்சுமி, நித்தியலட்சுமி ஆகியோரின் சகோதரியும், மோகனராஜா (உருத்திரபுரம்), வனிதாதேவி (ஊற்றுப்புலம்), கைலாசவாசன் (கொட்டடி), கருணாகரன் (ஜேர்மனி), நிர்மலாதேவி (ஸ்கந்தபுரம்), ஸ்ரீகாந்ததேவி (மண்டைதீவு), ஜெயசீலன் (ஜேர்மனி), கமலேந்திரன் (கிளி-ஜெயந்திநகர்), சுகந்தன் (மண்டைதீவு), ஜெயந்தன் (சுவிஸ்), கமலேஸ் வரி (தாவடி) ஆகியோரின் அன்புத் தாயும், குமார சாமி, லலிதாம்பாள், வசந்தமாலா, மங்களஜோதி (ஜேர் மனி), தங்கலிங்கம், சிவயோகராஜ், தர்சினி (ஜேர்மனி), கனிஸ்டா ரூபினா, காஞ்சனா, கஜனி (சுவிஸ்), றமணன் ஆகியோரின் மாமியும், சிறிவாணி, காலஞ்சென்ற நந்தினி மற்றும் சாந்தினி, தர்சினி, சுகந்தினி, பிரதீபா, கஜன், கஜந்தன், அஜந்தன், துசன், கஜீவன், ஜீவிதா, கைலினி, பௌசிகா, அனுசன், சிந்துஜா, துளசிவாசன், கஜிதன் (ஜேர்மனி), கீர்த்திகன் (ஜேர்மனி), டக்ஷன், இளங்கோ, டிலானிகா, சுரேன், அஜித், பவதாரன், கஜோஜினா, ஜெனீதன் (ஜேர்மனி), பாணுசன் (ஜேர்மனி), இந்துஜன் (ஜேர்மனி), தேனுஜா, பாருஷா, தவசிகா, ஜபிசன், பரணிகா, டிசாலினி, தனுஸ்கா, கஜேஷ் (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியும், புகழினி, டிலைக்சிகா, சதுர்சன், பிரசாந், பூவிழி, சாகித்யா, சிந்துஜன், குயிலவன், மகிழவன், கஜீவன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (23.02.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது தற்போதைய முகவரியில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்டைதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை வீதி,
தாவடி தெற்கு, கொக்குவில்.
T.P: 077 056 9992

தகவல்:
குடும்பத்தினர்.

(44963)(10.6.3)

# ஐஸ் உற்பத்தி மற்றும் தொழில் ரீதியான குளிரூட்டலுடன் (றிபிறிஜிரேஷன்) தொடர்புடையவர்களா?

# அழையுங்கள் எங்களை!


**Kirloskar's நிறுவனத்தினரைச் சந்தித்து உங்கள் குளிரூட்டல் பொறி அமைப்பின் பங்காளிகளாகிக்கொள்ளுங்கள். மற்றும் அவைகளை சொந்தமாக்கி மிகக் குறைந்த செலவீனத்தையும் அனுபவியுங்கள்.**

- இந்தச் சந்திப்பானது வாடிக்கையாளர்களின் செயற்பாடுகளை அறிந்துகொள்வதையும் கிர்லோஸ்கர் றிபிறிஜிரேஷன் இயந்திரங்களை அறிமுகம் செய்துகொள்வதையும் / பரஸ்பர தொழில் உறவுகள் மற்றும் ஆதரவுகள் தொடர்பான தகவல்களை பரிமாறிக் கொள்வதையும் நோக்கமாகக்கொண்டது.
- அக்கறையுள்ள நிறுவனங்களை 2014 மார்ச் மாதம், உங்களால் முற்பதிவுசெய்யப்பட்ட திகதியொன்றில் கிர்லோஸ்கர் நிறுவன சிரேஷ்ட பிரதிநிதிகள் நேரடியாக சந்தித்து உரையாடுவார்கள்.
- அக்கறை உள்ள நிறுவனங்களாகிய உங்களுடன் தொடர்புகொள்வதற்கு உரிய திகதி மற்றும் இடத்தை தீர்மானித்துக் கொள்வதற்காக எம்முடன் நேரடியாக அல்லது மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

## கிர்லோஸ்கர் நியுமற்றிக் கோ, லிமிடெட் (கேபிசிஎல்)

## Kirloskar Pneumatic Co. Ltd.(KPCL)

* தொழில் ரீதியான குளிரூட்டலுக்கு தேவையான காற்றமுத்திக் கருவிகளை உலகில் தயாரிக்கும் மிகப்பெரிய நிறுவனங்களில் ஒன்று.
* 40 இக்கு மேற்பட்ட நாடுகளில் இவ்வாறான 30,000+காற்றமுத்திக் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன.
* ஒன்று அல்லது இரண்டு நிலைகளைக்கொண்ட காற்றமுத்திகள்
* விற்பனைக்குப் பின்னர் சேவைகள், உதிரிப்பாகங்கள் தொடர்பில், உள்ளூர் வர்த்தக ஆதரவு கிடைக்கும்.
* இலங்கையில் நிறுவப்பட்டுள்ள 100+ இக்கு மேற் பட்டவை பல வருடங்களாக வெற்றிகரமாக இயக்குகின்றன.




**KIRLOSKAR PNEUMATIC CO. LTD.**,India.
**Contact:** Mr. Anand Kuvar
**Mob:** +91-9881495517. **(O)** +91-20-26727087
**Email-** imd@kpcl.net;kuvarar@kpcl.net

**LANKA INDUSTRIAL SERVICES AGENCIES PVT. LTD.**, Wattala, Srilanka
**Contact:** Mr. Clement Fernando
**Mob:** 077-3120075, **(O)** 011-2934419-21
**Email-** lankaind@gmail.com

Kirloskar

Enriching Lives



KCX Series | KC Series | Recip Compressor Package | Screw Compressor Package

# KIRLOSKAR
## PNEUMATIC CO. LTD.

**Regd. Office:** Hadapsar Industrial Estate, Pune 13. India.
Tel. : +91-20-26727000. Fax : +91-20-26870514, 26870297.

**www.kirloskarkpcl.com** (C/12211)(2.3.6)

# துணுக்காய் பிரதேசசபை
# பொது அறிவித்தல் 2014

**01. படவரைஞராக பதிவு செய்தல்**

2014ஆம் ஆண்டு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2014ஆம் ஆண்டு பெப்ரவரி 28ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளைச் செய்து கொள்ளவும்; புதுப்பித்துக் கொள்ளவும் எமது தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்

**02. வியாபார உரிம அனுமதிப்பத்திரம் -2014**

இப் பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் பொருள்களை விநியோகிப்போர் 2014ஆம் ஆண்டுக்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கான விண்ணப்பப் பத்திரத்தை துணுக்காய்ப் பிரதேசசபை அலுவலகத்தில் பெற்று அதனை பூரணப் படுத்தி 31.03.2014 ஆம் திகதிக்கு முன் செலுத்தி உரிமத்தைப் பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

**03. வீடமைப்பு நகர சீர்திருத்தக் கட்டளைச்சட்டம் பிரிவு 268 இன் பிரகாரமான அறிவித்தல்**

3:1 துணுக்காய் பிரதேசசபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச தனியார் கட்டடங்கள், மதில், மலசலகூடங்கள், கிணறுகள், குழாய்க்கிணறுகள் என்பவற்றை அமைத்தல் புதுப்பித்தல் வேலைகளைச் செய்தல் போன்றன சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமென்பதை அறியத்தருகின்றேன்.

3:2 ஏற்கனவே அனுமதி பெற்றவர்கள் கட்டடம் கட்டி முடிக்கப்படாத பட்சத்தில் அனுமதியைப் புதுப்பித்தல் வேண்டும்

3:3 சபையின் அனுமதி பெற்று கட்டடம் கட்டி முடித்தவர்கள் கட்டிமுடிக்கப் பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத் தந்து உரிய அமைவுச் சான்றிதழை பெற்றுக்கொள்ளல் வேண்டும்

**04. சூழல் பாதுகாப்பு உரிமம் (EPL) -2014**

மத்திய சூழல் அதிகார சபைத் தலைவர் 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சூழல் பாதுகாப்புச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு எனக்கு வழங்கப்பட்ட குறிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் துணுக்காய் பிரதேசசபையின் நிர்வாக பாதுகாப்பு பிரதேசசத்தில் 1533/16ஆம் இலக்க 25.01.2008ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகைகளில் விதந்துரைக்கப்பட்ட தொழில் நடவடிக்கைகளுக்கு அமைவாக மேற்குறிப்பிட்ட அறிவித்தலுக்கிணங்க வியாபாரத்தை/தொழிலை நடத்துகின்ற உரிமையாளர்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்க வேண்டிய பொறுப்பு எனக்கு வழங்கப் பட்டுள்ளது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள். துணுக்காய் பிரதேசசபையின் பணிமனையுடன் தொடர்பு கொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தைப் பெற உரிய நடவடிக்கை எடுக்கவும் இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 2014ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட தொழில்களை நடத்த அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதனையும் இத்தால் அறியத்தருகின்றேன்.

**05. விளம்பரங்களை அமைத்தல் / காட்சிப்படுத்தல்**

இப்பிரதேச சபையின் நிர்வாக பிரிவிலுள்ள பொதுவீதிகளின் இருமருங்கிலும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்பட்டு / காட்சிப் படுத்தப்படும் விளம்பரங்களை 28.02.2014 ஆம் திகதிக்கு முன் உரிய கட்டணத்தைச் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களில் விளம்பரங்கள் இல்லாத பெயர்ப்பலகை ஒன்று மட்டும் காட்சிப் படுத்த முடியும் விளம்பரங்களுடனான பெயர்ப் பலகை ஒன்று மட்டும் காட்சிப் படுத்த முடியும். விளம்பரங்களுடனான பெயர்ப்பலகை மற்றும் மேலதிகமாக உள்ள பெயர்பலகைகளுக்கு பிரதேசசபையின் அனுமதி பெறப்படல் வேண்டும். அவ்வாறு அனுமதி பெறப்படாத பெயர்ப்பலகைகள் பிரதேசசபையால் அகற்றப் படும்.

**06. பொதுச்சந்தைகள் , இறைச்சிக்கடைகளுக்கு அண்மித்த பகுதியில் வைத்து கடலுணவுகள், மரக்கறிகள், இறைச்சி, உயிர்க்கோழிகள் விற்பனையை தடை செய்தல்.**

துணுக்காய் பிரதேசசபையின் பொதுச்சந்தைகள் இறைச்சிக்கடைகள் அமைந்துள்ள பகுதிகளில் ஒரு கிலோமீற்றர் வரையான சுற்றாடலில் மரக்கறிகள் கடலுணவுகள் இறைச்சி வகைகள் என்பன வர்த்தக நிலையங்களிலோ வீதியோரங்களிலோ விற்பனை செய்தல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. இதனை மீறுபவர்கள் மீது சபையால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**07. பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதியோரங்களிலும் கழிவுகளை போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.**

சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும் வீதியோரங்களிலும் கழிவுப் பொருள்களைப் போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் கொள்கலனில் கழிவுப் பொருள்களைச் சேகரித்து அதனை அகற்றுவதற்கு எமது சபையின் தலைமை அலுவலகத்தில் உரிய கட்டணத்தினை செலுத்தி சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**08. பொது இடங்களில் கழிவுகள் போடுதல்**

துணுக்காய்ப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப்பொருள்களை அனுமதியின்றிக் கொண்டு செல்லல், கொட்டுதல் ஆகியன பொதுச் சுகாதாரத்தைக் கருத்திற் கொண்டு தடைசெய்யப்பட்டுள்ளது. தவறின் பிரதேசசபை கட்டளைச் சட்டம் மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சட்டம் போன்றவற்றின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**09. பொதுச்சுகாதாரம் பேணுதல்**

சபை எல்ல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும் பற்றைகள் வளர்ந்தும் பொதுச்சுகாதாரத்திற்கு இடையூறாக உள்ள காணி உரிமையாளர்கள் பற்றைகளைத் துப்புரவு செய்து சுகாதாரத்தினைப் பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

**10. கட்டாக்காலி கால்நடைகளை கட்டி வைத்தல்**

சபை எல்லைக்குள் பொது போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் வகையில் வீதிகளில் அலைந்து திரியும் கட்டாக்காலி கால்நடைகளை உரிமையாளர்கள் சரியான முறையில் பராமரித்தல் வேண்டும். தவறும் பட்சத்தில் பிரதேச சபையால் பிடிக்கப்பட்டு பகிரங்க ஏலத்தில் விடப்படுவதுடன் உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும்.

செயலாளர்,
பிரதேசசபை,
துணுக்காய்.

(C/12539)(10.6.3)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.22

சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கல்லூரி மைதானத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் திருமதி ல.முகுந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் க.பிரேமச்சந்திரன் முதன்மை விருந்தினராகவும் வடமாகாணசபை உறுப்பினர் கே.சயந்தன் சிறப்பு விருந்தினராகவும், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் உதவி மாவட்ட ஆணையாளர் சோ.ஈழநேசன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர். (வ)

## கணித புதிர்ப் போட்டி பரிசளிப்பு விழா

வடமராட்சி வலய கணிதப் பிரிவு நடத்தும் கணிதப் புதிர்ப் போட்டி பரிசளிப்பு விழாவும், கணித உபகரணப் போட்டியும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் அமைந்துள்ள வடமராட்சி வலய கணித மூல வள நிலையத்தில் வடமராட்சி வலய கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.ம.ஈஸ்வரதேவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமாரும், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலய கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.ஸ்ரீகரனும் கலந்து கொள்வர். கௌரவ விருந்தினர்களாக கரவெட்டிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.பொன்னையா, பருத்தித்துறைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.ஸ்ரீராமச் சந்திரன் ஆகியோரும் கலந்து கொள்வர். (ஒ)

## விளையாட்டு விழா

மானிப்பாய் சத்திய சாயி பாடசாலையின் பண்பு விருத்தி விளையாட்டு விழா இன்று பி.ப. 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி ப.பத்மநாதன் தலைமையில் இடம்பெறும். பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் சு.முரளிதரன் கலந்து கொள்வார்.

(ஒ-400)

## பொதுக்கூட்டம்

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் அபிவிருத்தி சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் அதிபர் கு.விமலன் தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குகல்லூரிமண்டபத்தில் நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (ஒ)

◆◆◆

சாவகச்சேரி பழனி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் 22 ஆவதுவருடாந்தப்பொதுக் கூட்டம்நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சங்கத்தின் தலைவர் தலைமையில் சாவகச்சேரி டச்சு வீதி அகிலாண்டம் சன சமூக நிலைய மண்டபத்தில் நடை பெறவுள்ளது. (வ)

## மண்டலாபிஷேக பூர்த்தி

பரந்தன் கோரக்கன் கட்டு துர்க்காதேவி ஆலயத்தின் அநாவர்த்தன மஹாகும்பாபிஷேகமண்டலாபிஷேக பூர்த்தி நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இதற்கானகிரியைகள் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளன. (வ)


**கடை வாடகைக்கு விடப்படும்**

சாவகச்சேரி கொமர்ஷல் வங்கிக்கு அருகில் உள்ள இரு கடைகள் வாடகைக்குள்ளன.

(44969)(3.6.4) தொ.பே:077 875 9401

**வாடகைக்கு விடப்படும்**

JCB-2750/= (1 மணித்தியாலத்திற்கு)
Excavater-2250/= (1மணித்தியாலத்திற்கு)
DOZER -2250/= (1மணித்தியாலத்திற்கு)
மற்றும் டிராக்டர், பவுசர், கரியர், தட்டுலொறி என்பன வாடகைக்கு விடப்படும்.

தொ.பே:072 226 3778, 071 416 7878 (44940)(3.6.4)

**வீடு வாடகைக்குத் தேவை**

அரச உத்தியோகத்தர் இருவர் கொண்ட சிறிய குடும்பத்துக்கு சுன்னாகம், மல்லாகம், இணுவில், கொக்குவில், உரும்பிராய், உடுவில் ஆகிய இடங் களில் வாடகைக்கு வீடு தேவை.

தொ.பே: 077 628 2904 (சி/12537)(7.6.3)

**பணிப்பெண் தேவை**

வயோதிப பெண்ணைப் பராமரிப்பதற்கும் வீட்டு வேலைகள் செய்வதற்கும் 40 வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை. வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக் கூடியவர்கள் விரும்பத்தக்கது. (44965)(7.6.3)

தொ.பே: 077 873 6700, 076 712 0333

**தேவை**

யாழ்நகர், சுன்னாகம் ஆகிய இடங்களில் இயங்கிவரும் முதியோர் இல்லங்களுக்கு பராமரிப்பாளர்கள் தேவை. தொ.பே: (44950)(7.6.3)

077 712 6857, 077 712 6859


## மரண அறிவித்தல்

**செல்லத்துரை அழகராசா**



தச்சன்தோப்பு, கைதடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை அழகராசா 20.02.2014 வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 696 5152
சண்டிலிப்பாய் மத்தி, சண்டிலிப்பாய்,
T.P:077 922 8968
(44961)(3.6.4)

## கண்ணீர் அஞ்சலி



எமது காரியாலயத்தில் கடமையாற்றிய
திருமதி **கார்த்திகா கமலதாசன்**
அவர்களின் அன்பு அண்ணா
**அமிர்தலிங்கம் செந்தூரன்**
அவர்கள் 16.02.2014 அன்று
பிரான்ஸில் காலமானதையிட்டு
அன்னாரின் பிரிவினால்
துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளரும், ஊழியர்களும், தேசிய சேமிப்பு வங்கி,
யாழ்ப்பாணம் மேற்தரக்கிளை.
(44948)(3.6.4)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**மகேஸ்வரி தில்லையம்பலம்**

மலர்வு
10.06.1930

உதிர்வு
07.03.2010

திதி:22.02.2014

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

என்ற வள்ளுவர் வாக்கியத்துக்கிணங்க
வாழ்ந்த தெய்வத்தாயே!
நீங்கள் என்றும் எம் நெஞ்சங்களில்
வாழ்ந்துகொண்டிருப்பீர்கள்.

கதிர்காம கோயிலடி,
வதிரி, கரவெட்டி.
(சி/12534)(3.6.4)

பாசமிகு குடும்பத்தினரும்,
உறவுகளும்.

## தேவை

முன் பணம் இல்லாமல் யாழ். நகரப் பகுதியில் Air travels Agency திறப்பதற்கு வாடகைக்கு இடம் தேவை. Air travels இல் வேலை செய்ய விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்

தொடர்பு:078 783 5859 (44970) (3.6.4)

## அறைகள் நாள் வாடகைக்கு

ஒருவருக்கு 500/=, இருவர் 1000/=, நால்வர் 2000/=(Attached Bathroom)

Hotel Villa City
422 Galle Road, Wellawatte
T.P: 072 255 2222 (கி/12214)(3.6.4)

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை 2ஆம் குறுக்குத் தெருவில் தெணிப்பிள்ளையார் கோயிலுக்கு அருகில் 'சல்லி மணல்' நிலப் பரப்பு 6 விஸ்தீரணம் கொண்ட சுற்றுமதிலுடன் கூடிய காணி விற் பனைக்குண்டு.

தொடர்பு:
0777 143641, 021 226 3870

## ALL OUT
Pest control service




தொடர்புகளுக்கு
ந.ருபகாந்த் : 077 1515897, 021 4993200

## தேவை

உங்கள் வீடுகளில் உள்ள பழைய காகிதாதிகள், புத்தகங்கள், கொப்பிகள், காட்போட், பத்திரிகைகள் முதலானவற்றைப் பணம் தந்து பெற்றுக் கொள்கின்றோம். தொடர்பு : 077 4180185

# உணவு, சிற்றுண்டி வழங்கலுக்கான கூறுவிலை கோரல் -2014

**கிளிநொச்சி கல்வி வலய மட்டத்தில் நடத்தப்படும் கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புகள், விழாக்கள், போட்டிகள் என்பவற்றுக்கு உணவு, சிற்றுண்டி வழங்குவதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது.**

01. இதற்கான கேள்விப்பத்திரங்களை 24.02.2014 தொடக்கம் 05.03.2014 முற்பகல் 10.00 மணிவரையும் ரூபா நூறு (100) மீளளிக்க முடியாத வைப்புப் பணம் செலுத்தி நேரடியாக அலுவலகத்தில் (நிதிக்கிளை, வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி) பெற்றுக் கொள்ள முடியும்.
02. கேள்விப் பத்திரங்கள் யாவும் மூடிய பொதியிடப்பட்ட உறையில் ஒட்டப்பட்டு கடித உறையின் மேல் மூலையில் **"உணவு, சிற்றுண்டி வழங்கலுக்கான கூறுவிலை 2014"** எனக் குறிப்பிடப்பட்டு 05.03.2014 நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அலுவலகத்திற்கு (**"கணக்காளர், வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி"**) எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
03. கூறுவிலைகள் 2014/ 2015 ஆம் நிதியாண்டு காலப்பகுதிக்குச் செல்லுபடியாகும்.
04. சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலைகளைப் பகுதியாக ஏற்பதற்கோ அல்லது நிராகரிப்பதற்கோ முழுமையாக ஏற்பதற்கோ அல்லது முழுமையாக நிராகரிப்பதற்கோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு.
05. வழங்கப்படும் உணவுப் பண்டங்கள் மிகவும் தரமானதாகவும் சுகாதாரமுறையில் தயாரிக்கப்பட்டதாகவும் இருத்தல் மிக அவசியம்.
06. தரம் குறைந்த, அல்லது சுகாதாரமற்ற பொருள்கள் விநியோகிப்பின் குறித்த பண்டத்திற்கான கொடுப்பனவு நிறுத்தப்படுவதுடன் வழங்குநரின் தெரிவு இரத்துச் செய்யப்பட்டு, அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையும் எடுக்க நேரிடும்.
07. வழங்குநர்கள் எம்மால் கேள்விப் பத்திரத்தில் குறிப்பிடப்படும் எல்லா உணவுப் பண்டங்களையும் விநியோகிக்கும் திறமையுடையவராக இருத்தல் வேண்டும்.
08. பாடசாலைகளிலுள்ள கூட்டுறவு/ நலன்புரி உணவுச் சாலைகளும் இக் கேள்வி நடைமுறையில் பங்குபற்றலாம். அவர்களுக்கும் மேற்கண்ட விதிமுறைகள் ஏற்புடையதாகும்.
09. குறித்த வழங்குநர் கேள்விகளைக் கையாளுதல், சிட்டை தயாரித்தல் போன்றவற்றுக்குத் தகுந்த கல்வியறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.
10. உணவுப் பண்டங்கள் பூநகரி, முழங்காவில், ஜெயபுரம், அக்கராயன், உருத்திரபுரம், பளை, கண்டாவளை, கிளிநொச்சி நகரம், இராமநாதபுரம், பரந்தன், தர்மபுரம் பிரதேசங்களுக்கு முக்கியமாக விநியோகிக்கப்படவேண்டும்.
11. வழங்குநர்கள் தம்மால் உணவு, சிற்றுண்டி விநியோகிக்கக்கூடிய பிரதேசத்தைக் குறிப்பிடப்படுவதுடன் அப்பிரதேசங்களில் வழங்கல் மேற்கொள்வதற்கான கூறுவிலைகள் வேறுபடின் தனித் தனியே குறிப்பிடலாம்.
12. வழங்குநர்கள் உணவு தயாரிப்பிலும், விநியோகத்திலும் குறைந்தது 4 வருட முன் அனுபவம் உடையவர்களாகவும் அதற்கான ஆதாரமும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
13. உணவுப் பண்டங்கள் விநியோகம் றெஜிபோம் பெட்டிகளில் பொதி செய்து வழங்கப்படுவதுடன் குறித்துரைக்கப்படும் நேரத்தில் உணவுப் பண்டங்கள் விநியோகிக்கப்படல் வேண்டும். சிற்றுண்டிகளும் இவ்வாறு பொதி செய்து வழங்குவதாயின் உதிரிகளாக வழங்குவதற்குமான கூறுவிலை தனித்தனியே சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
14. உணவு, சிற்றுண்டி வகைகள் கடனடிப்படையில் வழங்க வேண்டும். முற்பணம் வழங்கப்பட மாட்டாது. கடன்தயை காலம், அதியுயர் கடன் எல்லை என்பவையும் குறிப்பிடல் வேண்டும்.
15. தெரிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் உணவு, சிற்றுண்டிகள் வழங்குவதில் சிக்கல் நிலை காணப்படின் ஏழு வேலை நாள்களுக்கு முன்னர் எழுத்து மூலமான அறிவுறுத்தல் வழங்க வேண்டும். அல்லாது விடின் தங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
16. உணவுப் பொருள்கள் சிற்றுண்டிகள் வழங்குவதால் ஏற்படும் சுகாதாரம், தொற்றுப் பிரச்சினைகளுக்குக் கேள்விச் சபையோ, நிறுவனமோ பொறுப்பு ஏற்கமாட்டா. குறித்த வழங்குநர்கள் இதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும். இதனால் ஏற்படும் நஷ்டஈட்டையும் வழங்குநர்களே வழங்குதல் வேண்டும். எனினும் உணவு வழங்கல் தொடர்பாக எமது பூரண கண்காணிப்பு காணப்படும்.

**க.முருகவேல்,** (C/12514) (2.6.3)
**வலயக் கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி.**


## மைதானம் இல்லாததால் இடர்கள்

வவுனியா, பெப்.22

விளையாட்டு மைதானம் இல்லாததால் வவுனியா விபுலானந்தாக் கல்லூரி மாணவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

பாடசாலைக்கு அருகில் விளையாட்டு மைதானம் இல்லாத நிலையில் பாடசாலை மாணவர்கள் நீண்ட தூரம் நடந்து சென்று வவுனியா வைரவப் புளியங்குளம் பகுதியில் அமைந் துள்ள விளையாட்டுக் கழகமொன்றின் மைதானத்தைப் பயன்படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த மாணவர்கள் பண்டாரிக்குளம் வீதி, புகையிரத நிலைய வீதி, வைரவப்புளியங்குளம் வீதி என்பனவற்றின் ஊடாகச் செல்லும்போது வீதி விபத்துக்கள் ஏற்படும் வாய்ப்புக்களும் காணப்படுகின்றன.

இதனைக் கவனத்தில் கொண்டு அரச, அரச சார் பற்ற நிறுவனங்கள் பாடசாலைக்கென விளையாட்டு மைதானம் ஒன்றை அமைப்பதற்கு உதவவேண்டுமென பாடசாலை நிர்வாகத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(க-402)

## மாணவருக்கு விழுமிய பயிற்சி வகுப்புகள்

மகா சிவராத்திரியை முன்னிட்டு யாழ். சின்மயா மிஷனின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கான விழுமியப் பயிற்சி வகுப்பும் மற்றும் ஆன்மிக நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு விழுமியப் பயிற்சி வகுப்பும் மறுநாள் வெள்ளிக்கிழமை ஆன்மிகநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் 11 - 16 வயது வரையான மாணவர்கள் பங்குபற்றலாம். ஆன்மிக நிகழ்வில் விளையாட்டுக்கள், காணொலிக் காட்சிகள், ஓம் நம சிவாய மந்திர அகண்ட நாப ஜெபமும் இடம் பெறவுள்ளன.

ஆர்வமுடைய மாணவர்கள் நாளை ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னதாக இல.9 செட்டித் தெரு ஒழுங்கையில் அமைந்துள்ள சின்மயா மிஷனில் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொண்டு நிகழ்வில் பங்குபற்றலாம்- என்று அறிவிக்கப் படு கிறது.

(வ-14-10)


## கண்ணீர் அஞ்சலி



எமது திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் **கி.பரமானந்தம்** அவர்களின் அன்புத் தாயார்

**பொன்னம்மா கிருஷ்ணபிள்ளை**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கடற்றொழில் நீரியல் வளத்துறைத்திணைக்களம் மாவட்ட அலுவலகம், யாழ்ப்பாணம்

உதவிப் பணிப்பாளரும், உத்தியோகஸ்தர்களும்.

## மரண அறிவித்தல்

### திருமதி சேதுப்பிள்ளை கிருஷ்ணசாமி

(மீசாலை வடக்கு, மீசாலை)



மீசாலை வடக்கு, மீசாலையைச் சேர்ந்த திருமதி சேதுப்பிள்ளை கிருஷ்ணசாமி நேற்று (21.02.2014) வெள்ளிக்கிழமை-காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி கிருஷ்ணசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு. திருமதி வைத்தி லிங் கம் தம்பதியரின் அன்பு மகளும், பராசக்தி, கனகாம்பிகை (ஆசிரியை, மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம்) காலஞ் சென்றகன கம்மா ஆகியோரின் அன்புத் தாயும், மு. சிவசுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற மக்கள் வங்கி முகாமையாளர்), பொ. சந்திரநாதன் (தேசிய வீடமைப்பு அதிகார சபை, கிளி நொச்சி) ஆகியோரின் மாமியும், சி. சதுர்சன் (ஆசிரியர், வவுனியா அல் இக்பால் மகா வித்தியாலயம்), சதுர்சனா (இலங்கை வங்கி , சாவகச்சேரி), சி. யதுசரணன் (CDB கொழும்பு), ச. ரூபாதீசன் , லவதீசன், மதுசனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான வ. பர மசாமி, திருமதி ம. அன்னப்பிள்ளை மற்றும் வ. கணபதிப்பிள்ளை, வ. தம்பிப்பிள்ளை, வ. சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கந்தையா வள்ளிப்பிள்ளை, சி. சரவணமுத்து ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2014) சனிக் கிழமை பி.ப.1.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள் ளவும்.

வேம்பிராய் வீதி, மீசாலை வடக்கு, மீசாலை. 44985

தகவல் : குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### அல்பிரட் லியோனிஸ் பெலார்மின்

(ஜெனின் - பழைய மாணவன் யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி)



ஊர்காவற்றுறை நாரந்தனை பெரிய புலம் சந்தியை பிறப்பிடமாகவும், பிரான்ஸ் (Cergy Menu court) ஐ வசிப்பிடமாகவும் கொண்ட லியோனிஸ் பெலார்மின் (ஜெனின்) அவர்கள் (18.02.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அல்பிரட் - மணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர் களான நீதிராஜா - கமலம் தம்பதியரின் அன்புமருமகனும் ராதிகாவின் அனபுக் கணவரும் பிறீடா, பிறேடி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான அனிசறோஜா, யூஜினா மற்றும் சந்திரா (இலங்கை), யூஜின் (கனடா), அன்ரனி (யஸ்ரின் - பிரான்ஸ்), இந்திரா (பிரான்ஸ்), றொபின் (பிரான்ஸ்),ஜகி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் றோச் (இலங்கை), இம்மனுவேல் (இலங்கை), பாஸ்கரன் (இலங்கை), விஜயராணி (கனடா), சந்திரலீலா (சாந்தி - பிரான்ஸ்), குலேந்திரன் (பிரான்ஸ்), மதி (பிரான்ஸ்), பிளேவியன் (பிரான்ஸ்), கோகுலதாசன் (இலங்கை), குலேந்திரதாசன் (இலங்கை), ரவீந்திரதாசன் (இலங்கை), ஜெயந்தா, பத்மினி காலஞ்சென்ற மோகனதாஸ் மற்றும் யேசுதாசன் (றெஜி - பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிச்சடங்கு (24.02.2014) திங்கட்கிழமை பி.ப. 3.00 - 4.30 வரை பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

2 A மருதடி வீதி, யாழ்ப்பாணம்

தகவல்: பாஸ்கரன் சந்திரா (சகோதரி), பாஸ்கரன் (மைத்துனர்), தொ.பே. 077 4004784

# கார் விபத்துத் தொடர்பில் அமைச்சரின் மகன் கைது

கொழும்பு,பெப்.22

மாத்தறைப் பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தொன்று தொடர்பில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனாவின் புதல்வர் சத்துர குணவர்த்தன வியாழக்கிழமை மாத்தறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் செலுத்திச் சென்ற மோட்டார் காரில் நபரொருவர் மோதுண்டு மாத்தறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக காலி கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரான அஜித் ரோஹண தெரிவித்தார். கைது செய்யப்பட்டுள்ள அமைச்சரின் புதல்வர் மாத்தறைப் பொலிஸாரால் மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து இரண்டு லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (ச-22)



மலையகப் பகுதியில் தொடர்ந்து நிலவும் கடும் வறட்சியால் ஆற்றின் நீரோட்டம் வற்றி வருகின்றது. அதனால் ஆற்றின் நீரோட்டம் குறைந்து கற்கள் வெளித்தெரியும் வண்ணம் காணப்படுகிறது.

# போலி வேட்புமனு குறித்து விசாரணை செய்யப்படும்

## தேர்தல்கள் ஆணையாளர் கூறுகிறார்

கொழும்பு,பெப்.21

தெற்கு மற்றும் மேல் மாகாண சபைத் தேர்தலுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்பு மனுக்களில் காணப்படும் போலித் தகவல்கள் குறித்து விசா ரணை நடத்தப்படும் என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரி வித்தார்.

சில மாவட்டங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்பு மனுக்களில் உள்ள நபர்களின் பெயர், முகவரிகள் போலியானவை என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இது குறித்து ஆராய்ந்து சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய நீதிமன்றத்தில் முறையீடு செய்யப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு பிரச்சினை காணப்படும் அரசியல் கட்சிகள் அது குறித்து தனக்கு அறிவிக்க வேண்டும் என்று அவர் அறிவுறுத்தியுள்ளார்.

தேர்தலில் போட்டியிடும் அனைத்துக் கட்சிகளுக்கும் சம உரிமை வழங்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.(ச)



மஹிந்த தேசப்பிரிய

# வேட்டையாடிய இருவர் கைது

மட்டக்களப்பு,பெப்.22

அக்கரைப்பற்று, கண்ணகிபுரம் பிரதேசத்தில் பறவை வேட் டையில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து சந்தேகநபர்கள் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்படும்போது வேட்டையாடப்பட்ட இரண்டு கொக்குகள், துப்பாக்கி மற்றும் அதற்குப் பயன்படுத்தப்படும் ரவைகளும் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது இருவரும் தலா 50,000 ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (ச)

# நாட்டில் கிளர்ச்சியை ஏற்படுத்த முயற்சி

## நாமல் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு,பெப்.22

நாட்டில் மீண்டும் கிளர்ச்சியை ஏற்படுத்தச் சிலர் முயற்சித்து வருகின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

மாத்தறை,கம்புறுகமுவ பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரை கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ் வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேசத்துக்குத்தேவையான வகையில் ஜனாதிபதிசெயற்படவில்லை. அதனால் அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் இலங்கைக்கு எதிராக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றன. மீண்டும் நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்த முயற்சிக்கப்படுகிறது.

உலகில் எந்த சக்தியினாலும் தோற்கடிக்க முடியாது எனக் கூறப்பட்ட அரசுக்கு எதிரான போரை ஜனாதிபதி முடிவுக்குக் கொண்டு வந்தார். பயங்கரவாதம் இல்லாமற் செய்யப்பட்டதனால் சில நாடுகள் அதிருப்தி அடைந்துள்ளன. இந்த நாடுகள் இலங்கைக்கு எதிராகச் சதித் திட்டங்களைத் தீட்டிவருகின்றன. ஐக்கிய தேசியக் கட்சியும், ஜே.வி.பி.யும் பல்வேறு விதமாகச் சேறு பூசல்களில் ஈடுபட்டு வருகின்றன. பெரும் எண்ணிக்கையிலானவர்கள் ஆளும் கட்சியில் இணைந்து கொள்கின்றனர்-என்றார். (ச)



நாமல் ராஜபக்ஷ


## கண்ணீர் அஞ்சலி



நவபுரம் கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

திருமதி மீனாட்சி சங் கரன்

அவர்களின் பிரிவால் துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயரடைந்துள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

க. ஸ்ரீஸ்கந்தராஜா (மருமகன்)

கைதடிச் சந்தி, கைதடி.

## மரண அறிவித்தல்

### சிவசம்பு குமாரசாமி



உடையார்வளவு புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு குமாரசாமி நேற்று (21.02.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசம்பு - சின்னம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற இளையதம்பி - சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகனும் தங்கச்சிப் பிள்ளையின் பாசமிகு கணவரும் சுஜீவன், சஞ்சீவ் (லங்கா ஒறிக்ஸ் லிசிங் கம்பனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற நவரட்ணம் மற்றும் வன்னியசேகரம், தங்கப்பிள்ளை, செல்லம்மா ஆகியோரின் சகோதரனும் கதிர்காமத்தம்பி காலஞ்சென்ற அம்பலவாணர் (ராசா) மற்றும் நல்லையா (டென்மார்க்), ரவிவர்மன் (கொழும்பு), ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.02.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புன்னாலைக்கட்டுவன் விலங்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடையார்வளவு, புன்னாலைக்கட்டுவன்.

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### செல்லையா இராசரத்தினம்



(நியூ லக்கி ஹாட்வெயார் உரிமையாளர்)

அரியாலையைச் சேர்ந்த செல்லையா- இராசரத்தினம் நேற்று முன்தினம்(20.02.2014)வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் மலரின் அன்புக் கணவரும், லக்கி, சசிகுமார், ரூபன், கஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவவிஜயகுமாரின் அன்பு மாமனும், சபீசனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (21.02.2014) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலடி, அரியாலை கிழக்கு.

தகவல் : குடும்பத்தினர்.

## நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும்

### சத்குரு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் 167 ஆவது ஆராதனை விழா

காலம் : நாளை (23.02.2014) ஞாயிற்றுக்கிழமை.

இடம் : இளங்கலைஞர் மன்ற கலாமண்டபம்.



**காலை நிகழ்வுகள்**

காலை: 9.30 மணி

யாழ்ப்பாணத்தின் மூத்த, இளைய, முன்னணி வாய்ப்பாட்டு, வாத்தியக் கலைஞர்கள் இணைந்து நிகழ்த்தும் பஞ்சரத்ன ஆராதனை

முற்பகல் : 10.30 மணி

யாழ்ப்பாணத்தின் முன்னணி நாதஸ்வர தவில் கலைஞர்கள் இணைந்து நிகழ்த்தும் நாத உபாசனை.

**மாலை நிகழ்வுகள்**

4.30 மன்ற மாணவர்களின் மிருதங்க ஆற்றுகை

4.45 வாய்ப்பாட்டு - குழு இசை

வழங்குவோர்: யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழக இறுதியாண்டு மாணவிகள்.

5.30 சிறப்பு இசையரங்கம்

பாட்டு : திரு. வர்ண இராமேஸ்வரன்

வயலின் : திரு. K. குகபரன்

மிருதங்கம் : நல்லை க.கண்ணதாசன்

முகர்சிங் : திரு. N. சதீஸ்குமார்



(44974)(10.6)

கலை ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்

இளங்கலைஞர் மன்ற ஆற்றுகைத்திறன் ஊக்குவிப்புக்குழு

## உயிரை பறித்தது பஸ்

கொழும்பு, கல்கிஸை பிரதேசத்தில் வீதியோரத்தில் சென்றுகொண்டிருந்த நபர் ஒருவர் பஸ் சில்லுகளுக்குள் சிக்குண்டு நேற்றுக்காலை பரிதாபமாக உயிரிழந்துள்ளார். கிரிபத்கொடயிலிருந்து அங்குலான நோக்கிப் பயணித்த பஸ், வீதியில் பயணித்த நபரை மோதிச் சென்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
விபத்தின்போது உயிரிழந்த நபர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. அவரது சடலம் களுபோவில வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

## ஷிராணியின் பதவி நீக்கம் தவறு என்ற தீர்ப்பு ரத்து

இலங்கையின் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பதவிநீக்கப்பட்ட நாடாளுமன்றத் தீர்மானம் சட்டத்துக்கு முரணானது என்று முன்னர் வழங்கப்பட்டிருந்த தீர்ப்பை உயர்நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை ரத்து செய்துள்ளது.
குறித்த பதவிநீக்கத் தீர்மானம் நாடாளுமன்றத்துக்கு கொண்டுவரப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில், பிரதம நீதியரசரைப் பதவிநீக்குவதற்கான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு அதிகாரம் இல்லை என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது.
அதற்கான மனுவை முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.
இதன்போது, குறித்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் இறுதி விசாரணை அறிக்கைகளை ரத்துச் செய்வதற்கும் மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.
மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்புகள் மூலம் நாட்டின் அரசமைப்பு மீறப்பட்டுள்ளதாகச் சட்டமா அதிபர் தாக்கல் செய்திருந்த மனுவொன்றை உயர்நீதிமன்ற நீதியரசர்கள் ஐந்து பேரடங்கிய குழு விசாரித்தது.
அதன்படி, ஏற்கனவே மேன்முறையீட்டு நீதிமன்றம் அளித்த தீர்ப்புகளை உயர்நீதி மன்றம் ரத்துச் செய்தது.
நாடாளுமன்றத்துக்கு உத்தரவுகளைப் பிறப்பிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு எந்தவிதமான அதிகாரங்களும் இல்லை என்று உயர் நீதிமன்றம் தெரிவித்ததாக நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.
நாடாளுமன்றத்துக்கு 'ரிட்' கட்டளைகளைப் பிறப்பிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை என்று அரசு தரப்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி ராசிக் ஸரூக் தெரிவித்தார்.
முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பதவிநீக்கம் செய்யப்பட்டது சட்டத்துக்கு முரணானது என்று சர்வதேச அமைப்புகள் கூறி வந்தாலும், அந்தக் குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்று நேற்று உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு மூலம் உறுதியாகிவிட்டதாகவும் ஜனாதிபதி சட்டத்தரணி ராசிக் ஸரூக் கூறினார். (கு)

# அரசு முழுமையாக ஒதுங்கினால் ஜெனிவாவை சமாளிக்கத் தயார்

### ஐ.தே.க. நேற்றுத் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 22
"அரசால் ஜெனிவாச் சவாலை வெற்றிகொள்ள முடியாது. எனவே, ஜெனிவா போராட்டத்தை அரசு முழுமையாகக் கைவிட்டு இந்த விவகாரத்தை எம்மிடம் ஒப்படைத்தால் சர்வதேச சவால்களை வெற்றி கொள்வோம்" என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்தது.
ஐ.தே.கட்சியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ மேற்படி கருத்தை வெளியிட் டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-
ஜெனிவாவில் எதிர்நோக்கவுள்ள சர்வதேச சவால்களை அரசால் வெற்றி பெற முடியாது. ஜெனிவாவில் அரசு தோற்பது உறுதி. எனவே, ஜெனிவா போராட்டத்தை அது முழுமையாகக் கைவிட்டு எம்மிடம் பொறுப்பளிக்க வேண்டும். நாம் அந்தச் சவால்களை வெற்றிகொள்ளோம்.
இந்த அரசின் வாக்குறுதிகளை சர்வதேசம் இனியும் நம்பாது. ஐக்கிய தேசியக் கட்சியை மட்டுமே சர்வதேசம் நம்புகிறது. ஜெனிவா விவகாரத்தை நாம் கையாண்டால் சர்வதேச நாடுகள் நிச்சயமாக எம் மீது நம்பிக்கை கொள்ளும்.
ஜெனிவா விவகாரத்தை அரசு முழுமையாகக் கைவிட்டால் நாம் சர்வதேசத்துடன் பேசி பிரச்சினைகளைத் தீர்ப்போம். சர்வதேசத்துடன், மோதிக் கொண்டு நாம் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. அவர்களுடன் பேசி இணக்கப்பாட்டை ஏற்படுத்தியே பிரச்சினையைத் தீர்க்க முடியும். அது ஐக்கிய தேசியக் கட்சியால் மட்டுமே முடியும் - எனத் தெரிவித்தார். (த-சி)

# நாடாளுமன்றில் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

### போதைப்பொருள் விவகாரம் தொடர்பில் கொண்டுவந்தது ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு, பெப். 22
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி அரசுக்கு எதிராகப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தது.
ஐக்கிய தேசியக் கட்சியின் 31 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ள இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்க்கட்சிப் பிரதம கொரடாவான ஜோன் அமரதுங்க, நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் ஒப்படைத்தார்.
போதைப்பொருள் குற்றச்சாட்டுகள் தொடர்பில் அரசு உரிய நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டது என்றும் அதனால் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய சிக்கல்களைச் சுட்டிக் காட்டியுமே அரசுக்கு எதிராக இந்தப் பிரேரணை தாக்கல் செய்யப் பட்டது.
நாடாளுமன்றம் நேற்று பிற்பகல் 1.30 மணிக்கு பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு, மனுத்தாக்கல், வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று, விசேட கூற்று ஆகியன முடிவடைந்த பின்னர் காலஞ்சென்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பெஸ்டேல் பெரேராவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை மீதான உரையாடல் இடம்பெற்றது.
ஆளுந்தரப்பு பிரதம கொரடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஆகியோர் உரையாற்றிய பின்னர் ஜோன் அமரதுங்க உரையாற்றினார்.
இதன்போது, முன்னாள் அமைச்சர் பெஸ்டேல் பெரேரா போன்றோர் இருக்கையில் நாட்டில் போதைப்பொருள் கலாசாரம் இருக்கவில்லை. தற்போது நிலைமை மாறியுள்ளது. ஆசியாவின் ஹெரோயின் கேந்திர நிலையமாக இலங்கை மாறியுள்ளது. எனவே, இந்த அரசுக்கு எதிராக நாம் இந்த வேளையில் நம்பிக்கையில்லாப் பிரேரணையை சமர்ப்பிப்பதாக அறி வித்துவிட்டே அதை அவர் நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் ஒப்படைத்தார். (த-சி)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### 1 வாரத்தில்

நகைகளும் 13 ஆயிரம் இந்திய ரூபாவும் திருடப்பட்டுள்ளது. சந்தேகத்தில் கீரிமலையைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். யாழ். இராமநாதன் வீதியில் உள்ள கடை உடைக்கப்பட்டுச் சுமார் 13 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.
சங்குவேலியில் வீதியால் சைக்கிளில்சென்று கொண்டிருந்த பெண் அணிந்திருந்த ஒரு லட்சம் ரூபா பெறுமதியானச் சங்கிலியைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாதவர்களே கொள்ளையடித்துள்ளனர்.
பண்ணாகத்தில் கோயிலுக்குச் சென்று கொண்டிருந்த பெண் அணிந்திருந்த 75 ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலி இனந்தெரியாதவர்களால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.
இணுவிலில் வீதியால் சென்ற பெண் அணிந்திருந்த மூன்றரைப் பவுண் நிறையுடைய தாலிக்கொடி இனந்தெரியாத நபர்களால் அறுத்துச் செல்லப்பட்டுள்ளது. இளவாலையில் பகல் வேளை வீட்டுக் கதவை உடைத்து உள் நுழைந்த திருடர் பணம் உட்பட 6 லட்சத்து 65 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர். தெல்லிப்பழையில் 8 ஆயிரம் ரூபா பெறுமதியான சைக்கிள் திருடப்பட்டுள்ளது. சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். வடமராட்சி கிழக்கில் சட்டவிரோதமாக அரச காணியில் விறகு எடுத்த குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு 70 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் -என்றனர். (த-4)

### நவிப்பிள்ளை

விடயங்களை அடிப்படையாக கொண்டே அமெரிக்கத் தீர்மானம் அமைந்திருக்கும். ஆனால், முழுமையாக அதை அடிப்படையாகக் கொண்டதாக இருக்காது' என்று தெரிவித்துள்ளார்.
இலங்கைக்கு எதிராக எதிர்வரும் மார்ச் மாதம் தீர்மானத்தைக் கொண்டு வரப்போவதாக அமெரிக்கா ஏற்கெனவே அறிவித்துள்ளது. இந்தத் தீர்மானம் மீதான வாக்கெடுப்பு, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 25 ஆவது கூட்டத்தொடரின் இறுதிநாளான மார்ச் 28 ஆம் நாள் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (த-5)

### ஐ.நா.

என்று, பிரதமர் மன்மோகன் சிங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டனர்.
மேலும் இந்த ஐ.நா. மனித உரிமைகள் அமர்வில் இந்தியா தனித் தீர்மானம் ஒன்றை இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரவேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு வலியுறுத்தியுள்ளது.
2008 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதல் 2009 ஆம் ஆண்டு மே மாதம் வரை இலங்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பாக விசாரணை நடத்த ஐ.நாவின் கீழ் இயங்கும் சுயாதீனமான மற்றும் நம்பகத் தன்மை வாய்ந்த சர்வதேச விசாரணை அமைப்பை உருவாக்க வேண்டும் என்பதையும், இலங்கையில் தொடரும் மனித உரிமை மீறல்கள் குறிப்பாக அரசுக்கு எதிராக கருத்து தெரிவிப்பவர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் பாதிக்கப்படுவது தொடர்பாகத் தொடர்ந்து கண்காணிப்பை மேற்கொள்ள ஐக்கிய நாடுகள் சபை நடைமுறை ஒன்றை அமைக்க வேண்டும் என்பதையும், இந்தியா கொண்டு வரும் தீர்மான வரைவில் உள்ளடக்க வேண்டும் என்று தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரியுள்ளனர். (த-5)

### மன்னார்

இந்தப் பிரார்த்தனையில் அனைவரையும் இன மத பேதமின்றிக் கலந்து கொண்டு ஆத்ம சாந்தி வேண்டுமாறு மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலய திருப்பணிச் சபை கேட்டுள்ளது. (த-56)

### உடுப்பிட்டி

றுத்தல் விடுத்தாக அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
வலி. வடக்கு, பலாலியைச் சொந்த இடமாகக் கொண்ட மக்கள் கடந்த 24 வருடங்களாக உடுப்பிட்டியிலுள்ள தனியார் காணியில் நலன்புரி நிலையம் அமைத்துத் தங்கியுள்ளனர். தற்போது 14 குடும்பங்கள் அந்த நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ளன.
குறித்த குடும்பங்களுக்குக் கடந்த வாரம் மாவை கலட்டியில் அரச காணி வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டு, குறித்த காணியை அரச அதிகாரிகள் கொண்டு சென்று காண்பித்துள்ளனர். ஒவ்வொருவருக்கும் தலா 2 பரப்பு வீதம் வழங்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்திருந்த்னர்.
இந்த நிலையில் தற்போது உடுப்பிட்டியில் மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையத்திலிருந்து 14 குடும்பங்களையும் வெளியேறுமாறு அரச அதிகாரிகளும், இராணுவத்தினரும் நிர்ப்பந்தித்து வருவதாக நலன்புரி நிலைய மக்கள் குறிப்பிடுகின்றனர்.
மாவை கலட்டியில் அடையாளம் காட்டப்பட்ட காணியில் குடியேறுமாறு அரச அதிகாரிகளும், இராணுவத்தினரும் கடந்த சில தினங்களாகத் தம்மை வற்புறுத்தி வருவதாகவும் அந்த மக்கள் குறிப்பிடுகின்றனர்.
தாம் தமது சொந்த நிலங்களிலேயே குடியமர்வோம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.
இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளிடம் கேட்டபோது, குறித்த நலன்புரி நிலையத்தில் 14 குடும்பங்கள் மாத்திரம் தங்கியுள்ளன. அவர்களில் 8 பேருக்குக் காணிகள் எதுவுமில்லை. எனவே காணியில்லாதவர்களையே மாவை கலட்டியில் குடியமருமாறு கேட்டதாகவும், அத்துடன் காணி உரிமையாளர் குறித்த காணியை விடுவித்து தருமாறு அழுத்தம் தருவதால் அந்த மக்கள் இடமாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதாகவும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த-5)

### 77

னார் நீதிவானின் உத்தரவுக்கு அமைய மன்னார் பொது வைத்திய சாலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.
புதைகுழி தோண்டும் பணி இன்று சனிக்கிழமையும் இடம்பெறும். (த-56)

### 'பேஸ்புக்'

இந்த அரசுக்கு எதிராகவும் பேஸ் புக்கினூடாக பெரும் எதிர்ப்புகள் வெளியாகி வருகின்றன. இதனால் அச்சம் கொண்டுள்ள அரசு பேஸ்புக்கை முற்றாகத் தடை செய்ய முயற்சிக்கின்றது என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்தது.
மரத்தடியிலிருந்து ஒருவன் துப்பாக் கிச்சூடு நடத்தினால் மரத் தையோ அல்லது மரத்தின் கிளையையோ நாம் வெட்டுவதில்லை. சூத்திரதாரியைத் தான் கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்துவோம். ஆனால், இந்த அரசோ, மரத்தை வெட்ட முயற்சிக்கின்றது என்று சுட்டிக்காட்டினார் ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ.
கட்சித் தலைமையகமான சிறி கொத்தாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு:-
உலகில் சுமார் 200 நாடுகள் பேஸ்புக்கைப் பயன்படுத்துகின்றன. இரண்டு, மூன்று நாடுகள்தான் பேஸ்புக்கைத் தடைசெய்துள்ளன. பேஸ்புக் என்பது ஒரு சமூக வலைத்தளம். இதனூடாக இன்றைய இளைஞர்கள் மிகவும் இலகுவாக கருத்துப்பரிமாற்றங்களை மேற்கொள்கின்றன. இளைஞர்களுக்கிடையே நல்லதொரு வலையமைப்பு உருவாகி வருகின்றது.
அதுமட்டுமன்றி, அரசுக்கு எதிராக பெரும் எதிர்ப்பலையும் உருவாகி வருகின்றது. லிபியாவின் முன்னாள் ஜனாதிபதி முஹம்மர் கடாபி, எகிப்தின் முன் னாள் ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் ஆகியோருக்கு எதிராக பேஸ்புக் ஊடாகத்தான் எதிர்ப்பலை உருவானது. அதுபோலவே இந்த அரசுக்கு எதிராகவும் எதிர்ப்பலை உருவாகின்றது. இதனால் அச்சம் கொண்டுள்ள அரசு அதை தடை செய்ய அரசு முயற்சிக்கிறது.
இரண்டு மாணவிகளின் உயிரிழப்புக்கு பேஸ்புக் ஒரு காரணமாக உள்ளது. இது மிகவும் துரதிஷ்டவசமானது தான். இந்தத் தொழில் நுட்பங்களிலிருந்து எமது சமூகத்தைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆனால், அரசோ இதைக் காரணங் காட்டி பேஸ்புக்கை தடை செய்ய முயற்சிக்கின்றது - என்றார். (த-சி)

# யூனியன், மகாத்மா அணிகள் காலிறுதியில் மோதத் தகுதி



வலி.வடக்கு, பெப்.22
தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்காக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனனத்தின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டிகளில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு:-

மானிப்பாய் றெட்றேஞ்சர் விளையாட்டுக் கழகத்துக்கும் தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் முதல் பாதி ஆட்டத்தில் யூனியன் விளையாட்டுக் கழகம் 2 கோல்களைப் பெற்று முன்னிலையில் இருந்த வேளை முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் பலத்த எதிர்பார்ப்பின் மத்தியில் களமிறங்கின. யூனியன் விளையாட்டுக் கழகம் மீண்டும் ஒரு கோலைப் பெற்றுக் கொண்ட நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் யூனியன் விளையாட்டுக் கழகம் 3:0 என்ற கோல் கணக்கில் றெட்றேஞ்சர் விளையாட்டுக் கழகத்தை வென்று காலிறுதி ஆட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றது

மற்றுமொரு ஆட்டத்தில் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகமும் மாதகல் சென். தோமஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகிய நேரம் முதல் இரு அணிகளும் கோல் பெறக் கடும் முயற்சி எடுத்தன. சென்.தோமஸ் விளையாட்டுக் கழகம் தண்டனை உதை மூலம் ஒரு கோலைப் பெற்று முன்னிலையில் இருந்த வேளை முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமாகிய நேரம்முதல் இரு அணிகளும் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தின.

மகாத்மா விளையாட்டுக் கழகம் இரண்டு கோல்களைப் பெற்ற நிலையில் இரண்டாம் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் மகாத்மா விளையாட்டுக் கழகம் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதியில் விளையாடத் தகுதி பெற்றது. (த-86)



சம்பியனான சென்.மேரிஸ் அணி

## யங்ஹென்றிசை வீழ்த்தி சென்.மேரிஸ் சம்பியன்

யாழ்ப்பாணம்,பெப் .22
சுன்னாகம் சூராவத்தை நியூ வொரியஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய காந்தன் நல்லதம்பி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 5 பேர் பங்கு கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி சம்பியன் ஆனது.

கடந்த வியாழக்கிழமை நியூ வொரியஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

இதில் தொடர் ஆட்டநாயகன், அதிக கோல்களை அடித்த வீரன், சிறந்த வீரன் ஆகிய விருதுகளை நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி வீரன் யூட் பெற்றுக் கொண்டார்.

சிறந்த கோல் காப்பாளருக்கான விருதை இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியினர் கோல் காப்பாளர் வசி பெற்றுக் கொண்டார். (த-23)

## பரிசளிப்பு

யாழ்ப்பாணம், பெப்.22
மணிவதனன், ஜெய்சித்திரா சகோதரர்களின் 19 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட உள்ளக விளையாட்டுப் போட்டிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி றோமேன் குக் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மத்திய கல்லூரியின் அதிபரும், யாழ்.மாவட்ட கரம்சங்கத்தின் தலைவருமான எஸ்.கே.எழில்வேந்தனும், சிறப்பு விருந்தினராக யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவனும், முன்னாள் துடுப்பாட்டப் பயிற்றுநரான வி.கே. சண்முகலிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர். (த-23)

## மாட்டு வண்டிச் சவாரி

யாழ்ப்பாணம், பெப்.22
இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் நடத்தும் மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி நாளை ஞாயிற்றுக் கிழமை கருகம்பனை மாட்டு வண்டிச் சவாரித் திடலில் பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறவுள்ளது. (த-23)



மகாஜனாவின் 19 வயது உதைபந்தாட்ட பெண்கள் அணி

## வலிகாமம் வலய உதைபந்தாட்டம்; மகாஜன கல்லூரி மூன்றாம் இடம்

வலி.வடக்கு, பெப் 22
வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 19 வயதுப் பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் மூன்றாம் இடத்தை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பெற்றது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் இடம் பெற்ற மூன்றாம் இடத்துக்கான போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டியின் முதல் பாதி ஆட்டத்தில் ஒரு கோலை மகாஜனக் கல்லூரி போட்டது.போட்டி மிகவும் விறுவிறுப்பாக இருந்த வேளை முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் பெறவேண்டும் என்ற துடிப்புடன் களமிறங்கி மோதிக் கொண்டன. தொடர்ந்து மகாஜனக் கல்லூரி மேலும் இரண்டு கோல்களைப் போட்டு வெற்றியை உறுதி செய்தது.

போட்டி நிறைவில் மகாஜனக் கல்லூரி 3:0 என்ற கோல் கணக்கில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியை வென்று மூன்றாம் இடத்தைப் பெற்றது. (த-86)

## நல்லூர் பிரதேச செயலக போட்டிகள் இன்று காலை

யாழ்ப்பாணம், பெப்.22
நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பெண்களுக்கான எல்லே, கிரிக்கெட், வலைப் பந்தாட்டப் போட்டிகள் இன்று சனிக்கிழமை ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

அணிகளை காலை 8.30 மணிக்குச் சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை ஆண்கள், பெண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டிகள் யாழ்.ஞானம்ஸ் ஹோட்டலுக்கு அருகில் உள்ள பூப்பந்தாட்ட மைதானத்தில் காலை 8.30 மணிக்கு இடம்பெறும் என நல்லூர் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (த-7)

**போட்டியில் பங்கு பற்றும் அணிகளை காலை 8.30 மணிக்குச் சமுக மளிக்குமாறு அறிவிக் கப்பட்டுள்ளது.**

## இன்றைய ஆட்டங்கள்



வலி.வடக்கு பெப் 22
உடுவில் பிரதேச இளைஞர் சேவைகள் மன்றங்களின் ஆண்கள்.பெண்களுக்கான கயிறிழுத்தல் மற்றும் கபடிப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு சுன்னாகம் ஐயனார் கோவிலுக்கு அண்மையில் நடைபெறவுள்ளன.

போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள இளைஞர் கழகங்களை உரிய நேரத்துக்கு மைதானத்துக்கு சமுகம் தரும்படியும் நிரல் ஒழுங்கு மைதானத்தில் வைத்துத் தீர்மானிக்கப்படவுள்ளதாகவும் உடுவில் பிரதேச இளைஞர் சேவைகள் மன்ற அலுவலர் து.அனுசன் அறிவித்துள்ளார். (த-86)

★ ★ ★

வலி.வடக்கு பெப் 22
சங்கானை பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழங்கங்களின் ஆண்கள், பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன. (த-86)

★ ★ ★

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் ஆண்களுககான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8.00 மணிக்குத் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளதாகத் தெல்லிப்பழை பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் எஸ். வல்லவக்குமரன் அறிவித்துள்ளார். (த-86)

★ ★ ★

வலி.வடக்கு பெப் 22
தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்காக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனனத்தின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டிகளில் இன்று சனிக்கிழமை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள அரையிறுதி போட்டியில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகத்தை எதிர் இளவாலை யங் ஹென்றீஸ் விளையாட்டுக் கழகம் மோதும். (த-86)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப்.22
கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான 2014ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழா வின் ஓர் அங்கமான ஆண், பெண் இருபாலாருக்குமான வலைப்பந்தாட்டப் போட்டி இன்று சனிக்கிழமை அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (த-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப். 22
பருத்தித்துறை உதை பந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் அல்வாய் நண்பர்கள் வி.க. நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நக்கீரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விண்மீன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை உடுப்பு குளம் அலை ஓசை விளையாட்டுக் கழக மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் வட்டு வாகல் உதயசூரியன் விளை யாட்டுக் கழக அணியை எதிர்த்து புதுக்குடியிருப்பு ஆனந்தம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)




## ஆஸி மகளிர் வெற்றி

இலங்கை எதிர் ஆஸ்திரேலிய மகளிர் கிரிக்கட் அணிகளுக்கு இடையேயான உத்தியோகபூர்வமற்ற ஒரு நாள் கிரிக்கட் போட்டியில் ஆஸ்திரேலிய அணி 7 இலக்குகளால் வெற்றி பெற்றது. இந்தப் போட்டி நேற்று சிங்கள விளையாட்டுத் திடலில் இடம்பெற்றது. போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை மகளிர் அணி 147 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 26.3 பந்துப்பரிமாற்றங்களில் தமது வெற்றியைப் பதிவு செய்தது. (து)

## விலகினார் டோனி




இந்திய அணித் தலைவர் மகேந்திரா சிங் டோனி ஆசியா கிண்ணப் போட்டிகளில் விளையாட முடியாத நிலையில் அணியில் இருந்து விலகியுள்ளார்.
நியூசிலாந்து தொடரின் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அவருக்கு இடது மூட்டுப் பகுதியில் ஏற்பட்ட வலியே இதற்குக் காரணம். 10 நாள்கள் மருத்துவ நிகழ்ச்சித் திட்டம் மூலம் முழுமையாகக் குணம் அடைவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
எனவே ஆசிய கிண்ணப் போட்டித் தொடருக்கான அணியை விராத் கோஹ்லி தலைமை தாங்கவுள்ளார். இலக்குக் காப்பாளராக தினேஷ் கார்த்திக் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார். டோனி, உலகக் கிண்ண 20/20 போட்டித் தொடரில் விளையாட முடியும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
விராத் கோஹ்லி இதுவரை 8 போட்டிகளுக்கு மாத்திரமே தலைமை தாங்கியுள்ள நிலையில் முக்கிய போட்டித் தொடர் ஒன்றுக்கு தலைமை தாங்கவுள்ளார். (து)



## ஆசிய கிண்ணம் வெல்வது யார்?


ஆசியக் கிண்ணத்தை வெல்லப் போகும் அணியைக் கணித்துள்ளார் பாகிஸ்தான் பயிற்றுவிப்பாளர் முகமது அக்ரம். ஆசிய கிரிக்கெட் சபையின் சார்பில் இடம்பெறும் 12ஆவது ஆசிய கிண்ணத் தொடர் பங்களாதேஷில் எதிர்வரும் 25 முதல் மார்ச் 8ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. டெஸ்ட் அந்தஸ்து பெற்ற பாகிஸ்தான், இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் அணிகளுடன், முதன்முறையாக ஆப்கானிஸ்தான் பங்கேற்கிறது. நடப்புச் சம்பியன் பட்டத்தைத் தக்கவைத்துக் கொள்ள பாகிஸ்தான் தயாராகி வருகிறது.
இந்நிலையில் பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளர் முகமது அக்ரம் கூறுகையில், இம்முறை ஆசியக் கிண்ணத்தை வெல்லும் அணியை கணிப்பது கடினம். இந்த வாய்ப்பு அனைத்து அணிகளுக்கும் சம அளவில் உள்ளன.
ஆடுகளங்கள் துடுப்பாட்டத்துக்குச் சாதகமாக இருக்கும் என்பதால், அறிமுக அணியான ஆப்கானிஸ்தானை குறைத்து மதிப்பிடக் கூடாது. பாகிஸ்தான் அணியைப் பொறுத்தவரை இந்தியாவுக்கு எதிரான போட்டி முக்கியமானது. எங்கள் அணியின் பந்துவீச்சு சிறப்பாக இருப்பதால், இந்திய அணியை வீழ்த்துவோம். ஒன்றரை ஆண்டுகளில் எங்கள் அணி பந்துவீச்சாளர்கள் டெஸ்ட், ஒருநாள் போட்டி என மொத்தம் 2200 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசினர், இதில் நான்கு முறையற்ற பந்துகள் மட்டும் வீசினர்.
எங்கள் அணிக்கு எதிராக ஐந்து முறை மட்டும் எதிரணியால் 300 அல்லது அதற்கு மேல் ஓட்டங்கள் எடுக்க முடிந்தது. எங்கள் அணியின் பந்துவீச்சு வெற்றிக்கு முக்கிய பங்குவகிக்கும் என்று தெரிவித்துள்ளார். (து)

## சகீர்கான் ஓய்வு குறித்து சிந்திக்கும் நேரம் இது

தென்னாபிரிக்கா மற்றும் நியூசிலாந்து கிரிக்கெட் தொடர்களில் ஒரு வெற்றி கூட பெறாமல் மண்ணைக் கவ்வியதால் இந்திய அணியில் மாற்றத்தை கொண்டு வர வேண்டும் என்று முன்னாள் வீரர்கள் பலரும் கூறி வருகிறார்கள். குறிப்பாக டோனியிடம் இருந்து டெஸ்ட் அணித் தலைமை பறித்து விராட் கோஹ்லியிடம் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.
இந்த நிலையில் இந்திய முன்னாள் அணித் தலைவர் ராகுல் டிராவிட், மூத்த பந்து வீச்சாளரான சகீர்கான் தனது ஓய்வு குறித்து சிந்திக்க வேண்டிய நேரம் வந்து விட்டதாக அடுத்த யோசனையை முன்வைத்துள்ளார்.
கிரிக்கெட் இணையத் தளத்துக்கு ராகுல் டிராவிட் அளித்த பேட்டியில் கூறியதாவது:-
இங்கிலாந்தில் நடைபெறும் 5 டெஸ்ட் கொண்ட தொடரில் சகீர்கா னால் தாக்குப்பிடிக்க முடியுமா? முடியாது என்று தான் நினைக்கி றேன்.
இந்தக் கேள்வியை அவர் தனக்குத்தானே கேட்டுச் சுயபரிசோதனை செய்து கொள்ள வேண்டும். இப்ப டியே கடைசி வரை போராடிக் கொண்டிருப்பதை அவர் விரும்ப வில்லை.
இது உண்மையிலேயே கடினமா கத்தான் இருக்கும். தென்னாபிரிக்கா மற்றும் நியூசிலாந்து தொடர்களில் அவர் மீண்டும் மீண்டும் தடுமாறியதைப் பார்த்தோம். எனவே தனது எதிர்கால நிலை (ஓய்வு) குறித்து அவர் இப்போது சிந்திக்க வேண்டியது அவசியம். தேர்வுக் குழுவினரும் இது பற்றி பரிசீலிக்க வேண்டும்.
கபில்தேவுக்கு பிறகு இந்தியாவின் மிகச்சிறந்த வேகப்பந்து வீச்சாளராக விவாதிக்கப்படுபவர் சகீர்கான் தான். அவர் சர்வதேச கிரிக்கெட்டை விட்டு விலகுவதற்கு முன்பாக, பலவீனமாக மணிக்கு 120 முதல் 125 கிலோ மீற்றர் என்று குறைந்த வேகத்தில் பந்து வீசுவதைப் பார்ப்பதில் நான் வெறுக்கிறேன்.
கடைசி இரு தொடருக்கு உடல்தகுதி பெறுவதற்காக அவர் மேற்கொண்ட முயற்சிகள் பாராட்டுக்குரியவை. நேர்மையாகச் சொல்ல வேண்டும் என்றால், இந்தத் தொடர்களில் அவரது பந்து வீச்சு அவ்வப்போது நன்றாக இருந்தது. சுழற்பந்து வீச்சாளர்கள் விடயத்தில் நாம் கொஞ்சம் பொறுமைகாக்க வேண்டியது அவசியம் -என்றார். (து)



## அணியை விற்கமாட்டேன்



ஐ.பி.எல். அணியான கொல்கத்தா நைரைடர்ஸ் அணியின் உரிமையாளர் இந்தி நடிகர் ஷாருக்கான். இவர் தனது அணியை விற்க போவதாகத் தகவல் வெளியானது. இதை அவர் திட்டவட்டமாக மறுத் துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது:
கொல்கத்தா அணியை நாங்கள் விற்கவே மாட்டோம். விளையாட்டில் ஏற்றம், இறக்கம் வரத்தான் செய்யும். அணி வீரர்கள் எங்களுடைய குழந்தைகள் மாதிரி. நாங்கள் ஜெயித்தால் மிகுந்த மகிழ்ச்சி அடைவோம் என்றார். (து)

# ஹர்பஜன், ஓஜாவை மீண்டும் அழையுங்கள்



இந்திய கிரிக்கெட் அணி வெளிநாட்டில் தொடர்ந்து தடுமாறி வருகிறது. ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து தொடர்களில் தோல்வி அடைந்து ஏமாற்றம் அளித்தது.

இதனால் அணித் தலைவர் டோனி கடும் விமர்சனத்துக்குள்ளாகி இருக்கிறார். அவரை டெஸ்ட் அணித் தலைவர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று முன்னாள் வீரர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக முன்னாள் தலைவர் சவுரவ் கங்குலி கூறியதாவது:-

இந்திய கிரிக்கெட் அணியில் வெளிநாட்டு தோல்விக்கு வேகப்பந்து வீச்சாளர்கள் காரணம் என்று நான் நினைக்கவில்லை. நமது சுழற்பந்து வீச்சு பலவீனமாக உள்ளது. இதுபற்றி டோனி சிந்திக்கவில்லை. ரவீந்திர ஜடேஜாவிடம் ஒவ்வொரு பந்துக்கும் வேறுபாடுகள் இல்லை. ஹர்பஜனை மீண்டும் அணிக்குத் திரும்ப அழைப்பது அவசியம். அவரையும், ஓஜாவையும் டெஸ்ட் அணியில் சேர்க்க வேண்டும்.

டோனி வெற்றிக்காகத் துணிச்சலான முடிவை எடுக்க வேண்டும். வரவிருக்கும் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து டெஸ்ட் தொடருக்கு டோனியைத் தலைவராக நியமிக்கலாம். அதில் ஒருவேளை தோற்றால் அவரை மாற்றி புதிய ஒருவரைக் கொண்டு வரலாம்.

ஒருநாள் போட்டிக்குத் தலைமைப்பதவிக்கு டோனி மிக பொருத்தமானவர். அதில் எந்த ஐயப்பாடும் இல்லை. எதிர்காலத்தில் விராட் கோஹ்லி அணித் தலைவர் பதவிக்கு தகுதியானவர்.

(த-400)

# ஆட்ட நிர்ணய மோசடிக்கு ஒப்புக்கொண்டாரா டோனி ?



ஐ.பி.எல். போட்டிகளில் ஆட்ட நிர்ணய மோசடிக்கு சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் மஹேந்திர சிங் டோனி ஒப்புக்கொண்டார் என குருநாத் மெய்யப்பன் கூறுவதாகச் சொல்லப்படும் தொலைபேசி உரையாடல்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. இது தொடர்பாக இந்திய தனியார் தொலைக்காட்சி ஒன்று கடந்த வியாழக்கிழமை செய்தி வெளியிட்டுள்ளது. ஐ.பி.எல். போட்டிகளில் ஆட்ட நிர்ணய மோசடி நடைபெற்றது தொடர்பாக மும்பை குற்றப்பிரிவு பொலிஸாரின் அறிக்கையில், சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் முன்னாள் நிர்வாகி குருநாத் மெய்யப்பன், சூதாட்ட புக்கி விண்டு மற்றும் பவண் ஆகியோரிடையேயான தொலைபேசி உரையாடல்கள் எழுத்து வடிவில் கொடுக்கப்பட்டுள்ளன.


அதில், குருநாத் மெய்யப்பனும், விண்டுவும் கடந்த 2013 மே 12, 15 உள்ளிட்ட திகதிகளில் பேசிக் கொள்வது பதிவாகியுள்ளது. அதில் போட்டி நடக்கும் விவரங்கள், டோனி, ரெய்னாவை குருநாத் மெய்யப்பன் அணுகியது, ஆட்ட நிர்ணய மோசடி செய்ய டோனி ஒப்புக் கொண்டதாக குருநாத் கூறுவது உள்ளிட்டவை பதிவாகியுள்ளதாகக் கூறப்ப டுகிறது.

ரெய்னா விளையாடுவதும், பிடி எடுத்து ஆட்டமிழப்பதும் விவாதிக்கப்படுகின்றன.

இதில், விக்ரம் என்பவரின் பெயரும் மேலும் சில கிரிக்கெட் வீரர்களின் பெயர்களும் குறிப்பிடப்படுகின்றன. குருநாத் மெய்யப்பன், இல்லை நாம் கண்டிப்பாக வெற்றி பெறுவோம் எனக் கூறுவதும், சில விடயங்களை காசு கணக்குகளில் கூறுவதும் பதிவாகியுள்ளது.

இந்தச் சூதாட்டத்தில் ஐ.பி.எல். முக்கிய நிர்வாகிகளுக்கும் தொடர்பிருப்பதாகக் கூறப்படுகிறது. (த)

# பெடரர் சாதிப்பார்



முன்னாள் முதல்தர ரென்னிஸ் வீரர் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் இதுவரை 17 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை கைப்பற்றி இருக்கிறார். ரென்னிஸ் வரலாற்றில் அதிக கிராண்ட்ஸ் லாம் பட்டம் வென்ற சாதனையாளர் இவர் தான். 32 வயதான பெடரர் தற்போது தர வரிசையில் 8 ஆவது இடம் வகிக்கிறார்.

2012ஆம் ஆண்டு விம்பிள்டனுக்கு பிறகு அவர் எந்த கிராண்ட்ஸ்லாம் பட்டத்தையும் வெல்லவில்லை. இதனால் டென்னிஸ் உலகில் அவரது ஆதிக்கம் முடிவை நோக்கி சென்று கொண்டிருப்பதாக விமர்சிக்கிறார்கள். இந்த நிலையில் அவரால் இன்னும் சாதிக்க முடியும் என்று முன்னாள் முதல் நிலை வீரரான ஜாம்பவான் அமெரிக்காவின் பீட் சாம்ப்ராஸ் கூறியுள்ளார்.

லண்டனில் பேட்டி அளித்த அவர், அதே உற்சாகம் மற்றும் உடல்தகுதியுடன் இருக்கிற வரை மேலும் 2 ஆண்டு முதல் 4 ஆண்டுகள் வரை பெடரரை களத்தில் பார்க்க முடியும். ரென்னிசில் எல்லா சாதனைகளையும் அவர் படைத்து விட்டார்.

ஆனாலும் அவர் இன்னும் ஒவ்வொரு நாடுகளுக்காகப் பயணித்து விளையாட ஆர்வமாக இருப்பதை பார்க்கும் போது, எனக்கு மிகவும் ஆச்சரியமாக உள்ளது. ஏனெனில் நான் 30 அல்லது 31 வயதை எட்டிய போது தளர்ந்து போய் விட்டேன்.

ரென்னிஸ் விளையாட்டை உண்மையாக நேசிப்பவர், பெடரர். முழு திறமையை வெளிக்காட்டி விளையாடினால் அவரால் மேலும் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை ருசிக்க முடியும். அவருக்கு பிடித்தமான ஆடுகளமான விம்பிள்டனில் பட்டம் வெல்ல வாய்ப்புள்ளது - என்றார். (த-400)

# சங்கா, டில்சான் நீக்கம்



பங்களாதேஷ் அணிக்கெதிரான மூன்றாவதும் இறுதியுமான ஒரு நாள் போட்டியில் டில்சான் மற்றும் குமார் சங்கக்கார ஆகியோர் நீக்கப்பட்டுள்ளதாக இலங்கைக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

பங்களாதேஷ் அணிக்கெதிரான இரண்டாவது போட்டியின் போது ஏற்பட்ட காயம் காரணமாக டில்சான் நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக திரிமன்னே இணைக்கப்பட்டுள்ளதாகவும் காயமடைந்த டில்சான் நேற்று நாடு திரும்பியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த போட்டிகளில் சிறப்பாகச் செயற்பட்டு வந்த நட்சத்திர துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்காரவுக்கு மூன்றாவது போட்டியில் ஓய்வளிக்கப்பட்டுள்ளது.



எதிர்வரும் 25 ஆம்திகதி பங்களாதேஷில் ஆரம்பமாகவுள்ள ஆசியக் கிண்ணப் போட்டிகளில் மஹேல ஜெயவர்த்தன மற்றும் சத்துரங்க டி சில்வா ஆகியோர் இணைக்கப்பட்டுள் ளதாகவும் கிரிக்கெட் சபை மேலும் அறிவித்துள்ளது.

(த)

# தூதுவர் ஆனார் புஜாரா



இந்திய கிரிக்கெட் வீரர் புஜாரா குஜராத் மாநிலம் ராஜ்கோட்டையை சேர்ந்தவர். அவர் குஜராத் மாநில தேர்தல் ஆணையத்தின் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். புஜாராவை தூதராக நியமிக்க ராஜ்கோட் மாவட்ட ஆட்சியாளர் ராஜேந்திர குமார் இந்தியத் தேர்தல் ஆணையத்துக்கு பரிந்துரை செய்தார். அது ஏற்று கொள்ளப்பட்டது.

இது தொடர்பாக ராஜேந்திரகுமார் கூறுகையில், புஜாரா மிக பிரபலமான வீரர். மாநிலத்தின் இளைஞர்களுக்கான அடையாளம். மக்கள் கண்டிப்பாக வாக்கு அளிக்க அவர் வலியுறுத்துவார் என்றார். மக்களிடம் வாக்கு அளிக்க விழிப்புணர்வை ஏற்படுத்த இருப்பது தனக்கு மகிழ்ச்சி அளிப்பதாக புஜாரா கூறி உள்ளார். (400)

# மெய்யப்பன் குற்றவாளி

ஐ.பி.எல் 6ஆவது போட்டியின் போது, சென்னை சூப்பர் கிங்ஸ் அணி பற்றிய விபரங்களைக் குருநாத் மெய்யப்பன் தரகர்களுக்கு வழங்கியுள்ளது தற்போது தெரியவந்துள்ளது.

ஐ.பி.எல் 6ஆவது போட்டியின் போது, சூதாட்டத்தில் ஈடுபட்டதாகச் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் உரிமையாளர் என். குரு நாத் மெய்யப்பன் கைது செய்யப்பட்டுபிணையில் வெளியே வந்தார்.



இந்நிலையில் ஐ.பி.எல் சூதாட்டம் குறித்து விசாரணை நடந்து வருகிறது

விசாரணையில் மெய்யப்பன் அணி குறித்த தகவல்களை சூதாட்ட தரகர்களுக்கு தெரிவித்தது தெரிய வந்துள்ளது. அவர் நடிகர் விண்டு தாரா சிங் மூலம் பெரிய தொகையைப் பந்தயம் கட்டியுள்ளார்.

மெய்யப்பன் கைத்தொலைபேசி மற்றும் ஐபாட் ஆகியவற்றைப் பயன்படுத்தி விண்டுவை தொடர்பு கொண்டுள்ளார், அவர்கள் பேசிய விவரம் விசாரணை குழுவிடம் உள்ளது.

மெய்யப்பன் ஐ.பி.எல் 6ஆவது போட்டியின் போது சென்னை சுப்பர் கிங்ஸ் அணி மற்றும் ராஜஸ்தான் றோயல்ஸ், ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் உள்ளிட்ட அணிகள் விளையாடிய போட்டிகளின் போது பெரும் தொகையை பந்தயம் கட்டியுள்ளார், அவர் விண்டு மூலமாக தான் பந்தயம் கட்டியுள்ளார். விண்டுவுடன் சேர்ந்து மெய்யப் பன் போட்டி முடிவுகளைக் கணித்துள்ளார்.

அதே நாளில் சென்னை சுப்பர் கிங்ஸ் மற்றும் ராஜஸ்தான் ரோயல்ஸ் போட்டி குறித்த தகவலையும் மெய்யப்பன் விண்டுவிடம் தெரிவித்துள்ளார். சென்னை அணி 130 முதல் 140 ஓட்டங்கள் எடுக்கும் என்றும் தெரிவித்துள்ளார். மேலும் மே 14ஆம் திகதி போட்டியின் போது சென்னை அணியில் யார் யார் எந்தெந்த வரிசையில் விளையாட வருவார்கள் என்ற விவரத்தையும் அளித்துள்ளார். (த-400)

## பிரெஞ் மொழியை பிரெஞ் முறையில் கற்றுக்கொள்ளுங்கள்



பிரெஞ்சு மொழி கற்பிப்பதற்கு **French** அரசாங்கம் மற்றும் **French Embassy** ஆகியன அங்கிகரிக்கும் வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு சர்வதேச நிறுவனம் (**Only Official Centre**) **Alliance Française de Jaffna (AF)** மட்டுமே. திருமணம் மூலம் **France** செல்பவர்களுக்கும் **France** இல் **French** படிப்பதற்கு /தொழில் புரிவதற்கும் எமது **Certificates** மட்டுமே **Embassy** இல் அங்கிகரிக்கப்படுகிறன.

புதிய வகுப்புகள் விரைவில்... 021 222 8093

வடமாகாணத்தில் ஒரே முகவரி 61,Kachcheri-Nallur Road,Jaffna

(கச்சேரியை அடுத்துள்ள சந்தியில் /Racca வீதியில் British Council அருகில்)

## கார் விற்பனைக்கு

டாக்டர் ஒருவரின் பாவனையிலுள்ள HONDA BRAND NEW MODEL கார் விற்பனைக்குண்டு. 301-XXXX

தொடர்பு:- 0770771981

## மணல் விற்பனைக்கு

குறைந்த விலையில் யாழ், வன்னி போன்ற பிரதேசங்களுக்கு மணல் விநியோகம் செய்துதரப்படும்.

3 கியூப் 18,500/- (4 டிரக்டர் பெட்டி)



0774169026

## இத்தால் சகலருக்கும் அறியத்தருவது யாதெனில்

மேற்படி திருநெல்வேலி
ஸ்ரீ நீலாயதாக்ஷி ஸமேத
ஸ்ரீ காயரோஹண ஸ்வாமி தேவஸ்தானத்திற்கு
(திருநெல்வேலி சிவன்கோயில்)

சொந்தமான காணிகளில் தேவஸ்தான அனுமதியின்றி குடியிருப்பவர்கள் எவருக்கும் அக்காணிகளை விற்பதற்கோ, கைமாற்றம் செய்வதற்கோ தேவஸ்தானம் அனுமதியளிக்கவில்லை என்பதனை அறியத் தருகின்றோம். இதனை மீறி செயற்படுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலை உருவாகும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

திருநெல்வேலி ஸ்ரீ நீலாயதாக்ஷி (44896) (45.6)
ஸமேத ஸ்ரீ காயரோஹண ஸ்வாமி தேவஸ்தானம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.02.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.